# மாம்பழத்து வண்டு

காஞ்சனா ஜெயதிலக

## உள்ளே...


ந்து வண்டு 5

லாமல் நானில்லை 172


# வண்டு



1

விரிந்து படர்ந்த பல மரங்களுடன் இருந்தது அந்தக் கல்லூரி வளாகம். அங்கு படிக்கும் அழகிய இளம் பெண்கள் வெயில் பட்டு வாடி விடக் கூடாதே என்ற கரிசனையுடன் பெரும் பச்சைக் குடைகளாய் விம்மி நின்றன வயதான மரங்கள். கிளுகிளு சிரிப்புடனும் பூப் பாதங்களுடனும் நடந்து போகும் மாணவிகளைக் கண்ட உவகையில் அவை தங்களது பூக்களை வேறு ஒன்றிரண் டாய் சொரிந்து வாழ்த்தின.

மாலை ஆறரையிலிருந்து ஒரு மணி நேரத்திற்கு அங்கிருந்த மாணவ விடுதி மௌனமாகி விடும்.

'அமைதி நேரம்' என்று அறிவித்து விட்டால், தங்களின் இருநூறு மாணவிகளும் படிப்பதைத் தவிர வேறேதும் செய்ய முடியாது என்ற நம்பிக்கை நிர்வாகத்திற்கு! பாதி மாணவிகள் அந்நேரத்தைத் தூங்குவதற்குப் பயன்படுத் திக் கொள்ள, மீதி சுட்டிகள் கண்களாலும், கிசுகிசுப்பாய்

பேசியும் குஷிப்பட்டனர்! சமையலறையிலிருந்து சுடு நீரை சட்டெடுத்து வந்து, ரெண்டே நிமிஷத்தில் நூடில்ஸை தயார் செய்து பரிமாறி, பசியாறுபவர்களும் உண்டு.

சென்னையின் மிக பிரபலமான அக்கல்லூரியில், இந்தியாவின் சகல பகுதிகளிலிருந்து வந்த விதவிதமான மாணவிகள் - அத்தனை பேருக்கும் குறும்பும் கும்மாள மும் மட்டும் பொது!

ஆகக் கல்லூரியின் விடுதியில் கலகலப்பிற்குக் குறைவிருக்காது -

''யேய் பவி, சைனா பிரியாணி ரெடியா? எனக்கு ரெண்டே வாய்'' ரகசிய வேண்டலுடன் மூன்றாம் மாடி யின் கடைசி அறைக்குள் தலை நீட்டினாள் ஒருத்தி.

''நான் நூடில்ஸ் செய்றது எப்படித்தான் தெரியுமோ... உன் ரூம் வரை வாசனை வந்திருச்சா?'' அலட்டலாய் அலுத்தாள் பவித்ரா.

''ஒரு மாதிரியான ஸ்மெல் வந்துச்சு..'' மூக்கைச் சுருக்கிய விருந்தாளி,

''ஒரு மாசமாய் வகை தொகையாய் வீட்டில ருசி கண்ட நாக்கு இந்த ஹாஸ்டல் சாப்பாட்டுல செத்திருச்சுப்பா - உன் நூடில்ஸ் கூட தேவலைங்கற அளவுக்கு'' - விளக்கினாள்.

அடுத்ததாய் கவிதாவின் தலையும் எட்டிப் பார்த்து, நுழைந்தது.

''ஆமாப்பா - மதியம் முள்ளங்கி சாம்பாரின் நாத்தம் சகிக்கலை. ஆக வெறும் மோர் சாதந்தான். டீ டைம்ல ரெண்டு கைப்பிடி அவிச்ச வேர்க்கடலை தந்தாங்களா? தோலோடுதான் மென்னேன் - ஆனா முழுங்க முடியலை. ரொம்பப் பசிக்குதுப்பா.''



''மீன் தொக்கு கொண்டு வந்தியா? நூடில்ஸுக்கு அதுதான் சரியான ஈடு.''

''இதோ.''

''ஏது உன் ரூம் மேட் 'ஹிஹி'யைக் காணோம்?''

கவிதாவின் முகம் சற்று சுணங்கியது.

''அவளுக்குப் பசிக்கலை'' - என்றாள்.

''நம்ப 'ஹிஹி' நவ்யாக்கு என்னாச்சு? நமக்கு இந்த ஒரு மணி நேர மௌனமே தாளலை - அவ சர்வ மௌன சாமியாரிணி ஆயிட்டா போல? அந்த ஸ்பெஷல் மணிச் சிரிப்புக்காக கூட வாய் திறக்க மாட்டேங்கறா?''

''ஐயோ... யாரோ வர்றாங்களோ?'' மூவரும் பம்ம, காலடி சத்தம் இவர்களது அறை வரை வரவில்லை.

பொதுவாகவே மாணவிகள் அவரவர் அறைகளில்தான் இருக்க வேண்டும். இப்படி அறை விட்டு அறை பாய்ந் ததும் அல்லாமல், விருந்தோம்பலில் திளைப்பது எல் லாம் தண்டனைக்குரிய குற்றங்கள்!

அடிக்கடி கிடைக்கும், மாணவிகளை அலற வைக்கும் தண்டனை - விடுதியின் பொதுத் தாழ்வாரங்களைப் பெருக்கித் துடைப்பதுதான்! வளமான வீடுகளில் பிறந்து வசதியாய் வளர்ந்த மாணவிகள் இதில் முதுகொடிந்து புலம்புவார்கள் -

ஆனாலும் அவர்களின் சட்டைக்கார வார்டன் ஸ்பஷ்ட மான தமிழில் உத்திரவிடுவார்.

'ஒரு வாரத்திற்குத் தாழ்வாரங்களைப் பெருக்கித் துடையம்மா' என்று. ஆனால் இத்தகைய கெடுபிடிகள் தான் விடுதி வாழ்க்கையைச் சுவையாக்கின. மீறல்களை, தண்டனைகளை நினைத்து நினைத்துச் சிரித்துப் புரண் டார்கள்.

'அமைதி நேரம்' முடிந்ததற்கான மணி ஓசை கேட்டதும், கழுவ வேண்டிய பாத்திரத்துடன் கிளம்பினாள் பவித்ரா.

''நல்லவேளை நவ்யா வரலை - அந்தக் காலடி சத்தம் கேட்டதுமே பயமும் பதட்டமுமாய் 'ஹிஹி'ன்னு ஒரு சிரிப்பு சிரிச்சாள்னா...''

''நாம எல்லாரும் பிடிபட்டு ஒரு மாசத்துக்குத் தாழ்வாரத்தைத் தவழ்ந்து துடைச்சிருப்போம் - அவ்வளவுதான்!''

''பாவம்ப்பா - என்னாச்சு நவிக்கு - பேசக்கூட மாட்டேங்கறா?''

''இசகு பிசகான சிரிப்புன்னாலும் மணியடிச்சது போல இனிமையாத்தான் சிரிப்பா - அன்னைக்கு கேக் ஐஸிங் தடவ கற்றுத் தந்த வகுப்பில்...''

''ஆமப்பா - அவ்வளவு கஷ்டப்பட்டு நாம நுரைக்க அடிச்சு தயாரிச்ச ஐஸிங், தரையில் கொட்டினதும் - நாம திகைச்சு நிற்க, நவி ஒரு சிரிப்பு சிரிச்சா பாரு...''

''அவதான் இப்ப இல்லையே - பிறகேன் நவியையே பற்றி பேசணும்?''

நவ்யாவின் அறைத்தோழி கவிதா சிடுசிடுக்க, மற்ற இருவரும் அவளைச் சமாதானப்படுத்தினர்.

''கூல்யா... சிநேகமான கேலிதான? படிப்பின் கடைசி செமஸ்டரில் இருக்கோம். இன்னும் மூணே மாசத்தில் மூட்டை கட்டிட்டு வீடு போய்ச் சேர வேண்டியதுதான்.''

''திருட்டு மாங்காய் தித்திக்கும் என்பதுபோல நாம இப்ப ஒளிச்சு சாப்பிட்ட நூடில்ஸின் ருசி - இனி வாய்க்



நிர்வாகத் துறையில் இளங்கலை படிப்பை முடித்த அப்பெண்கள், அதேக் கல்லூரியில் புதிதாய் ஆரம்பிக்கப்பட்ட வீட்டு பராமரிப்பு, அலங்காரம், சமையல், என்ற ஒரு வருட கோர்ஸையும் பாதிக்கு மேல் முடித்திருந்தார்கள்.

எல்லோருமே பெரிய இடத்துப் பெண்கள் - நவ்யாவைத் தவிர. ஆனாலும் நவ்யாவின் தாயான நளினிக்கு பணக்கார பெண்ணாய் வாழ்வதில்தான் விருப்பம்.

'ஆண்கள் போதுமான அளவிற்கு சம்பாதிக்க, அதைக் கொண்டு குடும்பத்தை அழகாய் நடத்த வேண்டியது ஒரு மனைவியின் வேலை. முதலில் தன் தேவைக்கு சம்பாதிக்கும் புருஷனைக் கண்டு பிடிக்கணும் - அது முக்கியம்' என்னும் நளினா, தன் மகளை அப்படி ஒரு சாமர்த்திய, சாதுர்ய மனைவியாய் தயார்ப் படுத்தவே இந்த படிப்பில் சேர்த்து விட்டிருந்தாள்.

''என்னைத் தனியாய் நிற்க வச்சு வித விதமாய் போட்டோஸ் எடுத்தாங்க எங்க வீட்டில் - அதுக்கான அர்த்தம் என்ன தெரியமா?''

''இப்பதான்ப்பா பவி நீ கொஞ்சம் சுமாரா இருக்கே?''

''முட்டாள். எனக்கு மாப்பிள்ளைத் தேட ஆரம்பிச்சிருக்காங்க. இனி இப்படி சைனா பிரியாணி எல்லாம் கிடையாது - நிஜ சமையல், நிஜ பிரியாணி'' - பவித்ராவின் கண்கள் கலக்கமாய் விழித்தன.

''இப்பவே அதையெல்லாம் நினைக்காதே - அப்புறம் பேஸ்தடிச்சு மீதி நாலு மாசத்தை முழியோடு கழிக்கணும்... ஒரு வேளை நவ்யா வீட்ல அவளுக்கு மாப்பிள்ளை பார்க்கறாங்களோ?''

''அவகிட்டயே கேட்கறேன்.'' என்ற கவிதா அன்றிரவு சாப்பிட்டு படுத்ததும், நவ்யாவிடம் கேட்டே விட்டாள்.

விடிவிளக்கின் மங்கலான வெளிச்சம் அவர்கள் பேச வசதி பண்ணிக் கொடுத்திருந்தது.

“மூணரை வருஷங்களாய் நாம சிநேகிதிகள் நவி. அந்த உரிமையிலதான் கேட்கறேன். என்னாச்சு? டிஸம்பர் லீவின்போது நீ எனக்கு போன் போட்டு பேசலை. உன் செல் போனை சார்ஜே பண்ணலைனுட்டே... சரி இங்க வந்ததும், அத்தனை கதையும் பேசித் தீர்க்கலாம்னா இப்படி ஆளே மாறிட்ட. ஏதோ நடந்திருக்குது - மனசுக்குள்ளே போட்டு அடைக்காதே - கம் அவுட்.”

தன் விரல்களை ஆராய்ந்தபடி படுத்திருந்த நவ்யா மெள்ள கனைத்துக் கொண்டாள். மிருதுவான வெளிச்சம் கூட தாங்காது என்பது போல விழி மூடியவள், கிசுகிசுப்பாள் சொன்னாள் -

“நான் தப்பு பண்ணிட்டேன் கவி...”

“நீயா - என்னதது தப்பு?” நவ்யாவின் வெகுளித்தனத்தை, வெள்ளை மனதை கடந்த வருடங்களில் புரிந்து கொண்டிருந்த கவிதா, சற்று அலட்சியமாகவேக் கேட்டாள். அதிலும் நவ்யாவின் அழகிய தெற்றுப்பல் சிரிப்பு அவள் தப்பே செய்திருந்தாலும் கூட பிறரை அதை பெரிது படுத்த விடாதே!

“இல்லை - அதைக் குற்றம்னு சொல்லணும். பெரிய குற்றம்.”

“கமான் நவ்யா. ஏதோ கொலை செய்துட்டது போல பில்ட் - அப் எல்லாம் வேண்டாம்.”

சிநேகிதிக்கு முதுகைக் காட்டியபடி திரும்பிப் படுத்த நவ்யாவின் தோள்கள் குலுங்கின... முதலில் சன்னமாய் ஆரம்பித்து பின் வேதனையாய்.

“வேணாம் நவி... என்னாச்சுப்பா?”



எழுந்து தோழியின் தோள்களைப் பற்றினாள் கவிதா.

“அதேதான் கவி. நான் ஒருத்தியைக் கொன்னுட்டேன்.”

இறுக மூடிய மதகுகள், திறக்கப்பட்டதும் பீய்ச்சியடிக்கும் வெள்ளம் போல, அதுவரை உள்ளேயே பெருகி உறுத்தியதை, ஒரு மாதத்திற்கு முன்பு, விடுமுறையின் சமயம் நடந்த அந்த சம்பவத்தை மனதுள் ஓட விட்டாள் நவ்யா...



2

“அப்பா ப்ளீஸ், இன்னைக்காவது பிக்னிக் போகணும்ப்பா” - நவ்யா தன் அப்பாவின் கை பிடித்துக் கெஞ்சினாள்.

“கொடைக்கானலில் இப்ப டிஸம்பரிலும் கூட டூரிஸ்ட்ஸ் ஜாஸ்திம்மா - ஆக கடையை விட்டுட்டு நா வர முடியாது - வேன் ஏற்பாடு பண்ணித் தரேன். தோதான ஒரு ‘ஸெட்’ போயிட்டு வாங்க.”

“தாங்க்ஸ்ப்பா...” தன் கையை விடாமல் குதித்த தன் மூத்த பெண்ணை கண் நிறைய பார்த்தார் பெற்றவர்.

வெடவெடப்பான உயரமும், திருத்தமான முகத்தில் கவர்ச்சியைக் கூட்ட என்றே சேர்க்கப்பட்டது போன்ற தெற்றுப் பல் சிரிப்புமாய் - புருவம் சுருக்கி யோசித்தார் பாண்டியநாதன் -

“இப்ப சினிமால நடிக்கும் ஒரு பொண்ணு அப்படியே உன் சாயல் நவி... அவ பேர் என்னவோ...”

“யாருப்பா? நயன்தாரா - அஸின்?”

“அஸினாம் - ஆசை ஸின்!” - பழித்தாள் தங்கை காவ்யா.

“ஆங்... ஞாபகம் வந்திருச்சு. நந்திதா தாஸ்.”

''ஹைய்யோ - நிஜமாவாப்பா? அழகின்ற படத்துல அழகியாய் வந்த நடிகைப்பா.''

தன் இரண்டு பெண்களில் மூத்தவள் விழி விரிய சந்தோஷித்ததைக் கண்ட தாய் நளினி குறுக்கிட்டாள்.

''இப்படி உங்கப்பா உளர்றதை எல்லாம் நம்பிடாத நீ, நவ்யா. நீ கொஞ்சம் அதிக வளர்த்தி - நிறமும் அதிகமில்லை. அடிக்கடி அசடாட்டம் சிரிக்க வேற செய்யறப்ப தெரியற அந்த தெற்றுப்பல் கொஞ்சம் பளிச்சுனு தோணும் - அவ்வளவுதான். என்னையும் இப்படி ஏதேதோ சொல்லித்தான உங்கப்பா ஏமாத்தினார்.''

சிறிது வேடிக்கை, துளி வெட்கத்தோடு இதையே இரு பெண்களின் தாயான நளினி, தன் கணவனைப் பற்றிய புகார் செய்திருந்தால் குடும்பம் சிரித்து சீண்டியிருக்கும். ஆனால் கடுப்பும் கசப்புமாய் வந்த வார்த்தைகளில் பாண்டியநாதனின் முகம் வாடியது.

ஏதும் பேசாமல் மௌனமாய் குனிந்து கொண்டார் - சில சமயம்,

'உன் ஒவ்வொரு நிமிட கோபமும், வீணடிக்கிறது.

உன் அறுபது நிமிட ஆனந்தத்தை' என்று தத்துவமாய், தமாஷாய், பேசி மனைவியின் எரிச்சலை தணிக்க முயலுபவர் அன்று அதைச் செய்யவில்லை.

அப்பாவிற்காய் மகளும்,

'ஏம்மா - அப்பாவுக்கென்ன குறை? அவர் கிடைக்க நாம கொடுத்து வச்சிருக்க வேண்டாம்?'' என்று விட முடியாது.

நளினாவின் கோபம் மேலும் எகிறி விடும்.

அவளைப் பொறுத்தவரை தன் தகுதி, அழகிற்கு ஏற்ற கணவனும், வாழ்வும் அமையவில்லை - அவ்வளவுதான்.



நளினிக்குப் பத்து வயதாய் இருக்கும்போது, காட்டிலாகா அதிகாரியாயிருந்த அவள் தந்தைக்குக் கொடைக்கானலுக்கு மாற்றலானது. குளுமையும் பசுமையான அந்த சின்ன ஊர் அவர்களை மயக்கியது. அங்கிருந்த சர்வதேச பள்ளியின் தரத்தில், அங்கு பயின்ற மாணவர்களின் மிடுக்கில் பிரமித்த அவர் தன் ஒரே மகளை அங்கு படிக்க வைக்க விரும்பினார்.

'பெரிய செலவுதான் - ஆனா நளினி எனக்கு ஒரே வாரிசு. அவ படிப்புக்குச் செலவழிக்காமல் இந்த பணத்தை சேர்த்து வைத்து என்ன செய்ய? நூறு பவுன் நகை சேர்த்து இவளை ஒருத்தனுக்குக் கட்டி வைத்தாலும் இந்த பவுசு வருமா? தெளிவும் தைரியமுமாய் எம் பொண்ணு வளர்ந்தால் போதும்' என்று அவர் அப்பள்ளியில் மகளைச் சேர்த்த காரணம் இருக்க, நளினி அங்கு வேண்டாத சிலவற்றைக் கற்றுத் தேர்ந்தாள்.

பெற்றோர், பெரியோர் எவரிடமும் சற்று அலட்சியமாகவே இருந்தவள், மறந்தும் தமிழில் பேசவில்லை.

'அறம் செய்ய விரும்பு' என்று மொழியோடு பண்பாட்டையும் சேர்த்தே ஊட்டிய தமிழை அவள் கற்கவே விரும்பவில்லை.

''தாய்மொழியை ஸ்கூல்ல வேற படிக்கணுமாப்பா? நான ப்ரெஞ்ச், ஜெர்மன், கத்துக்கறேன்'' என்று ஒதுக்கினாள்.

மேலை நாட்டு வழக்கங்கள், அலங்காரம், உணவு பழக்கம், பேசும் முறை எல்லாம் கை வந்ததும் நளினிக்கு தலை கால் புரியாமல் போனது. வயதுக்கு வந்த ஒரு வருஷத்திற்குள் அவளது தாயாரும் இறந்து விட, மகளுக்குக் கட்டுப்பாடும் இல்லை. வேறு ஊர்களுக்கு அவளது தகப்பனுக்கு மாற்றலான போதும், பள்ளி விடுதியில்

பொறுப்பிலிருந்த போது நெல்லை மாவட்டத்திலிருந்த
ஒரு மகளிர் கல்லூரிக்கு ஒரு வாரம் மட்டுமே போனவள்,

''ஹாரிட் எக்ஸ்பீரியன்ஸ் - துப்பட்டாவை இப்படி
போட்டு 'பின்' பண்ணு. இந்தக் கேள்விக்கு 27ம் பக்க
முள்ள முழுப்பாராவும் பதில்னு ரொம்ப கொடுமை டாட்.
என் இங்க்லிஷ் அங்க யாருக்கும், ஏன் அந்த பிரின்ஸிப
லுக்கேப் புரியலை. என் ட்ரஸைக் கன்ட்ரிதனமாய் முறைச்சு
கமென்ட்ஸ் வேற பண்றாங்க. சென்னை காலேஜ்ல
அட்மிஷன் வாங்கித் தாங்க'' என்று அறிவித்தாள்.

சென்னைக் கல்லூரியிலும் நளினியின் அலட்டல்
பருப்பு வேகவில்லை.

''காலேஜிலேயுமா இவ்வளவு கட்டுப்பாடு? ஐ காண்ட்
டாட்'' என்று படிப்பை உதறியவளுக்கு அப்பாவின்
அறிவுரைகளும் கசந்தன.

''ஆற்றுக்குக் கரை, தோட்டத்துக்கு வேலி, வீட்டுக்குக்
கதவெல்லாம் அவசியம்மா - அந்த கட்டுப்பாடுதானே
பாதுகாப்பு'' என்றவரின் வாயை,

''நான்சென்ஸ்'' என்று அடைத்தவள் மறுபடி தான்
படித்த மலைவாசஸ்தலத்திற்கே போய், தன் சிநேகிதி
ஒருத்தியோடு தங்கிக் கொண்ட போதுதான், பாண்டிய
நாதனை சந்தித்துப் பழகியது. ஓரளவு தரமான அலங்காரப்
பொருட்கள் அவர் கடையில் கிடைத்ததால், அங்கே
அடிக்கடி போனவளிடம் அப்போது 25 வயதாயிருந்த
பாண்டியநாதனும் கிறங்கிப் போக, ஒரு வருஷத்தில்
அவர்கள் கல்யாணமும் செய்து கொண்டார்கள்.

சர்வதேசச் சூழலில் வளர்ந்த தன் மகள் தமிழ் பையனைத்
தேர்ந்தெடுத்ததில் நளினியின் அப்பாவிற்கு பெரும்
திருப்தி. பண்பான குடும்பம், சொந்த வியாபாரம் என்ப
தால் சிறப்பாகவேத் திருமணத்தை நடத்தினார்.



'தாமதித்துப் பிறந்த ஒரே பெண் - தாயில்லாமல்
வளர்ந்தவள் தம்பி - இனி அவ உங்க பொறுப்பு' என்று
மருமகனிடம் கைப்பிடித்து அவர் தர, பாண்டியநாதனும்
நளினியை வெகு பொறுமையோடே கையாள, நளினி
யின் குணம் அப்படியே தொடர்ந்தது!

இரண்டு பெண்கள் பிறந்து வளர்ந்த பிறகு, மூத்தவள்
நவ்யா தான் தன் தகப்பனிடம் அவ்வப்போது அலுப்பாள் -

''அம்மா இப்படி அநாவசியமாய் செலவழிப்பது,
பார்ட்டினு வீட்டை ரெண்டு படுத்தறதெல்லாம் - நீங்க
ளாவது சொல்லக் கூடாதாப்பா? என் பிரண்ட்ஸ் வீட்டுல
அவங்க அப்பா பேச்சை யாரும் தட்டுவதில்லை... இங்கே
இப்படி...'' என்று.

''நான் அக்காமாரோடு வளர்ந்தவன்ம்மா நவி. நளினா
ஒத்தைப் பொண்ணு. விட்டுக் கொடுத்து வளையத்
தெரியாது - அவ அப்பா அதாவது...''

''எங்க தாத்தா...''

''ம்ம் - அவங்க சொல்லுவாங்க என்னிடம்,

''நானே தேர்ந்தெடுத்திருந்தால் கூட இப்படி அனு
சரணையான ஒரு மாப்பிள்ளையைத் தேடி எடுத்திருக்க
முடியாது தம்பி. நளினா நல்லவதான். ஆனா நல்லபடி
பழகத் தெரியாது'ம்பார். ஒரு குடும்பத்தின் தலைவன்
ஆண்தான் - சரி. ஆனால் அந்த கெத்தை, பொறுப்பை,
ஆண் தாம் தூம்னு குதிச்சுதான் காட்டணுங்கறது இல்லை.
மனைவி மக்களை அனுசரிச்சுப் போயும் காட்டலாம் -
குடும்பம் சேர்ந்து, சந்தோஷமாய் இருக்கணும் - அது
தானே வேண்டியது?''

நவ்யாவிற்குத் தன் அப்பா என்றாலே பெருமையான
பூரிப்புதான். ஆனால் அவளது பெற்றோரைச் சந்திக்கும்

தோழிகளின் பாராட்டு முழுவதும் அம்மா நளினிக்குத் தான் போகும்!

''ஹை... உங்கம்மா செம க்யூட்யா! ஏதோ ஹிந்தி பிலிம் - ஸ்டார்னு நினைச்சுட்டோம். உனக்கவங்க கலர், ஸ்டைல் எதுவுமே வரலியே நவ்யா. அட்லீஸ்ட் அவங்க இங்கிலிஷையேனும் கத்திருக்கலாம் நீ - என்னா உச்சரிப்பு?'' என்று அந்த இளம் பெண்கள் சிலிர்த்து சிலாகிக்க, அம்மாவிற்கு வேண்டியதும் அதுதான் - அவ்வளவே தான்!

அச்சிற்றூரின் ராணியாய் தன்னைப் பாவித்தபடி வலம் வருவாள் - விதவிதமான கோலங்களில் காட்சியளிப்பாள்!

மனைவியின் தேவைகளுக்குத் தன் கடையின் வருமானம் போதாது என்றுணர்ந்த நாதன், விற்பனைக்கு வந்த அடுத்த கடையையும் வாங்கிப் போட்டு, வியாபாரத்தை விஸ்தரித்தார்.

''இப்ப நம்ப கடையில் உல்லன் ஆடைகளும் இருக்க, நீ விற்பனையில் உதவினால் நல்லது, நளினிம்மா.''

''என் தமிழைக் கேலி பண்றாங்க. நான் பேசற இங்கிலிஷ் வர்ரவங்களுக்குப் புரியாது - தவிர நான் நாளெல்லாம் கடையில் நின்னா, வீட்டை யார் நடத்தறது?''

வீட்டு வேலைக்கு வேலைக்காரர்கள் இருவர் இருந்ததை அவர் சொல்லவில்லை - மனைவியைக் கட்டாயப் படுத்தவுமில்லை.

பாண்டியநாதனின் சுபாவம் அப்படி - ஆகவேதான் மகள் கேட்டதுமே அவள் தன் வயதுத் தோழிகளோடு பிக்னிக் போக ஏற்பாடுகளை செய்து தந்தார்.

''வேனில், மதியச் சாப்பாடு கூட வச்சிருக்கேன் நவி, ஜூஸ், சிப்ஸ்னு எல்லாம் நம்ப கடையிலேருந்து ஏத்திட்டேன். நல்லா என்ஜாய் பண்ணிட்டு வாங்க.''



என்ற அப்பாக்கு வீசி கையாட்டி விட்டுக் கிளம்பிய நவ்யாவின் வேதனை ஆரம்பமானது அன்றுதான்!



## 3

சென்னையின் இளைஞர்கள் மிக விரும்பி மொய்க்கும் காபி மட்டுமே விற்கும் நாகரீக கடைக்குள் இவ்விரு இளம் பெண்களும் உட்கார்ந்திருந்தார்கள் - அவர்களுக்கு முன்னே நுரை ததும்பும் உயரமான காபி கோப்பைகள். ஆனால் அதை ருசிக்கும் ஆவலின்றி அவர்களின் கண்கள், கடையின் முழு கண்ணாடி சுவருக்கு அப்பால் எதையோ எதிர்பார்த்திருந்தன.

மின்னலாய் ஒரு சின்ன சிகப்பு ஸ்போர்ட்ஸ் கார் வந்து நின்றதும் மங்கையரின் கண்களிலும் மின்னல்! காரின் கதவு திறந்ததும் இவர்களின் விழிகளும் விரிந்தன! அதிலிருந்து இறங்கிய இளைஞனை ஆவலாய் உறிஞ்சின!

''ஹ்ஹூ! நீ சொன்னது நிஜந்தான் லலி - ஆள் கம்பீரமான அழகன்.'' ஒருத்தி வியக்க, மற்றவள் விளக்கினாள் -

''வெறும் லுக்ஸ் மட்டுமில்லை. ஹி இஸ் வெரி ஸ்மார்ட். நாம ப்யூட்டி பார்லர் போய் ஃபேஷியல், மசாஜ் எல்லாம் செய்து கூட்டிக் கொள்ளும் அழகை, ஆண்கள் எப்படி வரவழைச்சுக்கறாங்க தெரியுமா?''

காபியை உறிஞ்சிய பெண்களின் பார்வை, 'விடுவிடு' என்று நடந்தவனை விடாமல் தொடர்ந்தன.

''சாதிப்பதும், சம்பாதனையும்தான் ஆண்களை மெருகேற்றும் விஷயங்கள்! காசில்லாமல் வானுலகத்திலிருந்து.. அது யார்.. ஆங், மன்மதனே வந்தாலும் இன்றைய ஸிட்டி கேர்ள்ஸ் அவனை கண்டுக்க மாட்டாங்க!''

''இவர் மல்டி - மில்லினியர் இல்லையா லலி?''

''இல்லாமல் இந்த கார்ல வர முடியுமா? முதன் முதலாய் நான் இவரைப் பார்த்தது மூணு மாசங்களுக்கு முன்னே, ரொம்ப இம்ப்ரஸ் ஆனதால் அவரைப் பற்றி விசாரிச்சேன். ஏதோ ஒரு ஸாப்ட்வேர் ஆள் அல்லது மேனேஜர் - லெவல்னு யோசிச்சால்... இவர் ஸூப்பர் மேனாய் இருந்தார்.''

''அவங்களும் மட்டமா என்ன? மாதச் சம்பளமே சில லட்சங்கள் இல்லையா?''

''ஆனா இவர்...''

''இவரு சுவருனுட்டு - பெயரைச் சொல்லுப்பா.''

''அதுவும் அசத்தல்தான். பெயர் - நகுலன் நரேந்தர்.''

''குட். வேலை எங்கே?''

''ஸார் - பலருக்கு வேலை தரும் முதலாளிப்பா.''

''ஓஹோ அதான் அந்த மிடுக்கு - எந்த கம்பெனி?''

பல மல்டி - நேஷனல் கம்பெனிகளின் ஸ்டாஃப் பஸ்கள் இவரதுதான். ஆம்னி பஸ்களை வைத்திருக்கிறார். எல்லாம் கிளாஸ்ஸி ஏ.ஸி. பஸ்ஸஸ். அறுபது, எழுவது பஸ், வேன்களுக்கு நகுலன் உரிமையாளர். பிரபல கம்பெனியின் ஊழியர்களின் பிக்-அப் அன்ட் ட்ராப் இவரது கம்பெனியின் பொறுப்பில். 'அஷோக் லேலென்ட்' கம்பெனியின் இந்த வருடத்து விருது நகுலனுக்குத்தான். தங்களிடமிருந்து அதிக பஸ்களை வாங்கிய சிறந்த வாடிக்கையாளர்னு கௌரவிக்கப் போறாங்களாம்.''

''ஹைய்யோ... அந்த நிகழ்ச்சிக்குப் போனால் நாம ரெண்டு பேரும் அடிக்கும் விஸிலில் அரங்கத்தின் கூரையே பிய்ஞ்சிடும்.''

''ஆனால் நமக்கு அழைப்பில்லை!''

ஒருத்தி சோகமாய் சொல்ல, இருவருமாய் சேர்ந்து சிரித்துக் கொண்டார்கள்.

''ஆளுக்குப் படிப்பு உண்டா?''

''பார்த்தால் பாமரன் போலவா இருக்கார்?''

''வெளிநாட்டுல படிச்சவர் போல.''

''ரைட்! இங்கிலான்டில் நிர்வாக துறைப் படிப்பு. ஆனா எளிய குடும்பம் தான் - அதாவது பரம்பரைப் பணக்கார ரில்லை. நகுலனின் அப்பா ஒரே ஒரு மகேந்திரா வேனுடன் 'டிராவல்ஸ்' பிஸினஸை ஆரம்பித்தாராம். அது மெள்ள விஸ்தரித்த சமயம், மகன் ஒரு பிரபல கம்பெனி யில் வேலைக்குச் சேர்ந்து - 'யாருக்கோ செலவழியும் தன் புத்தியும் பலமும் தங்களது டிராவல்ஸிலேயே முதலீடு செய்தால் என்று பட....''

''என்னப்பா - நகுலனை பற்றி தீஸிஸ் தயாரிச் சிருக்கே?''

வெள்ளி நிற சாயம் தடவிய வெண்டை விரல்களை விரித்தாள். மற்றவள் - ''எக்ஸ்பிரஸ்ல இவர் பேட்டி வந்துச்சே. படு சுவாரஸ்யமாயிருந்ததால் மறுபடி மறுபடி வாசிச்சேன். நகுலன் தன் அப்பாவின் வேலையிலும் உதவும் சமயம், 'வண்டி அனுப்ப முடியுமா'ன்னு கேட்கும் வாடிக்கையாளர்களுக்கு மறுத்ததே இல்லையாம். வேற டிராவல்ஸ் மூலம் ஏற்பாடு செய்து தந்ததற்கும் கமிஷன் கிடைக்குமாம். ஒரு தரம் அவசரத் தேவைக்காய் ஐந்தாறு வேன்களை இவர் ஏற்பாடு செய்ததற்கான கமிஷன் தொகையே 15,000 ரூபாயாய் இவர் கைக்கு வர, முழு மூச்சாய் இதில் குதிச்சிட்டார்.''

''இன்ட்ரஸ்டிங். ஆனா அவரைப் பற்றி முக்கியமான விஷயத்தை நீ இன்னும் சொல்ல மாட்டேங்கறியே!''

தன் குரலை ஒரு தினுசான கவர்ச்சி கிசுகிசுப்பிற்குக் குறைத்த லலிதா "நகுலனுக்கு இன்னும் கல்யாணம் ஆகலை. ஆனால் நிச்சயமாயிடுச்சாம்."

"ச்சே - பிறகேன் நீ அவனைப் பார்த்து வழியறதோடு நிற்காமல், என்னையும் 'மிஸ்டர். ஸ்மார்ட்டை' பார்க்க வான்னு இங்கே வரச் சொன்னே?"

"ஹீரோக்காக நாம எத்தனை படு போர் படங்களைப் போய் பார்க்கிறோம்? இவர் ரியல் - லைஃப் ஹீரோப்பா! தவிர... சற்று முன் கிடைத்த ஒரு தகவல் ருசிகரமானது."

ஆனால் நகுலனில் ருசி இழந்த அந்தத் தோழி மும்முரமாய் காபியை ரசிக்க ஆரம்பித்திருந்தாள்.

"இவருக்கு நிச்சயமான அந்தப் பெண் ஒரு விபத்தில் இறந்துட்டாளாம்!"

"ஹையோ பாவம் - நம்ப ஆறடி உயர ஹீரோக்கு கல்யாண ராசி போதலை போல?"

"அவளுக்குத்தான் கொடுத்து வைக்கலை. அந்த ராசி எனக்கு அடிக்கலாமே, அதுதான் இப்படி உட்கார்ந்து தபஸ் பண்றேன், யாரிடம் என் நகுலைப் பற்றிய காதல் கதைகளை அளந்து விடறது? அதுக்காகத்தான் உன்னைக் கூட்டிட்டு வந்து அறிமுகப்படுத்தினேன். ஆனா..."

"இங்கே உட்கார்ந்து என்ன யூஸ்யா? அவர் முன்னே போய் நின்னு பேசி, உரசிச் சிரிச்சால்.."

"அதிலும் பிரயோஜனமில்லை. என்ன முயற்சித்தாலும் மனுஷன் நிமிர்ந்து பெண்களைப் பார்க்கறதில்லை."

"ஆண்களை அப்படி லேசாய் நினைச்சுடாதே லலி. பார்க்காதது போல அத்தனையும் படம் பிடிச்சிடும் அவங்க பார்வை!"



"இத்தனை நாளாய் அவர் முன்னே நடமாடியும் மனுஷன் அசரலையே. சரி - யாருக்குக் கொடுத்து வச்சிருக்கோ? ஆக 'சீச்சீ இந்தப் பழம் புளிக்கும்'னு நானும் நீயும் சொல்லிட்டுப் போயிட வேண்டியதுதான். சரி அவர் ஆபீஸ் வழியாய் போகலாமா?"

"உன் கடைசி ஆசையைக் கெடுப்பானேன்? வா."

நகுலனின் தரிசனத்திற்காய் அவன் அலுவலகக் கண்ணாடிச் சுவரின் வெளியே நடந்த, நின்ற பெண்களை அதன் கண்ணாடி அமைப்பு வெகு சாமர்த்தியமாய் தடுத்தாலும், உள்ளே தன் வேலையை ஆரம்பித்திருந்த நகுலனின் கண்கள் எதையும் தவற விடவில்லை!

நகுலனுக்கு பெண்களின் இந்தத் தவிப்பு, பழகிப் போயிருந்தது! திரையின் முன்னணி நட்சத்திரங்கள் எப்படி ரசிகர்களின் உற்சாகக் கூவல்களுக்கும் சீழ்கைகளுக்கும் மரத்துப் போயிருப்பார்களோ அதே போல, அவற்றைத் தாண்டி நடக்கக் கற்றிருந்தான் என்றாலும் பெண்கள் இப்படி தன்னை கூச்சமின்றி பின் தொடர்வதும், பழக முயற்சிப்பதும் அவனுக்கு சற்று வெறுப்பாய், ஏன் அருவெறுப்பாயும் கூட இருந்தது.

தான் வேலைக்கு ஒரு சைக்கிளில் வந்து இறங்குமளவில் ஒரு உத்தியோகத்தில் ஏன் இந்த கட்டடத்தின் காவலாளியாய் இருந்தால் இவர்கள் தன்னை இப்படி விரிந்த விழிகளால் விழுங்குவார்களா?

தன் காசுதான் அவர்களைக் கவர்கிறது.

தான் சேர்த்திருக்கும் பணப் பசைதான் அவர்களை ஒட்ட வைக்கிறது என்பது புரிந்தவன், அவர்களை அலட்சியப்படுத்தி விட்டு தன் தொழிலில் கருத்தாயிருந்தான். ஆனால் இந்தப் பெண்களை ஒதுக்க முடிந்த

வனால் அவர்களைப் பெற்றவர்களைத் தடுக்க இயலவில்லை! அவர்கள் நேரே இவனைப் பெற்றவளிடம் போய் சம்பந்தம் பேச முனைந்தார்கள்.

அவன் அம்மாவிற்கு இப்படி பெண் வீட்டாரின் படை எடுப்பில் பரம சந்தோஷம்.

"சொல்லுப்பா - எந்தப் பெண்ணை - உனக்குப் பிடிச்சிருக்குன்னு சொல்லு. கல்யாணத்தை நடத்திடலாம்."

"அம்மா, என் டார்கெட் நூறு பஸ்ஸஸ். அப்பா எனக்குப் பெரிய பலமாய் இருந்தாங்க. நான் கோடு போட்டால் அதை ரோடாய் இட்டவங்க துணை இனி இல்லை. ஆக நான் இரு மடங்காய் ஓடணும், உழைக்கணும். அப்பதான் என் லட்சியத்தை மூணு, நாலு வருஷங்களிலேனும் எட்டலாம். ப்ளீஸ்மா, அதுவரை கல்யாண பேச்சு வேணாம்."

"போடா - புரியாம பேசிட்டு. அப்பா இருந்திருந்தால் உன்னை இப்படி உளற விடாமல் கால்கட்டை போட்டிருப்பாங்க. பெண்ணுக்கு 23க்குள் கல்யாணத்தை முடிச்சிடணும்னு, உன் தங்கை வகுளாவிற்கு செய்தாச்சு. உன் கல்யாணத்துக்கு அவர் வச்சிருந்த டார்கெட் 28 வயசு. அவரில்லைன்னாலும், வர்ர பெண்களில் சரியானவளாய் ஒருத்தியை தேர்ந்தெடுத்து கல்யாணத்தையும் நடத்திட்டால் எனக்கு நிம்மதியாய் போகும். நீ பாட்டுக்கு உன் வேலையைப் பாரேன்."

"வர்ரவ என்னை டிவோர்ஸ் பண்ணிடுவா."

"மறுபடி உளறுற. உன் 'டிராவல்ஸ்'ஸில் 25 கார்ஸ் இருக்கே - ஆக மொத்தம் நூறு வாகனங்கள் ஆச்சு - பிறகென்ன? ஒரேயடியாப் பேராசைப் படாதே நகுல் - அந்தந்த பருவத்துக்கான காரியங்கள் அப்பப்ப நடக்கணும். ஐம்பது



வயசிலேயும் நீ தொழிலைப் பெருக்கலாம் - இது குடும்பத்தைப் பெருக்கும் காலம்டா."

இப்படியெல்லாம் சொல்லி அம்மா பார்த்த பெண் தான் பூமணி. இளரோஜா நிற ஜரிகை புடவையும் மாணிக்க மாலையும் தந்து ஒரு மாதத்திற்கு முன், இவனுக்கென்று நிச்சயிக்கப்பட்ட அந்தப் பெண் பூமணி இப்போது உயிருடனில்லை!

சிறு பெருமூச்சுடன் கணினியை இயக்கியவன், அது தந்த தகவல்களுக்குள் அமிழ்ந்து போனான்...



## 4

பக்கத்து கட்டிலில் கேட்ட முனங்கலில் சற்று உறக்கம் கலைந்த கவிதா, அது அலறலாகவும், அவசரமாய் எழுந்து அறையின் விளக்கைப் போட்டாள்.

"நவ்யா... கெட்ட கனவு கண்டியா? எழுந்துக்கோ - இப்படி வியர்த்திடுச்சே..." என்றபடி தன் அறைத் தோழியின் முகத்தைத் துடைத்தபடி ஆறுதலும் சொன்னாள் - "ஷ்... வெறும் கனவுதான் நவ்யா - அழாதே - பாரேன். நம்ப அறையில் நீயும் நானும் பத்திரமாய் இருக்கோம்."

தோழி தந்த தண்ணீரையும் பருகிய பின் நவ்யா மெள்ளப் பேசினாள் - "நாங்க பிக்னிக் போன நாளை நினைச்சேனா... அதில் பயங்கர நினைவுகளும் கிளர்ந்திருச்சு கவி... அதற்கு முன்னே எவ்வளவு சந்தோஷமாய், நிம்மதியாய் இருந்தோம்? நான் நச்சரித்ததால் அப்பா நாங்க பிக்னிக் போக எல்லா ஏற்பாடுகளையும் செய்திருந்தார் - ஆறு பிரண்ட்ஸோடு, நானும் என் தங்கை காவ்யாவும் கிளம்பினோம்."

"வேணாம் நவி. உன்னை அப்ஸெட் பண்ணும் ஞாபகங்களை மறந்திடு."

''என்னிடம் எவ்வளவோ அனுசரணையாய் இருக்கும் உன்னிடம் சொன்னால் என் மன இறுக்கம் தளரலாம்னு தோணுது கவி.''

''நீ சிரிக்கறதுமில்லைன்னு எல்லாரும் குறைபட, நான் உங்கிட்ட கொஞ்சம் விவரங்களைத் துருவிக் கேட்டுட்டேன் - ஸாரி.''

''சொல்றேன் கவி. பல சுவைகள், பல்வேறு அனுபவங்களின் கலவைதான் வாழ்க்கைன்றது எங்கப்பா ஒரு ஸென் கதை சொல்வார்.

ஒரு சீடன் தன் குருவிடம் வாழ்க்கையைப் பற்றி குறைபட்டானாம் 'வாழ்வு அலுப்பூட்டுகிறது குருவே - சோர்வு, சிரமங்கள், சங்கடங்கள் எல்லாம் ஏன்?' என்று.

'காபி குடிக்கிறாயா?'ன்னு சீடனை உபசரித்த குரு, ஒரு கிண்ணத்தில் காபித் தூளை மட்டும் தந்து 'சாப்பிடு'ன்னாராம்.

புரியாமல் விழித்த சீடனிடம்,

'நீ இதை மெல்லும்போது, பாலைத் தருவேன் - அடுத்தாய் சர்க்கரையும் வரும்' என்றவர் விளக்கமும் தந்தாராம் -

'எப்படி இவற்றை நீ தனித்தனியே சுவைக்க முடியாதோ, அதே போல வாழ்வின் சுவைகளை, சங்கடங்களையும் பிரித்து அனுபவிக்க முடியாது - அத்தனையும் கலந்ததுதான் வாழ்க்கைன்னு...'

''ம்ம்.. உண்மைதான்.''

''ஆனால் யாருக்கும் கொலை அனுபவம் தேவையில்லை, கவி.''

தத்துவம் பேசியவளைத் திசைத் திருப்பினாள் -

''பிக்னிக் [illegible]



''ஆமாம் - கொடைக்கானலின் உட்பகுதி அது. பைன் மரங்கள் அடர்ந்து, அதன் உலர்ந்த ஊசியிலைகள் உதிர்ந்து, மெத்துன்னு கம்பளம் போல கிடக்கும். அந்தப் பாதையில் நடந்து போனால் சின்ன ஓடைகள், அருவிகள்னு ரம்மியமாயிருக்கும் - அங்கே உட்கார்ந்து சீட்டாட்டம், சாப்பாடு, அரட்டைன்னு நேரம் போச்சு. என் ப்ரெண்ட் ஒருத்தி ஏன் நாம இப்படி அம்மாமிகள் போல உட்கார்ந்திருக்கோம்னு சொல்ல, எல்லாரும் எழுந்து நடந்தோம்.

'ஓட முடியாதா?'ன்னு அவ சீண்ட, உள்ளதிலேயே ஸ்லிம்மான நான் வேகமாய் ஓடினேன் - மேட்டிறினால் சாலை - அதை நோக்கி ஓட...''

உலர்ந்த உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டு தொடர்ந்தாள் நவ்யா - ''வளைவான சாலையில் அந்தப் பெண்ணும் வேகமாய் சைக்கிளில் வந்தா...''

''யாரது - உன் சிநேகிதியா?''

''இல்லை கவி. எங்களைப் போலவே மற்றொரு க்ரூப் அங்கே பிக்னிக் வந்திருந்தாங்க - அதுவும் மதுரையிலிருந்து. அந்தப் பெண்ணிற்கு சமீபத்தில் கல்யாணம் நிச்சயமாயிருந்ததால ஏக குஷியாய் அவங்களும் கிளம்பியிருப்பாங்க போல. அந்த க்ரூப் 'ஃப்ரிஸ்பீ' ஆடினாங்க போல. எதிர்புறம் மரங்கள் இல்லாத புல்தரை.''

''ஃப்ரிஸ்பீன்னா பிளாஸ்டிக் தட்டு போலிருக்கும் - அதுதான?''

''ம். பந்தைத் தூக்கிப் போட்டு பிடிப்பது போல இதை வீசி எறிய, அதுவும் 'விர்'ருனு பறக்கும். அது ஒரு சிவப்பு தட்டு. 'பளீர்' நீல வானத்தில் அந்த சிவப்பு தட்டு மிதந்ததைப் பார்த்தபடி சைக்கிளில் வந்த அந்தப் பெண்,

திடும்னு ஏறி சாலைக்கு வந்த என்னை எதிர்பார்க்கலை. ஆக திடுக்கிட்டு சைக்கிளை எதிர் திசையில் ஒடிச்சா... கட்டுப்பாடை இழந்த சைக்கிள் மறுபக்கமிருந்த பள்ளத்தில் விழுந்து உருண்டது.''

''பள்ளம்னா...''

''அடி தெரியாத பள்ளத்தாக்கு கவி... அதுல அந்தப் பெண் விழுந்து...'' கைகளில் முகத்தைப் புதைத்த நவ்யா விடமிருந்து நீண்ட மூச்சுகள் தவிப்பாய் வெளியேறின.

தோழியின் முதுகை நீவியபடி கவிதா கேட்டாள் -

''இதைத்தான் கொலைன்றியா நவி?''

''இல்லையா பின்னே? இருபத்தியொரு வயசான நான் குழந்தையாட்டம் அப்படி சரிவில் ஓடி ரோட்டிற்கு ஏறின தாலதானே...?''

''அது விபத்து. நாம எதிர்பாராதது. அதை விவரிக்க ஒரு விநோத சொலவடை உண்டு -

'எதிர்பாராத நிகழ்வுகளை எதிர்பார்க்கத் தவறினால், அந்த எதிர்பாராத நிகழ்வுகள், எதிர்பார்க்கக் கூடிய நிகழ்வுகளாய் மாறி விடும் ஆபத்து உண்டு!' - புரியுதா?''

''உனக்குப் புரியுதா கவி? என் குற்ற உணர்வு உனக்குப் புரியலைல்ல?''

''அது அவசியமில்லைங்கறேன்! வேறெங்கோ கவனத்தை வைத்தபடி வேகமாக வந்த அந்தப் பெண்ணின் சைக்கிள் உன் மேல் மோதியிருக்கலாம் - நீ பல்டியடிச்சு, முதுகுத் தண்டு முறிந்து கிடந்திருக்கக் கூடும். பாதிப்பு உனக்கும் நேர்ந்திருக்கலாமே?''

நவ்யா தளர்ந்த தன் தோள்களை லேசாய் குலுக்கினாள்.

''விதி அந்தப் பெண்ணிற்குப் பாதகமாயிடுச்சு. அவளுக்கு சைக்கிளை முழுதாய் கண்ட்ரோல் பண்ண முடியலை. அவள் கவனம் பறந்த ஃப்ரிஸ்பீ மேல், அல்லது தான் கல்யாணம் செய்யப் போகும் அந்த வாலிபன் மேல் கூட இருந்திருக்கலாம்.''

''ம்ப்ச் ரொம்ப அழகான பெண்ணாயிருந்தாள், கவி. எத்தனையோ ஆனந்தமாய் வந்தவள் நசுங்கி கோரமாய் இறந்தது - என்னால்தான?''

''எந்த வாகனத்தை ஓட்டும் போதும் நம்ப கவனம் சாலையில் இருக்கணும் நவ்யா. மேலே வானத்தில் அல்ல.''

''அப்படித்தான் விசாரணையில் சொன்னாங்க.''

''ஓ... கோர்ட், கேஸ் எல்லாம் நடந்துதா என்ன?''

''இறந்தவ பெரிய இடத்துப் பெண் - ஆக முதலில் போலீஸ் ஸ்டேஷனிலும் பின் பிரைவேட்டாகவும் ஒரு விசாரணை நடந்தது. அவங்க தரப்பில் பப்ளிஸிட்டியை தவிர்க்க நினைச்சாங்க. ஒரு ஜட்ஜ் வந்து விசாரிச்சார். அவள் ஓட்டி வந்த சைக்கிளில் 'பெல்' இல்லை. ஒரு வேளை மணியடிச்சிருந்தால் அந்த விபத்து தவிர்க்கப் பட்டிருக்கலாம். நான் ஓடி வந்த இடத்திலிருந்து வளைவில் வந்த சைக்கிள் தெரியலை என்பதை இன்ஸ்பெக்டர் சாட்சியாய் சொன்னார். ஃப்ரிஸ்பீ ஆடின அவளது பிரண்ட்ஸூம் விசாரிக்கப்பட்டாங்க. ரொம்ப பதட்டமான சமயம் அது, கவி.''

''இந்த விபத்தில் உனக்கும் கடும் பாதிப்புதான், நவ்யா. ஆனால் துரதிர்ஷ்டவசமாய் அந்தப் பெண்ணின் உயிரே போயிடுச்சு. விசாரித்து உன் மேல் குற்றமில்லை என்று தீர்ப்பான பிறகும் உனக்கு உறுத்துது.''

''பின்னே?''

''ஷ். புத்திமதி அறிவாளிக்குத் தேவையற்றது; முட்டாளுக்குப் பயனற்றதுன்னுவாங்க. ஆக நான் உனக்கு நீள

புத்தி சொல்லப் போறதில்லை. உனக்கு நேர்ந்தது கடுமை யான அதிர்ச்சிதான். ஆனால் வாரக்கணக்கில் அதிலேயே அமிழ்ந்து கிடப்பது அநாவசியம். அதனால் ஒரு பயனு மில்லை. அவளின் பெற்றவர்கள் பாவம்தான்...''

''நான் அவர்களைப் போய்ப் பார்த்தேன், கவி... அதோடு...''

''அந்தப் பெண்ணின் பெயர் என்னன்னு நீ சொல்லலவே இல்லியே?''

''பூமணி.''



## 5

''ப்ளீஸ்பா, என்னால முடியாதுப்பா - வேணாம்பா..'' என்று கெஞ்சிய மகளின் முகத்தைப் பார்த்த பாண்டியநாதனுக்குப் பரிதாபமாய் தானிருந்தது. ஆனால் பாவம் பார்த்து இப்படியே விட்டு விட்டால் மகளின் புத்தி விபரீதமாய் திருகிக் கொள்ளும் அபாயம் இருந்ததே.

சில வியாதிகளுக்கு அறுவை சிகிச்சைதான் தீர்வு - வலிக்குமே என்று பயந்தால் ஆகுமா?

''நாம எதைக் கண்டு அஞ்சுகிறோமோ அதை நேருக்கு நேராய் நின்று பார்த்துடணும் நவும்மா. பிறகு இதற்கா பயந்தோம்னு தெளிஞ்சிடுவோம்.''

''அந்தப் பெண் பூமணியின் பெற்றோரைப் போய்ப் பார்த்தால் என் மனம் சமாதானப்படும்றீங்கப்பா - அவங்க மனசு ரணப்படும்னு உங்களுக்குத் தோணலியா? என்னால முடியாதுப்பா. விசாரணையின் போது கூட நான் அவங்க முகத்தைப் பார்க்கலை. சாவுல கசங்கிய பூமணி யின் முகமே என்னை வதைக்குது. இவங்களையும் பார்த்துப் பேசினால் என் உறுத்தல் அதிகந்தான் ஆகும்.''

''அவங்களை நான் பார்த்துப் பேசினேன்மா. உன் அவதியைச் சொன்னேன். உன் வயசு என்னன்னு மிஸ்டர். ரவீந்தர் கேட்டார் - அதாவது பூமணியின் அப்பா. இருபத்தி ஒண்ணுன்னேன்.''

நவ்யா நடுங்கும் தன் விரல்களைத்தான் பார்த்திருந் தாள் என்றாலும் அவளது தகப்பன் சொன்னதைக் கவன மாகவே கேட்டிருந்தாள்.

''பூமணிக்கு இருபத்தி நாலாம். 'ரொம்ப அலசி இந்த மாப்பிள்ளையை நிச்சயித்தோம் ஸார். நிச்சயமாகி பத்து நாள்தானிருக்கும். ஆனால் நடந்த விபத்தை அலசிப் பார்த்தால், உங்க பொண்ணும் காயப்பட்டிருக்கலாம் - உங்க பெண்ணிற்கு அசம்பாவிதம் நேர்ந்திருந்தால் பூமணியும் இப்படித்தான் நொறுங்கி போயிருப்பா - புரியுது - ஆனால் உங்க பொண்ணு எங்களை வந்து ஏன் பார்க்கணும்?'ன்னு அவரும் கேட்டார்தான்.''

''அவங்களையும் சங்கடப்படுத்தறீங்கப்பா.''

''நேரே உங்களிடம் ஒரு மன்னிப்பைக் கேட்டால் என் நவ்யாவிற்கு மனம் சாந்தியாகும்னு ஒரு எண்ணம். நீங்க 'மன்னிச்சிட்டேம்மா'ன்னு சொல்ற அந்த வார்த்தையில அவ மனரணம் ஆறிடும்னு சிறு நப்பாசைன்னேன் - அவர் ஒத்துகிட்டார். பெண்ணைப் பெத்தவரில்லையா - அவருக்குப் புரிஞ்சிடுச்சு.''

''அம்மா என்ன சொல்றாங்கப்பா?''

''என் கிறுக்குத்தனம்னு ஒதுக்கித் தள்ளிட்டா. ஆனா என் டாக்டர் ப்ரெண்டிடம் இது பற்றிப் பேச, அவனுக் கும் என்னை ஒத்த கருத்துதான் நவும்மா. நீ ராத்திரி முழுசாய் தூங்கறதில்லை. அடிக்கடி பால்கனியில் போய் நின்று வாய்விட்டுப் பேசிக்கறே. தொடர்ந்து மூணு வாரங்

களும் வீட்டை விட்டு வெளியே போகலை. மூணு
நாட்களுக்குக் கூட குளிச்சு, உடை மாற்றாமல் முடங்கிக்
கிடக்கறே. அம்மா திட்டினதும் தான் குளிக்கறே,
சாப்பிடற. இதெல்லாம் 'டிப்ரஷனின்' அறிகுறிகளாம்.
இன்னும் நாலு மாசப் படிப்பிருக்கேம்மா - இந்த மனச்
சோர்வோடு ஹாஸ்டலில் தங்கி உன்னால் படிக்க
முடியுமா? யார் உன்னைத் தேற்றுவார்?''

''எல்லாவற்றுக்கும் காலம்தான் மருந்துன்னுவாங்
களேப்பா... நாளாக ஆக சரியாயிடும்... அதாவது மறந்
திடும்.''

''சில புண்களைக் கவனியாமல் விட்டால் உள்ளேயே
புரையோடிடும்மா. முந்தா நேத்து ராத்திரி அலறிட்டே
எழுந்த உன்னால் மறுபடி தூங்கவே முடியலை. எனக்குப்
பயமாயிருக்கு நவும்மா - அதான் மிஸ்டர். ரவீந்தரைப்
போய் பார்த்து, பேசினேன்.''

நவ்யாவிற்கும் தான் கண்ட கனவு ஓரளவு நினை
விருந்தது. லேசில் மறக்காத பயங்கர கனவுதான்.

நீருக்குள்ளிருக்கும் ஒரு இருட்டுக் குகைக்குள் யாரோ
அவளைப் பிடித்து அமிழ்த்துகிறார்கள். அது போதாது
போல வேறு ஒரு கை குகையிலிருந்து நீண்டு, இவளை
'வா வா' என்று சைகை காட்டி அழைப்பதில், இவள்
மூச்சுத் திணறி தவித்து ஒரு அலறலுடன் கண் விழித்
தாள்.

எதிர்பாராமல் நேர்ந்த அந்த விபத்து கொடுமையானது
தான் - ஆனால் நடந்து விட்டது. அது போதாது போல
இவள் மனநோய்க்கும் ஆளாகி விட்டால்... அந்த
இரட்டை அதிர்ச்சியைத்தான் தன் கனவு நிழலாட்டமாய்
காட்டியதோ?



''உன் மனதை, நரம்புகளை அமைதிப் படுத்த என்
டாக்டர் பிரண்ட் கோபால் மாத்திரைகளைத் தந்தான்.
அவனும் நீ பூமணியின் பெற்றோரைப் பார்ப்பது உன்
டென்ஷனுக்கு ஒரு ரிலீஸ் போலாகும்னே கருதறான்,
நவும்மா.''

பெரியவர்களின் பேச்சைக் கேட்பது நல்லதுதான்
என்றாலும் அது அத்தனை சுலபமாயில்லை. மலைப்
பிரதேசத்தில் வேம்பு வளருவதில்லை என்பதால் கீழ்நாட்டி
லிருந்து வேப்பங் கொழுந்தை எடுத்து வந்து, அப்பா
மென்று விழுங்கச் செய்ததில் மகள்களின் முகங்கள்
அஷ்ட கோணலானது போல, இப்போதும் உள்ளம் முரண்டு
கிறது. ஆனால் தான் இப்படி இரவு முனகி, அலறுவதில்
மிரண்ட தங்கை, அம்மா போய் படுத்துக் கொள்வதில்
வாய்த்த தனிமை நவ்யாவையும் அரட்டத்தான் செய்தது.
கல்லூரி விடுதியில் இது போல தான் கத்தி கலாட்டா
செய்தால் - விளைவு எப்படியிருக்குமோ என்ற அச்சத்தில்
நவ்யா தலையாட்டினாள்.

கவனமாய் கேட்டிருந்த கவிதாவிடம் தொடர்ந்து
பேசினாள் நவ்யா -

''ஆக நானும் அப்பாவும் மதுரைக்குப் போனோம் -
அங்கே பூமணியின் வீடு ரொம்பப் பெருசு. ரெண்டு
அண்ணன்மாருக்குப் பிறகு ஆறு வருஷ இடைவெளி
விட்டு பிறந்த பெண்ணாம் பூமணி. ஆக அவங்க அப்பா,
அம்மா வயசானவங்கதான் - அந்தப் பெரிய வீட்டில்
குறுகித் தளர்ந்து நின்ற அவங்களைப் பார்க்கவே எனக்குக்
கூசுச்சு, கவி. குற்ற உணர்வு உடம்பெல்லாம் ஊசியாய்
குத்த, தவிச்சு நின்னேன்.''

''நீ திட்டமிட்டு அந்தப் பூமணியைக் கொல்லலை
நவ்யா - ஏன் அந்தப் பெண்ணை உயிரோடு நீ பார்த்தது

கூடயில்லையே! - கொலை, மர்ம நாவல்களில் முக்கிய மானது - மோடிவ்! உனக்கு என்ன காரணமிருந்தது?''

''அப்படி எல்லாரும் என்னைச் சமாதானப்படுத்தி னாங்க தான் கவி. ஆனால் கருவளையமிட்ட அந்த தாயாரின் கண்கள்... அதன் சோகத்தை என்னால் தாள முடியலை. அவங்கப்பா முயன்று புன்னகைத்தது, எனக்கு வலிச்சது.''

''என்ன சொன்னாங்க?''

''இழப்பின் சூன்யத்தோடிருந்த அவங்க கண்களையேப் பார்த்திருந்த எனக்கு, அவங்க பேசியது ஏதும் புரியலை... கேட்கலை. அப்பாவும் ஏதோ பேச, என்னைச் சுற்றிலும் வார்த்தைகள் மிதந்தன - எனக்குப் புரியாமல் - அப்பதான் நான்... நான்..''

''சொல்லு நவ்யா.''

''பிரமைப் பிடிச்சது போலிருந்த நான் அவரைப் பார்த்தேன், கவி. அந்த பெரிய அறையின் இடது பக்க ஓரமாய் என்னையேப் பார்த்தபடி நின்றார் அவர்.''

''பூமணியின் அண்ணனா?''

''இல்லை. முதல்ல அவரைச் சிலைன்னு நினைச் சுட்டேன்! பழைய கால கிராமப்போனின் பக்கமாய் சற்று சாய்ந்து நின்றவர், ஏதோ விளம்பரத்திற்கான மாடல் போலிருந்தார். நான் பார்த்ததும், அவர் லேசாய் அசைய, நான் திடுக்கிட்டுட்டேன்... இவர் பார்வை வேறு மாதிரியாயிருந்தது...''

கவிதா தன் ஆர்வத்தில் தோழியை சற்று அதட்ட லாகவே கேட்டாள் -

''யாரதுன்னு கேட்டேன்ல?''



''அவர் பேர் நகுலனாம் - நகுலன் நரேந்தர். பூமணிக்கு நிச்சயிக்கப்பட்டிருந்த மாப்பிள்ளையாம். அவர் பார்வை என்னை உறுத்ததில் நான் உறைஞ்சுட்டேன், கவி.''

''ஹைய்யோ - இவரைப் பற்றி இந்த வாரம் முழுக்க சிநேகா அரற்றித் தள்ளினா - அவ பிரண்ட் லலிதான்னு ஒருத்தி 'ஒரு ரியல் - லைஃப் ஹீரோவைக் காட்டறேன் வா'ன்னு கூட்டிப் போய் இந்த நகுலனைக் காட்ட, இவ முனியடிச்ச ரேஞ்சில் ஒரே பிதற்றல் - 'இப்படி காரோட் டினார்', 'இப்படி நடந்து போனார்', 'விருது வாங்கப் போறார்' - 'யாருக்குக் கொடுத்து வச்சிருக்கோ'ன்னு விதவிதமான புலம்பல்! அதை ஏன் என்னிடம் சொல்றேன்'னு நான் அவகிட்ட சலிச்சேன் - இப்ப ஆச்சரியமாய் நீயும் அவ ரையேக் குறிப்பிடறே.''

''ஓ..? எனக்கு அவரையும் அங்கே பார்த்ததில் அதிர்ச்சி கூடியதே தவிர, குறையலை. அப்பா சொன்னபடி ஏதோ செய்துட்டு அந்த அறையை விட்டு வெளியேறினோம்... ஒரு வழியாய் அந்த வீட்டைத் தாண்டியதும்... நான்... டென்ஷன் தாளாமல் சிரிச்சுட்டேன், கவி...''

''அது உன் பழக்கந்தானே?''

''ஆனா அது அந்த... நகுலனுக்குத் தெரியாதே. அவரும் கிளம்பிட்டாரா, இல்லை என்னைக் கண்காணிக்கத் தொடர்ந்தாரோ தெரியலை. வெளி வாசலுக்கு வந்திருந்த அவர் என்னை கண்ணைச் சுருக்கிப் பார்த்த விதம்... ஹூ...'' நவ்யா சிலிர்த்தாள்.

சிங்கத்தைப் பார்த்த சிறுமுயல் இப்படித்தான் நடுங் கும் போலும் என்று தோன்றியது அவளது தோழிக்கு!



# 6

'காலம் ஆற்றும்' என்பதைக் கேள்விப் பட்டிருந்தாலும் அனுபவித்துப் புரிந்து கொண்டாள் நவ்யா. நான்கு மாதங்களில் அவளது மனரணம் வெகுவாய் ஆறி யிருந்தது. தன் தோழியிடம் மனம் திறந்துக் கொட்டியது ஒரு காரணமென்றால், அவள் தந்தையின் உற்சாகமும் முக்கிய காரணம்.

முதல் இரு வாரங்களுக்கு,

''நவும்மா, நல்லா தூங்கறியா? சாப்பிடறேல்ல? பாடங் கள் சுவாரஸ்யமாயிருக்குமே - மனதை அதில் செலுத்து புதுசா வந்த கமல் படத்துக்கு உன் பிரண்ட்ஸோடு போயிட்டு வர்றது-'' என்ற ரீதியில் பேசியவர், பின் தன்னைப் பற்றி பேச ஆரம்பித்திருந்தார்.

''ஸாரிம்மா. நேத்து உன்னிடம் ரெண்டு நிமிஷத்துக்கு மேல் பேச முடியலை. எதிர்பாராத வேலை - ஆனா ரொம் எக்ஸைட்டிங்கா இருக்குது.''

உற்சாகமாகவும் சற்று மூடு மந்திரமாகவும் அப்பா தந் தகவல்கள் நவ்யாவின் ஆர்வத்தைக் கிள்ளி விட்டன.

''விவரமாய் சொல்லுங்கப்பா - நான் ஊர் வந்தது ரொம்ப ஆச்சரியப்படப் போறேன்னா என்ன அர்த்தத்துல?

''நம்ப கடையை ஒட்டியிருந்த மற்ற கடைகளையும் வாங்கியாச்சு நவும்மா - இப்ப ஷாப்பிங் காம்ப்ளெக்ஸில் கீழ்பகுதி முழுக்க நமது - ஆக சகலமும் விற்கலாம்.''

''அவ்வளவிற்குப் பணம் ஏதுப்பா?''

''பரவால்லியே நவும்மா - நீ சுட்டிகைதான். உங்கம்மா கேட்காத கேள்வியெல்லாம் நீ கேட்கறியே! நீ வந்ததும் எல்லா விவரமும் சொல்றேன். வந்து பார்த்தால் ரொம்ப சந்தோஷப்படுவ.''

''அத்தனையிலும் பொருட்களை வாங்கி வைக்கணு மேப்பா?''

''அதற்கான லிஸ்டை அம்மா போட்டபடி இருக்காங்க. நம்ப கடைக்கு வருபவர்கள் தேவையானது அத்தனையும் வாங்கிட்டுப் போகலாம்கிற அளவில் ஒரு சூப்பர் ஸ்டோர்!''

அதற்கான பணம் எங்கிருந்து கொட்டும் என்றிவள் கேட்கவில்லை. தங்கை காவ்யா பள்ளியிறுதி படிப்பில் மும்முரமாய் இருந்ததால் அவளிடமும் இது பற்றிய விவரங்களை விசாரிக்க முடியவில்லை.

பாடத்தின் கூடவே பியானோ இசையிலும் ஆறாம் கிரேட் பரீட்சை எழுதவிருந்த தங்கையின் பிரச்சனை வேறாயிருந்தது.

''இசையும் படிப்புமாய் கலக்கிக் குடிச்சதில் என் மூளை கொதிச்சு போயிடுச்சு நவி. ஆனா அப்பா, அம்மாவை நான் இவ்வளவு குஷியாய் பார்த்ததில்லை. ரெண்டு பேருமாய் சேர்ந்து ஏதேதோ பிளான் போடறதும், கடைக்குச் சேர்ந்து போறதுமாய்! அவங்க என்னைக் கவனிக்கறதில்லை... ஆனால் வேறெதிலும் என் கவனம் போனால் என் ஆட்டம் க்ளோஸ்!''

அம்மா நளினியின் குரலிலும் ஏகத் துள்ளல் -

''இது என் கனவு நவ்யா. நான் படிச்சு, வளர்ந்த இந்த ஊரில் நான் ஒரு முக்கிய நபராய் இருக்கணும்னு ஆசைப் பட்டேன். இப்ப ஒரு பிரமாத பிஸினஸ் - வுமனாய் அசத்தப் போறேன் - பாரு.''

அம்மா கடையில் போய் உட்காருவதை வெறுத்தாள் என்பது தெரிந்த நவ்யாவிற்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. அது புரிந்த நளினி விளக்கினாள்.

"பத்துக்கு பன்னெண்டு அடி கடையின் கல்லாவில் முடங்க என்னால் முடியலை நவி. ஒரு பிரமாதமான 'பாஷ்' கடையின் உரிமையாளராய், மிடுக்காய் சுற்றி வரக் கசக்குமா - என்ன?"

"பிரமாதமாய் அங்கே என்னம்மா விற்கப் போறோம்? தங்கமா?" மகளின் சிறு கேலிக்குப் பதிலாய் நளினி பெரிதாய் சிரித்தாள்.

"வெள்ளி நகைகள், ஒரு கிராமில் முலாமிட்ட தங்க நவீன நகைகள் இருக்கும். கம்பளி, சின்தடிக் ஆடைகள், உலகத்தரத்திலுள்ள காஸ்மெடிக்ஸ், உணவு வகைகள், நேச்சுரல் ஐஸ் - க்ரீம் பிரஷ் பழங்கள், ஏன் மளிகையும் சுத்தமாய் 'பாக்' செய்யப்பட்டு அம்சமாய் கிடைக்கும். எதையும் விடறதாயில்லை."

அம்மாவின் உற்சாகம் மகளுக்குப் பிடித்திருந்தது. தன்னைப் பிடித்திருந்த சோர்வைப் பிய்த்தெடுத்து விலக்கும் அளவிற்கு! எப்போது வீட்டிற்குப் போவோம் என்ற ஆவல் நவ்யாவினுள் அரும்பியது. நான்கு மாதங்களுக்கு முன்பு மலையிலிருந்து இறங்கும்போது, மறுபடி இதில் ஏறும்போது, தன் பயங்களும் குற்ற உணர்வும் ஏறி தன்னை நசுக்குமோ என்ற அச்சமெல்லாம் இப்போது அர்த்தமற்றதாகிக் கிடந்தன!

தோழியின் மாற்றத்தில் கவிதாவிற்கும் நிறைவுதான் - தன்னிடம் நவ்யா மனம் திறந்து பேசியதிலிருந்து அவளது போக்கில் சற்று முன்னேற்றமிருப்பதாய் பட்டதால்.

ஓவியம், கை வேலைகள், சமையல், காரோட்டுதல் என்று அவர்களுக்கான பாடங்கள் அத்தனையும் சுவாரஸ்யம் என்பதால் அவையும் நவ்யாவின் கவனத்தைச் சுருட்டிக் கொண்டன.



வீட்டிலிருந்து போன் வந்ததும் அவள் முகம் மலர்ந்து போகும். காவ்யாதான் சற்று குறைந்த சுருதியில் அலுப்பாள் -

"நவி நீயேனும் இங்கேயிருந்தால் எனக்கு நல்லாயிருந்திருக்கும் - அப்பாவும் அம்மாவும் வீட்டிலேயே இருக்கறதில்லை. தனியே உட்கார்ந்து படிச்சு களைச்சுட்டேன் நான்."

"கொஞ்ச நேரம் நீயும் அவங்களோடு போய்ட்டு வர்ரது." சொல்லும் போதே நவ்யாவிற்குத் தானும் அங்கே அவர்களோடு இல்லையே என்ற ஏக்கத்தில் தொண்டை அடைக்கும்.

"ஒழுங்காய் படிச்சு மார்க்ஸ் அள்ளினால்தானே நவி, நான் பாரிஸ்க்கு பறக்க முடியும்? மறந்துட்டியா?"

"ஓ... உன் திட்டங்கள் மாறலையா காவ்யா? அதாவது ஃபாஷன் டிஸைனிங் படிக்க பாரிஸ் போகணும் என்பதில்?"

"ஏன் மாறணும்? இன்டர் - நெட் மூலம் உலக நாகரிகம், ட்ரெண்ட் எல்லாம் பார்த்து, விரல் நுனியில் வச்சிருக்கேன் நவி. ஸ்காலர்ஷிப்பிற்கு அப்ளை பண்ணணும். இங்குள்ள ஒரு தேர்வில் நான் இந்திய அளவில் முதல் பத்து இடத்திற்குள் வந்தால், மூணு வருஷ படிப்பு, அதுவும் பாரீஸில் சாத்தியம் - பிறகு எனக்கு டிஸைனிங், ஃபேஷன் - ஷோஸ்னு மூச்சு விடக் கூட நேரமில்லாமல் உலகமெங்கும் பறக்கணும் -

'காவ்யாஸ் கார்ஜியஸ் கிரியேஷன்ஸ்' என்ற என் கற்பனை ஆடைகளில் பிரபஞ்ச அழகிகள் உலா வருவாங்க... ஹா!"

நவ்யா தங்கையின் உற்சாகத்தை ரசிப்பாள் -

அம்மாவைப் போலவே எதையும் உலகத் தரத்தில் யோசிக்கும் காவ்யா, அவளது ஆசைப்படி உலகின் கவனத்தைத் தன் திறமையால் கட்டி வைத்தால் இவர்களுக்குமே அது பெருமைதானே!

தன்னைப் போலவே இளைய மகள் வெளுப்பும் மிடுக்குமானவள் என்பதால் நளினிக்கு காவ்யாவின் மேல் ஒரு தனிப் பிரியம். அதைக் காட்டிக் கொள்ளவும் அவள் தயங்கியதில்லை. காவ்யாவும் தாயிடம் ஒரு தோழி போலவே ஒட்டி இழைவாள்.

'எனக்கும் என் சின்ன மகளுக்கும் நடுவே தலைமுறை இடைவெளி எல்லாம் கிடையாது. சில வயசானதுங்க புலம்பறதுண்டு - 'நம்ப காலத்தைப் போல உறவுகள் கூடி மகிழ்வதும் கொண்டாட்டமும் இப்ப இல்லியேன்னு' நான் அதை ஒத்துக்கிறதில்லை. இன்னும் அதெல்லாம் இருக்க, நாம்தான் அதை உணரலை. வேறொரு புதிய கூட்டம் அதை அனுபவிச்சுட்டுதான் இருக்குது. உலகின் மாற்றங்களை, மகிழ்வுகளை நாம் அனுபவிக்கும் வரை வயசுங்கறது ஒரு குறையேயில்லை.'

இப்படி பழுதற்ற ஆங்கிலத்தில் அதிரடியாய் அறிவிப்பாள் நளினி. ஆனால் அப்பாவுடன் பெரும்பாலும் ஒத்துப் போகாத அம்மா, இப்போது அவரோடு இணைந்து நடப்பதில் நவ்யாவிற்கு மிக நிறைவு.

முன்பு இவர்களது கடையை அடுத்திருந்த காஷ்மீரக் கம்பளக் கடையின் விற்பனை மிகத் தளர்ந்து விட, அதை நடத்திய பெரியவரின் மகன்கள் கடையை பெங்களூருக்கு மாற்றி விட்டனர். மறுபக்கமிருந்த செருப்பு கடையின் உரிமையாளருக்கும் திருப்தியில்லை.

''ரீபாக்', 'மெட்ரோ'ன்னு ஷோக்காய் ஏதேதோ பெயரில் ஆயிரக் கணக்கில் விலை வைச்சு விற்பதற்குத்தான்



இப்ப காலம். இன்னும் எவ்வளவு காலம் நான் ஈ ஓட்டறது? போதும்.' என்று விட்டார்.

'மாடர்ன் டெய்லர்ஸ்' என்ற பெயரில் தைத்துத் தந்த அஹமது பாயின் தையல் அத்தனை நவீனமாய் இல்லை என்று ஊரார் ஒதுங்கிக் கொள்ள, அவருக்கும் ஓய்வெடுக்க வேண்டிய நிலமை.

இத்தனைக் கடைகளுமாய் சேர்ந்து இப்போது ஒரே 'சூப்பர் ஸ்டோர்ஸாய்' உருவெடுத்திருக்க, அது எப்படியிருக்கும் என்ற கற்பனை நவ்யாவிற்கு சுகமாயிருந்தது.

''அப்பா இந்த வீக்-எண்ட் நான் ஊருக்கு வர்ரேனே - நம்ப கடையைப் பார்க்க ஆசையாயிருக்குது.''

''ஸஸ்பென்ஸ்தானம்மா திரில்! கற்பனையிலேயே கொஞ்ச நாள் குதிரை ஓட்டு. இன்னும் ஒரே மாசந்தான? ஒரேயடியாய் பரீட்சையை முடிச்சுட்டு வா. ஏப்ரலிலிருந்து இங்கே டூரிஸ்ட்ஸ் குவிஞ்சிடுவாங்க. நாங்க சமாளிக்க முடியாது. விற்பனைக்கு ஆறு பேரேனும் தேவை. ஆக உங்கம்மா அவங்களை மும்முரமாய் இன்டர்வ்யூ செய்திட்டிருக்கா - அவ எதிர்பார்ப்பு எளியதுதான் - எவ்வளவுக்கெவ்வளவு அலட்டலாய் அவங்க இங்க்லிஷ் பேசறாங்களோ அவ்வளவு சீக்கிரமாய் அவங்களை செலக்ட் செய்துடறா..!''

நவ்யா உற்சாகமாய் சிரித்தாள் -

ஆனால் ஊர் போவதை மிக ஆவலாய் எதிர்பார்த்த அவள், கண்ணீரும் ஆற்ற முடியாத துயரமுமாகவே அங்கு போக நேர்ந்தது!



## 7

''ஐயோ... என்னாச்சு... எப்படி? முந்தா நாள் கூட அப்பா எங்கூட பேசினாங்க.

சிரிச்சாங்களே...'' - கதறிய நவ்யாவை குடும்பத்தாரும் நண்பர்களும் தேற்றினார்கள்.

''ஆமாடா. நாதன் அவ்வளவு உற்சாகமாயிருந்தான். இந்த ஏப்ரல் மாசத்திற்குள்ளே - அதுவும் நீ வருவதற்குள் புதுக்கடை பூர்த்தியாயிடணும்னு ஓடி அலைஞ்சான்.''

''ஆனா அப்பா ஏன் மூங்கில்காட்டிற்குப் போனாங்க?''

''அங்குள்ள ட்ரைபல்ஸ்க்கு ரேஷன் கார்ட் கிடைக்கலை. மலையின் உட்புறத்தில் வாழும் ஆதிவாசிகளுக்கு அடிப்படை உரிமைகள் கிடைக்க நாமதானே உதவணும்னு இங்குள்ள கிராம அதிகாரிகளோடு கிளம்பினான். அவனுக்கும் ஒய்வில்லைனாலும், நலிந்தவர்க்கு உதவ ஒரு சந்தர்ப்பம் வர, அதைச் செய்யாமல் விட்டால் உறுத்தும்னு சொன்னான்.''

''முந்தின நாள் ராத்திரி கட்டட கணக்கு வழக்கைச் சரி பார்த்தபடி நடுராத்திரி வரை நாதன் விழித்திருந்ததாய் உங்கம்மா சொல்றாங்க. காலையில் கிளம்பும் அவசரத்தில் வழக்கமாய் போட்டுக்கற பி.பி. மாத்திரையை மறந்துட்டான். மூங்கில் காட்டு மக்களின் இருப்பிடம் கடும் பள்ளத்தில் இருக்கும். கம்பு ஊனியபடி, காட்டுக் கொடிகளை பிடிச்சபடி செங்குத்தான சரிவில் இறங்கணும்... பழக்கமில்லாதவங்களுக்கு ஒரு மணி நேரமாகும்...''

''அப்படிப் போய் திரும்பியவன், படபடப்பாய் இருக்குன்னு படுத்ததுதான்... கண் திறக்கலை.''

எப்போதும் மிடுக்காய் உடுத்தி அலங்காரமாய் நிற்கும் தாய், கணவனின் சடலத்தருகே திகைப்பை மட்டும் பூசியபடி சரிந்து கிடக்க தனது அறையில் குப்புறக் கிடந்து விம்மிய தங்கை காவ்யா, அக்காவைக் கண்டதும் அலறி அழுதாள்.

மூத்தவளான நவ்யாவிற்கு அந்தக் கணமே குடும்பப் பொறுப்பு தன் தோளில் ஏறிவிட்டது போலிருந்தது. சோகத்தை மீறிய மனகனம். இப்போது நடக்கவிருக்கும் காரியங்களும் தன் பொறுப்பு என்பது புரிய, அழுகையை விழுங்கிக் கொண்டு கேட்டாள் -

''அங்க்கிள் - இப்ப... இனி... அடக்கத்திற்கு என்னென்ன செய்யணும்?''

''எல்லா ஏற்பாடுகளும் ஆச்சும்மா. கல்லறைக்கான இடத்தைத் தேர்ந்தெடுத்து அட்வான்ஸ் தந்தாச்சு. இறுதி ஆராதனைக்குக் கோயிலில் சொல்லியாச்சு. வந்திருக்கும் உறவுக்காரங்க தங்க கெஸ்ட் ஹவுஸில் அறைகள் உண்டு...''

''ப... பணம் ஏதும்?''

''எந்தக் கவலையும் உனக்கு வேண்டாம்மா. எல்லாம் பார்த்துக்க ஆளிருக்குது.''

பிறகே நவ்யா தாயின் தோளைப் பற்றியபடி தானும் அமர்ந்தாள். நண்பர்களும், உறவுகளுமான கூட்டம் பெருகப் பெருக, நவ்யாவிற்கு அப்பா இல்லாத இந்த உலகில் தான் இனி அநாதை என்ற துக்கம் பொங்கியது. எத்தனை பேர் இருக்கட்டுமே... 'நவும்மா' என்றழைத்து மகளின் நோக்கமறிந்து பாசம் காட்டும் அப்பா இல்லாத உலகம் சூன்யம்தான். தான் துவண்ட வேளையில் தூணாய் நின்று தாங்கிய தந்தைக்கு எப்படி இப்படி திடும்மென போக முடிந்தது?

'பிறப்பு ஒரு விபத்தெனில்

மரணம் ஒரு மர்மம் -

இடைப்பட்ட வாழ்வோ பெருங்குழப்பம்' என்ற தத்துவத்தை அவ்வப்போது சொன்ன அப்பாவை, சாவு மர்மமாகவே கொண்டு போய் விட்டதோ?

மருகியவளின் தோளில் ஆதரவாய் ஒரு கை படிய, மெள்ளத் திரும்பினாள் -

திகைப்பில் உலர்ந்த அவள் கண்கள் பெருகி வழிந்தன.

''பரத்... பரத்... அப்பா... சொல்லாம போயிட்டார் பார்த்தியா? இனி அப்பா பேச்சை கேட்க முடியாதே... அவரப் பார்க்காம எப்படி பரத்?'' விம்மினாள்.

ஆறுதலாய் அவளது தலையை வருடிய அவன் கைகளில் முகம் புதைத்தாள்.

''தைரியமாய் இரு நவி...''

''என்னால முடியலையே...''

''உன்னால எதுவும் முடியும். அம்மா, காவ்யாவுக்காக நீ எதையும் செய்வே.''

விம்மியவள் துக்கத்தை விழுங்கினாள் -

இனி சமாளித்துதான் ஆக வேண்டும். அப்படி ஒரு நிர்பந்தம்.

ஒரு கொடும் கனவாய் தொடர்ந்த நிகழ்வுகள் முடிவிற்கு வந்தன. சேர்ந்த உறவுகள் எல்லாம் கலைந்த பிறகுதான் அவளுக்கு உறைத்தது - அப்பாவின் இறுதி காரியங்கள் கூட வெகு அருமையாகவே அமைந்து முடிந்திருந்தன. ஆலய ஆராதனை, அங்குள்ள வெள்ளை மலர் அலங்காரம், ஆறுதலான பாடல்கள், வந்தவர் களுக்கான கவனிப்பு எல்லாமே கச்சிதமாய்... ஆக குடும்ப நண்பரான கோவிந்த் அங்க்கிளிடம் போய் தன் நன்றியைச் சொன்னாள்.

''என்னம்மா - சொன்னதைச் செய்தேன் - இதுகூட செய்யலைன்னா நாங்க இருந்து என்னத்திற்கு?''



அப்பா இல்லாத வீட்டில் நுழைந்த தங்கை கதறினாள் - ''நவி நாம வேற எங்கேயாவது போயிடலாம் - இனி இங்கேயிருந்தா அப்பா ஞாபகத்தை... என்னால் முடி யாது.''

''இது தாத்தா காலத்திலிருந்து நம்ப ஊர் காவ்யா. அப்பா, ஏன் நாமும் சந்தோஷமாய் வாழ்ந்த இடம். அப்பா ஆசையாய் தன் தொழிலை விஸ்தீரிக்க முனைந்ததை மறந்து நாம எங்கேயும் ஓடக் கூடாது. பொறுப்பாய் கவ னிச்சு, அப்பாக்குப் பெருமை வந்தது போல வாழணும்.''

''நீ வர்ரதுக்குள்ளே கடைக்கு பெயிண்ட் அடிச்சிட துடிச்சாங்க. அப்பா - அதுவும் உனக்குப் பிடிச்ச இளநீலத் தில் உள் சுவர்கள் - வெளியே ராயல் ப்ளூ - கூடவே வெள்ளை - உன்னைக் கொடைரோடு போய் அழைச் சுட்டு வந்து, நேரே கடைக்குக் கூட்டிப் போகணும். உன் ஆச்சரியத்தைப் பார்த்து ரசிக்கணும்னு சதா பேச்சு.''

வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டவள் கேட்டாள் -

''நாம இப்ப அங்கே போய்... கடையைப் பார்க்கலாமா காவ்யா?''

''ம்ம் - டாக்ஸி ஒன்றை வரச் சொல்லவா?''

''வேணாம். பேசிட்டே நடப்போம்.''

''பரத் வந்தது ரொம்ப ஆறுதல்தான் இல்லியா நவி?''

''ம்ம். பள்ளியிலே எனக்கு சீனியர் - பல வருஷங் களாய் நமக்கு அடுத்த வீடு - நல்லாப் பழகி ரெண்டு குடும்பத்துக்குமே பிடித்துப் போனது.''

''சேதி கேள்விப்பட்டதும் ஓடி வந்துட்டாரே.''

பரத்தின் தாயிடம் நளினி ஓரிரு முறை சொல்லியே

"பரத் நல்ல பிள்ளை - என்ஜினியரிங் முடிச்சு நல்ல வேலையிலும் இருக்கான். அடுத்துக் கல்யாணந்தானே? எங்க வீட்டுல அருமையான பெண் இருக்கா மறந்துடாதீங்க'' என்று.

பரத்தின் தாயார் அதை அதிகம் ரசித்ததாய் தெரியவில்லை என்றாலும் பரத்தின் முகம் பளிச்சிட்டதை நவ்யா கூச்சத்துடன் கவனித்திருந்தாள்.

அவர்கள் மாற்றலாகி ஊர் மாறிய போதும் பரத் இவர்களுடன் அடிக்கடி பேசுவதுண்டு.

'என் ஆசை ஒரு அமெரிக்க எம்.பி.ஏ. டிகிரி நவி. பெரும்பாலான யுனிவர்ஸிடிஸ் ரெண்டு வருஷமேனும் வேலை - அனுபவம் இருக்கணும்ங்கறதாலதான் நான் கிடைத்த வேலையில் சேர்ந்துட்டேன். உதவித் தொகை கிடைத்தாலும் ஃப்ளைட் டிக்கெட்ஸ், தங்கன்னு பத்து, பன்னிரெண்டு லட்சம் ஆகும். சேமிக்கலாம், மீதித் தேவைக்குக் கடன் வாங்கலாம், ஆனால் ரொம்பத் தள்ளிப் போட முடியாது - பிறகு என் கனவு மெய்ப்படாமலே போயிருமோன்னு ஒரு கவலை. அமெரிக்க படிப்புடன் நான் வந்தால் மாசமே ஒன்றரை லட்சத்தில் இங்கே எனக்கு வேலை கிடைக்கும்... பிறகுதான் மற்றதைப் பற்றி யோசிக்கணும் - சரிதானே?'

என்றவன் சொல்ல இவளும் மென்னகையுடன் தலையாட்டியவள்தான். ஆனால் ஆண் துணை இல்லாமல் சமாளிக்க முடியுமா என்ற பதட்டம் இவளைப் போலவே தங்கைக்குள்ளும் தலை நீட்டியிருப்பது புரிந்தது. அதற்காய் பரத்தை அருகிலேயே இருக்கச் சொல்ல முடியுமா? அப்பா ஆசையாய் பெருக்கிய தொழிலை பற்றுக் கோடாய் கொண்டு வாழ வேண்டியதுதான்.



பெரும்பாலும் மௌனமாகவே நடந்தவர்கள் இருவருமே சாலையின் வளைவில் விழி உயர்த்தினார்கள் - நவ்யா அயர்ந்து நின்றாள். மிகக் கம்பீரமாய், கவர்ச்சியாகவும் கூட நிற்பது தங்களது கடையா? வெள்ளைச் சுவரை எடுத்துக் காட்டும் ஆழ்நீல விளம்புகளும் பளபள கண்ணாடிக் கதவுகளுமாய்... நெருங்கியவளுக்கு பளிங்குத் தரையோடு 'நவ்யா'ஸ் என்ற கருநீல பின்னணியில் தகதகத்த க்ரோமிய எழுத்துக்களும் தெரிந்தன.

''இதென்ன என் பெயர்?''

''அதுதான் நவி, டீல்.''

''டீலா? ஒப்பந்தம் யாரோடு?''

குழம்பியவளின் கண்கள் கடையின் சற்று உள்ளே மர அலமாரிகளைப் பொருத்திக் கொண்டிருந்த ஆசாரியிடம் ஏதோ சொல்லியவனைக் கண்டு உறைந்தன...



8

''இவன்... இவர்... இங்கே எப்படி காவ்யா?''

எழும்பாத குரலில் தன் தங்கையிடம் கேட்டாள். தமக்கையின் விழிகள் குத்தியிருந்த இடத்தைக் கணித்த காவ்யாவின் முகம் மலர்ந்தது.

''இவர்தான் - த க்ரேட் நகுலன் நரேந்தர் - நீ இவரைப் பார்த்ததாய் அப்பா சொன்னாங்களே?''

''அது சரி. ஆனால் இவர் எப்படி... இங்க நம்ப இடத்தில்?''

''இப்போ இது நம்ப இடம், நவி - அதாவது - நமக்கும் மிஸ்டர் நகிலுக்கும் இதில் சம உரிமை, பொறுப்பு எல்லாமுண்டு.''

மூத்தவளின் முகம் வெளுத்தது.

''எனக்குப் புரியலை - இங்க என்ன நடந்தது... நடக்குது?''

மறுபடி ஒரு துர்கனவினுள் புகுந்து விட்டவள் போல திணறினாள் - அக்காவின் தவிப்பில் தங்கையும் தடுமாறினாள் -

''ஏன் நவி - என்னாச்சு? அப்பா, அம்மா உங்கிட்டே எல்லாம் சொல்லிட்டிருந்தாங்களே - தினம்... பேசினீங் களே?''

''இந்த இவரைப் பற்றிய பேச்சே இல்லை.''

''இவரைப் பற்றி பேசினால் உனக்கு அந்த... பூமணி யின் ஞாபகம் வந்திடும்னு.. தயங்கினாங்களோ? நா... நானும் அதனால்தான் உன்னிடம் நகுல் ஸாரைப் பற்றிப் பேசலை... அவர் ரொம்ப அருமையான மனுஷன் நவி... பாவம் பூமணியின் விபத்து அவருக்கும்...''

முடிக்கத் தெரியாமல் அக்காவின் அருகே நின்றிருந் தாள் தங்கை. ''அதனாலத்தான் கேட்கறேன். நமக்கும் அவருக்கும் ஏன் தொடர்பு இருக்கணும்?''

''எதேச்சையாய் நீங்களும் நகுல் ஸாரும் மதுரையில் சந்திச்சீங்களாம். பிறகும் அப்பாவை பார்த்து அவர் பேச, அப்பாக்கு அவரை ரொம்பப் பிடிச்சு போச்சு. நகுலனுக்கும் அதே போலாக, அவர் மறுவாரமே கொடைக்கானல் வந்து, அப்பாவைக் கடையில் பார்த்து பேசியிருக்கார். பிறகு வீட்டுக்கு வந்தவருக்கு அம்மா, டீ, டின்னர்னு உபசரிப்பு செய்தப்போ, துளிர் விட்டதுதான் இந்த கடை - விஸ்தரிப்பு.''

''இங்க அவருக்கென்ன வேலை?''

''ஹி இஸ் எ ஜீனியஸ், நவி. நம்மை அடுத்திருந்த கடைகளின் வியாபாரத்தை அரை நாள் கவனித்தவர், அவங்களிடம் பேசி, கடைகளை விற்பது பற்றி அவர்களை யோசிக்கச் செய்துட்டார். அவரைப் பற்றி பேப்பர்ஸில் வந்த பேட்டியை அம்மா காட்டினாங்க - பஸ் கம்பெனியின் விருதை வாங்கினவர்னு சேஸிஸ் வாங்கி, அதை ஏ.ஸி. சொகுசு பஸ்ஸாய் உருமாற்ற முக்கால் கோடி ஆகுமாம் - அப்படி இவர் 70, 80 பஸ்ஸஸின் முதலாளி! அது போக, வேன்ஸ்...''

''வெறுமே பணம் சம்பாதித்தவர் என்பதால நீ இவரை மெச்சறே, காவ்யா.''

''அப்பாவும் நீயும் ஒரே ரீதியில் யோசிப்பீங்க, பேசுவீங்களே - அப்பா சொன்னது என்ன தெரியுமா?''

'நகுலன் பெரும் பணம் குவிச்சிட்டதால் நான் அவரைப் பற்றி பெருமையாய் நினைக்கலை. 'தீதின்றி ஈட்டல் பொருள்'ன்னு முன்னோர்கள் காட்டிய வழியில் முறையாக சம்பாதிச்சிருக்கார். இவரைப் போல நாமும் உழைத்து உயரணும்னு மற்ற இளைஞர்களுக்கு ஒரு உத்வேகத்தைத் தருபவர்னு - அப்பா பாராட்டினாங்க.''

''அதில் எனக்குப் பிரச்சனையில்லை காவ்யா. ஆனா சென்னையில் அத்தனை சாதித்தவர், தன் நிர்வாகத்தை நடத்த நேரமில்லாதவர், இங்கே ஏன் வரணும்? அதுவும் நம்ம குடும்பத்தின் வியாபாரத்தில் ஏன் தலை நீட்டணும்?''

'அதை நீ அவரைத்தான் கேட்கணும்' என்று தனக்குள் ளேயே முணுமுணுத்த காவ்யா, நகுலன் தங்களைப் பார்த்து விட்டு, நெருங்கி வரவும் புன்னகைக்க முயன்றாள் -

ஆனால் அப்பாவை சமீபத்தில் இழந்திருந்த அதிர்ச்சி, அவளது முயற்சியைத் தோற்கடித்தது.

தளர்ந்த தோள்களும் சோர்ந்த விழிகளுமாயிருந்த இரு பெண்களிடம் வந்து நின்றவன் சின்ன குரலில் பேசினான்.

''என் ஆழ்ந்த அனுதாபங்கள் - இது ஒரு கொடூரமான ஒற்றுமை நவ்யா. நான் உங்களை சந்தித்ததும் ஒரு இழப்பில், இப்ப மறுபடி அதே போலொரு சந்தர்ப்பத்தில் மறுபடி பார்த்துக்கறோம்.''

நவ்யாவிற்கு 'சுருக்'கென்றது.

இது விதியின் விளையாட்டா அல்லது இவன் ஆடும் தப்பாட்டமா? அதாவது தன்னைப் பழி வாங்குகிறானோ?

'நீ என் வீட்டில் விளக்கேற்ற வந்தவளை அழித்தது போல, நான் உன் குடும்பத்தின் தலைவன் உலகத்திலிருந்து அகற்றி விட்டேன் என்ற எக்களிப்புடன் பேசகிறானா?'

புருவம் சுருங்க யோசித்தவள், ஏதேனும் பேச வேண்டுமென முயன்று மெள்ள கேட்டாள் -

''நீங்க எப்போ கொடைக்கானல் வந்தீங்க?''

''நாதன் அங்க்கிள் இறந்த சேதி கேட்டதுமே கிளம்பிட்டேன். எனக்குமே அது ரொம்ப அதிர்ச்சிதான். சமீபமாய் ஏற்பட்ட பழக்கம்தான் என்றாலும், பேசி ரொம்ப நெருங்கிட்டோம். பிஸினஸ் சம்பந்தமாய் நானும் உங்கப்பாவும் பேசும்போது அவர் மனம் விட்டுச் சொன்னார் -

'இதுவரை ரெண்டும் எனக்குப் பெண்களாய் பிறந்தில் நான் துளிகூட வருந்தியதில்லை, நகுலன். ஆனா இப்போ உன்னோடு வியாபாரத்தில் புது முடிவுகளை எடுத்து, சேர்ந்து செயல்படும் போது, ஆண் பிள்ளையும் தேவையென்று படுது' - என்று.''



இதைக் கேட்ட நவ்யா மட்டுமல்ல, காவ்யாவுமே சற்று சுணங்கியது போலிருக்க சற்றே தலை குனிந்து விளக்கினான் -

''ஸாரி - தப்பா எடுத்துக்க வேணாம். அது ஒரு 'மேன் டு மேன் டாக்' என்ற நெருக்கத்தை விளக்க நான் அதைச் சொல்லிட்டேன். கூடவே அங்க்கிள் சொன்னதுதான் ஆச்சரியம். தன் முடிவு நெருங்கிடுச்சுன்னு உணர்ந்தது போல,

'நானில்லாமல் என் குடும்பத்து பெண்கள் தடுமாறிடக் கூடாது. ஆனால் எனக்கு இப்படி உடன் நின்ற நீ அவங்களுக்கும் உதவுவாய் இல்லை?'ன்னார். அதுதான் நான் செய்தி கேட்டதுமே ஓடி வந்தேன். அடக்கத்திற்கான ஏற்பாடுகளை கவனிச்சேன்.''

ஆக அத்தனையும் பொறுப்பெடுத்து செய்தவன் நகுலன்!

''அப்ப... ஆன செலவுகளை எல்லாம்.''

''ப்ளீஸ்..'' - கைகளைக் கட்டியிருந்தவன், மறுக்கும் பாவனையில் கைகளைப் பிரித்து உயர்த்தினான். ''நாம் இப்போ பார்ட்னர்ஸ். கணக்கு வழக்கை நான் முறையாய் எழுதிடுவேன். ஆக எதையும், முக்கியமாய் இதில் பிரித்து, கணக்குப் பேச வேண்டாம். உங்கப்பாவோடு மிக உற்சாகமாய் உங்க கடையைப் பார்வையிட வந்திருக்க வேண்டிய நீங்க... ஆனால் நாதன் ஸார் ரொம்ப அருமையான அப்பாதான். தன் மறைவு கூட தன் பிள்ளைகளுக்கு இடையூறு செய்து விடக் கூடாது என்பது போல உங்க பரீட்சைகள் முடிந்த பிறகுதான் இந்த அசம்பாவிதம் நேர்ந்திருக்கிறது..''

அவன் பேச்சில் நவ்யாவிற்கு எரிச்சல்தான். தங்கள் தகப்பனின் கரிசனையை இவர் என்ன எடுத்துச் சொல்

வது? தங்களை விடவும் தானே அப்பாவை அறிந்தது போலல்லவா அலட்டுகிறார்?

நவ்யாவிற்குக் கடைக்குள் போகும் மனநிலை இல்லை.

அவள் மனது குழம்பிக் கிடந்தது.

நகுலன் எப்போது இங்கு வந்தான் என்றவள் கேட்டதற்கு வேறு ஒரு காரணம் இருந்தது.

அப்பா இறப்பதற்கு முன்பே அவன் இங்கு இருந்திருந்தால், அவர் சாவிற்கு அவனே காரணமோ என்ற ஒரு சந்தேகம்!

ச்சே... ஏன் இத்தனைக் கீழான சிந்தனைகள் தனக்குள்...?

அறியாமல் பூமணியின் சாவிற்குத் தான் காரணமானதால், நகுலன் தன் தந்தையைத் திட்டமிட்டு அழித்ததாய் எண்ணுவதெல்லாம் அதிகப்படி... தனக்குப் பைத்தியம் பிடித்துக் கொண்டிருக்கிறதோ?

அப்பா தன் பி.பி. மாத்திரையை அன்று எடுத்துக் கொள்ளவில்லை. அசந்த உடம்பை, கடும் அலைச்சல் பாதித்து விட்டது - என்பதுதான் உண்மை. தவிர அப்பா இறந்த சேதி கேட்டு விட்டே நகுலன் இங்கு வந்திருக்கிறார் - அப்படி விரைந்து வர வேண்டிய தேவை இல்லாமலேயே... வந்தது மட்டுமின்றி இக்கட்டான சமயத்தில் அத்தனை உதவிகளை செய்தவரைத் தான் சந்தேகப்பட்டது தவறுதான்...

ஆனால் விழுந்தடித்து வந்து, இப்படி எடுத்து செய்ய வேண்டியதும் தான் ஏன்..?''

எஞ்சிய பொழுதை ஓட்ட இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களுக்காய் காத்திருக்கும் நிலையில் உள்ளவரல்ல நகுலன்.

மேலும் சாதிக்கும் வெறி, வேகத்தில் ஓடிக் கொண்டிருப்பவர்.

''உங்க வேலையை சென்னையில் யார் கவனிச்சுக்கறாங்க?''

நவ்யா கேட்ட தொனியில் 'உன் வேலையை விட்டு இங்கே உனக்கென்ன வேலை?' என்ற எள்ளலிருந்தது.

''நம்பகமான நிர்வாகிகள், பல வருடங்களாய் என்னுடன் பணியாற்றும் ஸ்டாஃப் உண்டு நவ்யா - உன கரிசனைக்கு நன்றி'' என்று சற்று இறுக்கமாகவே பதிலளித்தவன் அவளை ஆறுதல் படுத்துவது போல,

''இன்னைக்கு நான் கிளம்பிட வேண்டியதுதான். அதான் கடையில் வேண்டிய திருத்தங்களைச் சொல்லிட்டிருக்கேன் - கொஞ்சம் தடைபட்டாலும் 15 நாட்களுக்குள் நாம 'நவ்யா'ஸை இயங்க வைக்கணும்'' - என்றான்.

''எனக்கு அந்தப் பெயரில் சம்மதமில்லை - 'நாதன்ஸ்'ன்னு மாற்றணும்'' என்றாள் நவ்யா சற்று கடுப்பாய்.

ஒரு கணம் தயங்கியவன் ''உன்னிஷ்டம்'' என்று சம்மதித்தான்.

''நீங்கள் இனி இந்தப் பக்கமே தலை காட்டாமல் ஒதுங்கி விட வேண்டும்'' என்றிவள் உத்தரவிட்டாலும் இப்படியே கேட்டுக் கொள்வானா?' என்ற கேள்வி உள்ளே உறுத்தியது.

''போகலாமா காவ்யா?'' என்றிவள் திரும்பி விட, தங்கையும் மறுக்காமல் பின் தொடர்ந்தாள். வீட்டிற்கு வந்ததும் தன் அறைக்குள் புகுந்து கட்டிலில் குப்புறப் படுத்தவளின் உள்ளே குமுறலாய் பல எண்ணங்கள் -

நகுலன் இவர்களது வாழ்வில் புகுந்திருந்தது அவளை மிக சஞ்சலப்படுத்தியது.

அப்பாவின் மரணத்தைப் போலவே இதுவும் சிறிதும் எதிர்பாராத ஒரு திருப்பம்... கடும் மாற்றம்.

தன் மனதுள் புரண்ட உணர்வுகள் என்ன?

பூமணிக்கான தன்னை நகுலன் பழிவாங்கப் போகிறான் என்ற பயமா? அல்லது பூமணி விபத்தைப் பற்றிய ஞாபகங்களை, கல்லூரி வாழ்வின் அவசர ஓட்டத்தில் மங்கிக் கொண்டிருந்தவையை, இவன் மறுபடி தோண்டி எடுத்து முழுதாய் முன் நிறுத்துவதாலா?

அந்த விபத்து நேராமலே போயிருந்தாலும் கூட, இப்படி ஒரு புதியவன் ஏனிப்படி வந்து தங்களது வாழ்வில் சேர்ந்து கொள்கிறான்? என்ற கேள்வி நிச்சயம் மருட்டியது

போதுமான செல்வமும் செல்வாக்குமுள்ள நகுலனுக்கு இந்த சிற்றூரில் என்ன ஈர்ப்பு?

சில மாதங்களேப் பழகிய தங்கள் தந்தையின் இறுதிச் சடங்கைப் பொறுப்பேற்று நடத்துமளவில் என்ன நெருக்கம்?

தன் கண்கள் அவனது பார்வையைச் சந்தித்த போது அது என்னவோ சொல்ல முயன்றதே - அது என்ன?

எண்ணங்கள் மாரீச மானாய் ஓட, அவற்றின் பின்னே மூச்சிரைக்க ஓடியவள், அயர்ந்து தூங்கிப் போனாள்...



9

புது வடிவிலான குஷன் உறையை மிகக் கவனமாய் வெட்டிக் கொண்டிரு தாள் காவ்யா. உதடுகளைக் கடித்தப அந்த வேலையை முடித்தவள் முகத்தில் உன்னிப்பு மாறாமலேயே அக்காவைக் கடிந்து கொண் டாள் -

''ஆக இவ்வளவு நடந்திருக்கு - நீ எங்கிட்ட எதையுமே சொல்லலை பார்த்தியா? மதுரையில் நவ்யாவோடு போனப்ப அங்கே நகுலனை சந்திச்சேன்னு அப்பா பொதுவாய் சொன்னதுதான்.''

''அவரைச் சந்தித்தது பூமணியின் வீட்டில். அந்தப் பெரியவங்களை போலீஸ் ஸ்டேஷன், விசாரணைன்னு இருந்த சமயம் நான் நிமிர்ந்தும் கூட பார்க்கத் துணியலை. அவங்க பார்வை என்னைப் பொசுக்கிச் சாம்பலாக் கிடுமோன்னு ஒரு நடுக்கம். நிமிராத என் கண்ணில் இந்த நகுலனும் படலை. தப்பித்தோம்னு இருந்த என்னை அப்பா பூமணியின் வீட்டுக்கேக் கூட்டிப் போனது கொடுமையாய்தான் தோணுச்சு. அதிலும் நகுலன் என்னைப் பார்த்த விதம்... அதிலும் துரதிர்ஷ்டம். நான் அவங்க வீட்டை விட்டு வெளியேறும்போது சிரித்துத் தொலைத்ததுதான்! இவர் மனசில் ஏதோ வன்மம் இருக்குது காவ்யா - இல்லைன்னா ஏன் அன்று மாலையே நம்ப அப்பாவை நகுலன் பார்த்துப் பேசணும்? மறு வாரமே கொடைக்கானல் வந்து நம்மைத் தேடிப் பழகணும்... முக்கியமாய் உதவணும்?''

''எனக்குப் புரிஞ்சிருச்சு நவி.''

கத்திரிக்கோலை உயர்த்தியபடி அறிவித்தாள் இளையவள்.

''என்னது?''

''காரணந்தான்! அவர் - அதாவது நகுலனுக்குப் பூமணியைப் பிடிக்கலை - அல்லது பெரியவங்க வற்புறுத்தலுக்காய் கல்யாணத்திற்கு சம்மதிச்சிருப்பார். ஆக அந்த விபத்தில் உனக்கும் ஒரு பங்கு இருந்ததோ என்ற நன்றியில், அவர் நம்மிடம் இத்தனை நன்றி பாராட்டுகிறார் - எப்படி?''

''சகிக்க முடியாத கற்பனை! அவரை யாரும் வற்புறுத்த முடியாது - பக்கா ஸெல்ஃப்-மேட் மேன். தவிர அந்தப் பூமணியின் படங்களைப் பார்த்தேன் காவ்யா - ரொம்ப அழகான பெண். ஆக இனி இப்படி அதிக பிரசங்கியாய் உளராதே.''

''சரி மேடம். ஆனால் பரத் கிளம்பும் முன்னே உன்னிடம் ஏதோ உளறிட்டு நின்னாரே - அது என்ன?''

காவ்யா, நவ்யா - பரத்தை இணைத்து கேலி பேசுவது அடிக்கடி நிகழ்வது தான். அவர்களது அம்மா நளினி கூட அந்த உறவை ஆட்சேபிக்கவில்லை - தன் மூத்த மகளுக்கு பரத் போன்ற ஒரு வரன் அமைந்து விட்டால் அது பெரும் பாக்கியம் என்பது போல குறிப்பாய் பேசிய தாய்க்கு தன் இளைய மகளுக்காய் - ராஜகுமாரனே வருவான் என்ற நிச்சயமிருந்தது!

காவ்யாவும் 'எனக்கெல்லாம் உள்ளூர் மாப்பிள்ளை சரிப்படாது - பச்சை கண்ணுள்ள ஒரு ப்ரெஞ்ச்காரன்தான்' என்பாள்.

ஆனால் இன்று கேலியாய் பேசுவது போலிருந்தாலும் காவ்யாவின் கண்களில் கலக்கமிருந்ததை மூத்தவள் கவனித்தாள்.

அக்காவும் கல்யாணமாகி தங்களை விட்டுப் பிரிந்து விடுவாளோ என்றா?

''பரத் தன் மேற்படிப்பு பற்றிதான் பேசினான். அதற்காய் எழுதிய தேர்வுகள், பணப் பிரச்சனை, வாய்ப்புன்னு.''

''பரத்தின் பெற்றோர் மதுரையில இருந்தும் வரவேயில்லை...? அதுவும் பல வருஷங்களாய் நம்மோடு பழகினவங்க. அப்பா அவங்களுக்காய் எத்தனை செய்திருப்பாங்க?''

''ஷ்... அதான் பரத் வந்தாச்சுல்ல?'' ஒரு பத்திரிகையை எடுத்துப் புரட்டிய நவ்யாவிற்குத் தங்கை சொல்ல வந்தது புரியாமல் இல்லை. பரத்தின் பெற்றோருக்கு அவன் இவர்களுடன் நெருங்கிப் பழகுவதும், நளினியின் 'சம்பந்த' பேச்சும் பிடிக்கவில்லை என்பது இவளும் யூகித்திருந்ததுதான்.

பெற்றோர் சம்மதிக்காவிட்டால் ஓடிப்போய் விடுவது என்று துடிக்கும் காதலில்லை அவர்களுக்கிடையே பல ஆண்டுகள் தொடர்ந்து பழகியதால் முகிழ்த்த நேசம் - தாங்கள் சேர்த்தமைக்கும் வாழ்வு தடுமாறாமல் போகுமே என்ற தெளிவு - அவ்வளவுதான்.

கூடவே இளமைத் துடிப்பும் இருந்ததால் ஒருவரை மற்றவர் பார்க்கும்போது ஒரு புத்துணர்வு - சில சமயம் புளகாங்கிதம் கூட நேரும். அதிக வார்த்தைகளின்றி பழக்கத்தினாலே கெட்டிப்பட்ட உறவு அது. ஆனால் பரத் இம்முறை தகப்பனை இழந்த இவர்கள் குடும்பத்தின் எதிர்காலத்தை விட தன் மேற்படிப்பு பற்றியே அதிகம் கவலைப்பட்டது நவ்யாவிற்கே சிறு ஏமாற்றம்தான்.

ஆனால் கடந்த ஒரு வாரமாய் கடையின் கட்டுமானத்தில், அலங்காரத்தில், ஈடுபட்ட இரு பெண்களுக்கும் மற்ற ஏமாற்றங்களை பற்றி யோசிக்க நேரமில்லை. விற்பனைக்குரிய பொருட்களை - அதன் தரத்தை நிர்ணயித்தவர்கள் - அவற்றை வரவழைக்க 'ஆர்டர்' தந்தார்கள். சென்னையிலிருந்து நகுலன் இவர்களுக்கு நிர்வாகத்தில் உதவ அனுப்பிய கோபிநாத்தைச் சற்று சந்தேகத்துடனேயே நவ்யா நடத்தினாலும் விரைவில் அவர்களது நம்பிக்கைக்குப் பாத்திரமாகிக் கொண்டான் அந்தக் கெட்டிக்காரன்!

நாகரீகமான ஆங்கிலத்தில் அவன் நயமாய் நளினியுடன் பழகியதில் அவள் உடனேயே நகுலனுக்கு போன் செய்து.

''நீங்க அனுப்பிய மானேஜர் தகுதியானவர்தான் நகுல் - ஸ்மார்ட் அண்ட் ஸ்டெர்ய்ட்! எனக்குச் சம்மதம்'' என்றுவிட்டாள்.

அத்தனைக்குப் பாந்தமாய் பழக, பேச தெரிந்திருந்தது கோபிநாத்திற்கு!

''பெண்கள் ஆண்களை விட திறமையானவர்கள், நுட்பமானவர்கள் மேம் - என் வேலை உங்க மூன்று பேரையும் திருப்திபடுத்தணும்னு நான் ஆண்டவனை வேண்டிக்கிறேன்.''

''சும்மா அளக்காதீங்க கோபி ஸார் - எம்.பி.ஏ. படிச்சிருக்கீங்க - பத்து வருஷ அனுபவம் வேற'' - என்றாள் காவ்யா.

''என்ன இருந்தென்னம்மா - பெண்களின் எதிர்பார்ப்பிற்கு ஆண்கள் உயர முடியறதில்லையே - வரம் தரும் பூதம் பற்றிய ஒரு கதை உங்களுக்குத் தெரிஞ்சிருக்குமே?''

''அதென்ன?''

''கடற்கரையிலிருந்த ஒரு பெண் தற்செயலாய் கூழாங்கல்லை சுரண்ட அதிலிருந்து ஒரு பூதம் வந்து...''

''என்னை விடுதலை செய்ததற்காய் உனக்கொரு வரம் தர்றேன்னு சொன்னதா?''

''பாருங்க - பெண்களுக்குத் தெரியாத விஷயமே இல்லை - சரியா சொல்லிட்டியேம்மா?'' கோபிநாத் சிலாத்தான்.



''ஆனால் சொச்ச கதை தெரியாது - சொல்லிடுங்க.''

''அந்தப் பெண், என்னோடிருக்கும் என் நாய்க்குட்டி பேசணும், பாடணும் என்றாளாம். பூதம் 'எனக்கு அத்தனை சக்தி கிடையாதே'' என அந்தப் பெண் 'சரி, அப்படியானால் அன்பானவனாய், கெட்டிக்காரனாய், என் தேவைகளில் உதவுபவனாய், கடுமையாய் உழைத்து என் குடும்பத்தையும் மதிப்பவனாய், பொய்யே சொல்லாத ஒரு ஆணை எனக்குக் கணவனாய் தேடிக் கொடு' என்று உத்தரவிட பூதம் அரண்டு போய்,

''உன் முதல் ஆசையே பரவாயில்லை - உன் நாய் குட்டி எங்கே?'' என்றதாம் அவசரமாய்.

வழக்கமாய் இது போன்ற குட்டிக் கதைகளை ரசித்து சிரிக்கும் நளினியின் கண்கள் கலங்கியிருந்தன.

''என்னம்மா?''

''உங்கப்பாவை நினைச்சுகிட்டேன் நவி. இப்படிப்பட்ட ஒரு அற்புத மனுஷரில்லையா அவர்? ஆனா அதை அவர் போன பிறகுதான் நான் முழுமையாய் உணர்ரேன்... அது என் முட்டாள்தனம்...''

''ஆமா மேம் - நகுல் ஸாரும் சொன்னார் - நாதன் சாரைப் போல மனிதர்களைக் காண்பது அபூர்வம் - எனக்கந்த பாக்கியம் இருந்ததுன்னு.''

ஏற்கெனவே நகரங்களில் இது போன்ற அங்காடியை நிர்வகித்த கோபிநாத்தின் உதவி இவர்களது வேலையைக் கச்சிதப்படுத்தியது, துரிதமாக்கியது.

''பரவாயில்லை. குறித்த நாளில் அதாவது கோடை சீசனுக்கு முன் நாம நம் ஸ்டோர்ஸை ஆரம்பிச்சுடலாம் போல...''

''தாங்க்ஸ் டு நகுல். சரியான நேரத்தில் சரியான நபரை - அதான் கோபியை - அனுப்பியதால் இது சாத்தியமானது'' என்று சிலாகித்த நளினி தன் பெண்களிடம் தனிமையில் நகுலனுக்கு மேலும் பல நன்றிகளைத் தெரிவித்தாள்.

'அவரது அத்தனை வேலையிலும் நம்ப வேலையையும் இழுத்துட்டு நகுல் ஓடறது மனிதாபிமானத்தால் இழப்பின் அதிர்ச்சியில் நாம் உறைந்து போயிடக் கூடாது என்பதற்காய்தான் இப்படித் துரிதப்படுத்தறார் - நாம் பிஸியாய் இருந்தால் துவண்டு போயிட மாட்டோம்ன்ற நம்பிக்கை - காட் பிளஸ் ஹிம்.' என்று.

ஆனால் நவ்யாவின் மனசு தெளியவில்லை என்பதை அவளது முகமே காட்டித் தர, இளையவள் கேள்விகளால் துருவினாள் -

''இன்னும் உன் பயம் தீரலை இல்லியா? நவி? நகுலனைச் சந்தேகப்படறே?''

''வாழ்வின் திருப்பங்கள் அப்படி காவ்யா - ஆறு மாசங்களுக்கு முன்னே நம் வாழ்வில் இந்த மாற்றங்களை நினைச்சுக் கூட பார்த்திருக்க முடியாதே - அப்பா இல்லாத வெறுமையோடு, இப்படி ஒரு பளபளப்பான கடையின் பொறுப்போடு...''

''அட்டகாசமான ஒரு பார்ட்னரோடு...!''

நவ்யா தங்கையைக் கண்டிக்கும் தெம்புமின்றி எங்கோ வெறித்தாள் -

''ஏமாற்றுபவர்களை விட ஏமாறுபவர்கள் பெரிய குற்றவாளிகள் என்பாங்க - நான் அதை ஏத்துக்கறேன்.''

''ரப்பிஷ். நம்பி ஏமாறுவது ஒரு குற்றமா? கொஞ்சம் முட்டாள்தனம் - அவ்வளவுதான்.''



''அந்த முட்டாள்கள் சேர்ந்துதான் ஒரு கிரிமினலை உருவாக்கிடறாங்க. ஒரு குட்டிக் கதை சொன்னால் உனக்குப் புரியும்.''

''அட கோபி ஸாரைப் போல நீயும் அசத்துற - சொல்லு.''

''ஒரு அலட்டலான பொண்ணு கடை வீதிக்குப் போனாள் - தான் வளர்க்க ஒரு பறவை வாங்க நினைச்சவளுக்கு அதிக விலை குறித்திருந்த ஒரு பறவையின் மேல் கவனம் விழுந்திடுச்சு. இவள் விசாரிக்க, விற்பவன் சொன்னானாம் -

''இந்தப் பறவை வெறுமே கூவாதம்மா - சாஸ்திரிய, கஜல் பாடல்களைப் பாடும்''னு.

அவசரமாய் சில ஆயிரங்களுக்கு அந்தப் பறவையை வாங்கிப் போனவள் மறுநாள் ஆத்திரத்துடன் வந்து,

''என்னய்யா பறவை கூவக் கூட இல்லியே''னாளாம்.

''ஆச்சரியமாயிருக்கே - சரி அந்த மணியையாவது கொத்துகிறதா அம்மணி?''

''எந்த மணி?''

''சரியாப் போச்சு - கூண்டில் ஒரு மணியைக் கட்டினால், அதைக் கொத்தியபடி, அந்த லயத்திற்கேற்பதானே இந்த பறவை பாடும்?'' ஆக மணியைப் பல நூறுகளுக்கு வாங்கிக் கொண்டவள் பிறகு பறவை உட்கார்ந்து ஆட ஒரு ஊஞ்சலையும், அதன் தனிமைத் தீர என்று கூண்டிற்குள்ளே ஒரு கண்ணாடியையும் வாங்கி வைத்தும், கடைசி வரை அந்தப் பறவை பாடாமலேயே உயிரை விட்டது!

அக்கா சொன்ன கதையில் மூழ்கிப்போயிருந்த தங்கை, ''ச்சொ ச்சொ'' - அனுதாபப்பட்டாள்.

கடைக்காரனிடம் கடுப்புடன் வந்த அந்தப் பெண்,

''என் பறவை பாடவே இல்லை என்றாலும் அது சாகும் முன்பு பேசியது -

'விற்றவன் எனக்கு உணவிடச் சொல்லலியா? இனியும் இது போல யாரிடமும் ஏமாறாதே' - என்று.''

''ஐயோ.. பாவம் நவி...''

''யார் பாவம்?''

''செத்துப் போன பறவைதான் - அந்த பெண்ணில்லை.''

''அவளைப் போல நாம ஏமாறத் தயாராய் நிற்கிறோமோன்னு எனக்கொரு சந்தேகம். உதவுவது போல வந்து நம்மிடம் இருந்ததையும் உருவிவிட்டால்... நம்ப நிலைமை? ஸிட்டியில் 'ஓஹோ'ன்ர பிஸினஸ் உள்ளவருக்கு இந்த ஊரின் மேல், வருஷத்தின் சில மாதங்களே விற்பனையாகும் இங்கே என்ன பற்றுதல்? நாம யோசிக்கணும் காவ்யா.. நான் அம்மாவை பயங்காட்ட விரும்பலை.''

இப்போது இளையவளின் கண்களிலும் கவலை தெரிந்தது.

''ஏதோ ஒரு அபிமானத்தில் உதவறார் - நம்ப ஊரின் அழகு அப்படின்னு நினைச்சேன். ஆனா நீ இவ்வளவு சொன்ன பிறகு... நகுலன் சார் இங்கே வருவாரில்லையா? அப்ப நீயே அவர்ட்ட பேசிடு நவி. கேட்க வேண்டியதை எல்லாம் கேட்டிடு!''



## 10

கடை திறப்பு விழாவிற்கு உறவு, நண்பர் வட்டத்தோடு, உள்ளூர் மக்களை எல்லாம் வருந்தி அழைக்க வேண்டி



யிருந்தது - அவர்களின் வாடிக்கைதானே இவர்கள் வியாபாரத்திற்கான அடிப்படை! அந்த மும்முரத்தினூடே, திறப்பிற்கு முந்தின நாள் வந்து சேர்ந்த விதவிதமான உணவு பொருட்களை ஒளியில் நனைந்த கண்ணாடிப் பேழைகளின், சரிவான தட்டுக்களில் அடுக்க, கடை கண்ணுக்கு நிறைவாய் பட்டது. அலங்காரப் பொருட்களை விற்க, அதற்குத் தோதான அலங்காரத்தில் நின்ற பெண்கள், மினுமினுப்பான ட்ராலி, கூடைகள் என்று அத்தனையும் கச்சிதமாய்.அந்த சீதோஷ்ணத்திற்கு ஏ.ஸி. அவசியமில்லை என்பதால் இதமான இசை மட்டும் சேர்க்கப்பட்டது.

கருநீல ஸுட்டில் கோபிநாத் உற்சாகமாய் சுழன்றான் கம்ப்யூட்டர் பில்லிங் முறையில் கல்லாவில் நின்றவர்களுக்கு பயிற்சி தந்திருந்தவன்.

''நகுல் ஸார் ஒரே நாள்தான் வர முடியுமாம் - ஆனால் நீங்க எப்போ தேவைன்னாலும் அவரது மொபைலில் தொடர்பு கொள்ளலாம் மேம்'' என்ற தகவலையும் தந்தான்.

அதில் நவ்யாவிற்கு சற்று ஏமாற்றம்தான்.

வருபவர்களை வரவேற்க, வியாபாரத்தைக் கவனிக்க, ஏதேனும் பிரச்சினை எழும்பினால் அதை முக மலர்ச்சியுடன் சரி பண்ண, என்று முதல் நாள் ஓடியேப் போகும். இதில் நகுல்னிடம் இவள் பேசுவது எப்படி?

காவ்யா சொன்னது போல, 'கேட்க வேண்டியதெல்லாம் கேட்க நேரம் இருக்குமா?

இல்லைதான்.

தாயிடம் நகுலன் அடிக்கடி போனில் பேசிய போதும், நவ்யாவிற்கு அவனிடம் தன் தனிப்பட்ட விஷயங்களை அப்படி அவனிடம் பேச மனமில்லை.

'கணக்கு வழக்குகளை தினம் நீங்க பார்த்திடுங்க ஆன்ட்டி. எதும் புரியாவிட்டாலும் நீங்க தொடர்ந்து பார்ப்பது நல்லது. அதாவது உங்கள் கவனம் கடையில் இருப்பது ஊழியர்களுக்குத் தெரியணும். வாரம் ஒரு முறை கணக்குகளை நானும் என் லேப்-டாப்பில் பார்த்து விடுவேன். தவிர கோபிநாத் 'நாதன்'ஸ் சீராய் சுழலும் வரை அங்கேயே இருப்பார் கவலையில்லை' என்று நகுலன் தந்த தைரியத்தில் நளினியும் முடிந்தளவில் முகத்தை மலர்வாய் வைத்தபடி கடையின் திறப்பு விழாவிற்குத் தயாரானார். பிரார்த்தனையுடன் திறக்கப் பட்ட ஸ்டோர்ஸின் முதல் விற்பனையை நகரின் பெரிய மனிதர் ஆரம்பித்து வைக்க, பிறகு நின்று நிதானிக்க முடியாத அளவில் விற்பனை பிய்த்தடித்தது!

விடுமுறை நாட்களில் நவ்யா அப்பாவுடன் நின்று கடையின் விற்பனையில் உதவியதுண்டு.

ஆனால் வருவது அளவான கூட்டம் -

குழாயடியில் நின்று குளிப்பது போல அது எனில், ஸ்டோர்ஸின் இன்றைய வியாபாரம் காட்டருவியின் பொழியல்தான்!

சற்று மூச்சுத் திணறச் செய்தது!

கம்ப்யூட்டரின் தட்டலோடு குவிந்த பணம் தெம்பூட்டியது!

''வாங்க மிஸ்டர். நகுலனை சந்திக்கணும் நீங்க. தொழிலில் பார்ட்னர் ஆனாலும் எனக்கு மகன் போல''. என்று பழைய வாடிக்கையாளர்களை நகுலனிடம் கூட்டிப்போய் அறிமுகப் படுத்தினாள் நளினி.

இளம் சாம்பல் நிற ஸூட்டில் நின்றவன், அத்தனை பேருக்கும் இதமான முறுவலையும் பதமாய் சில வார்த்தைகளையும் தந்தான்.



அவ்வப்போது அவன் கண்கள் நவ்யாவைத் தேடித் தொட்டுக் கொண்டாலும், நிதானமாய் பேச வாய்க்கவில்லை.

அவன் தன்னைப் பார்த்த போதெல்லாம் தடுமாறியவள், மறுபடி நேராக சில நிமிஷங்கள் ஆயின.

முதல் வாரம் சற்றுத் திணறிய கடை சிப்பந்திகள், மறுவாரம் இயல்பாய் சுழல கற்று தேறிவிட்டார்கள்.

ஜூன் மாதம் பருவ காற்றும், சாரலும் வந்த போது, 'சீஸனை' நல்லபடி முடித்த சுக அயர்விலிருந்து நளினியின் குடும்பம்.

மே மாதம் முழுதும் நகுலன் அங்கு வரவில்லை என்றாலும் சிறு பிரச்சனைகளுக்கும் அவனிடம் தீர்வு இருந்தது.

காவ்யா அவள் க்ரூப்பில் முதல் மாணவியாக தேறியிருந்தாலும், ''நான் படிக்க வெளியூர் எல்லாம் போக விரும்பலைம்மா - இங்கேயே உங்களுடனேயே'' என்று ஆரம்பிக்க, நளினி தடுத்தார் -

''நோ காவ்யா. படிப்புதான் உன் வருங்காலத்திற்கான மூலதனம் - வெறுமே பாடங்களைச் சொல்லலை நான். கல்லூரி, ஹாஸ்டல், பிரயாணம் அனுபவங்களை நீ இழந்துடக் கூடாது. நவ்யா என்னோட இருப்பா - நகுலனின் உதுவி வேறு நான் சமாளிச்சிடுவேன்.''

இதில் நவ்யாவும் தாயின் கட்சிதான்.

''பாரிஸில் போய் படிக்க ஆசைப்பட்ட நீ, சென்னைக் கல்லூரி வரை கூட போகலைன்னா - எங்க மனசே ஆறாது, காவ்யா.''

''நகுலன் ஸாரும் போனில் இதையேத்தான் சொன்னார். வெளிநாட்டில் போய் படிப்பதற்கான எக்ஸாம்ஸை நான் எழுதினால் செலவு அவர் பொறுப்பென்று.''

''ஷ்.. காவ்யா.. அவர்.. யாரிடமோ போய் நாம கையேந்து நிக்கிறதா?''

நவ்யாவின் அடிக்குரல் சீறலை இளையவள் சட்டை செய்யவில்லை. ''கடனாய் வாங்கி, அதை வட்டியோடு திரும்பத் தந்திருப்பேனே நவி - பிறகென்ன? நகுல் சாரும் பண விஷயத்தில் கச்சிதமாய் ஏன் - கறார்னு கூட வையேன். தற்போது 'நாதன்'ஸ் பார்ட்னர்ஷிப்பிலும் மொத்த லாபத்தில் நமக்கான சதவிகிதம் எவ்வளவு, மற்றதில்எவ்வளவு நாட்களில் நம் கடன் அடையும் என்பதை எல்லாம் நம்ப அம்மாக்கேப் புரியும்படி எடுத்துச் சொன்னாரே.''

நளினி மொழிகளை அழகாய் கையாண்டாலும் கணக்கு வழக்குகள் அவளை உதைக்கும்!

''ஆனால் எனக்கே உங்களை விட்டுட்டு வெளிநாடு போக மனசில்லை. அப்பா ஞாபகம் வந்தால் உங்களையேனும் வந்து பார்த்திடணும். அதனால் மறுத்துட்டேன் நவி. சென்னையில் எந்த காலேஜ்ஜில் அட்மிஷ வேண்டுமென்றாலும் நகுல் ஸாரிடம் சொன்னா போதுமென்றார் நம்ப கோபி ஸார். ஆனால் நகுல் ஸா ரொம்ப பரிவாய் சொன்னார் -

'உன் மார்க்ஸிற்கு எந்த சிபாரிசும் தேவைப்படா காவ்யா - நம்ப வீடு சென்னையில் இருக்கறதால் தங்க அ மிஷனுக்காய் அலைவதில் எந்த சிரமமும் இராது' - என்று

தங்களுக்கு ஒரு நல்ல துணை உண்டு என்ற தெ பில் இளையவள் பேச, மூத்தவளின் உள்ளே பயங்க அதிகரித்தன.

'எதற்காய் இத்தனை உதவிகள்.. உபசாரங்கள்?' என் கேள்வி வண்டு நவ்யாவைக் கொட்டிக் குடைந்தது.

பரத்தின் வேலை பெங்களூரில் என்றாலும் அவன் அடிக்கடி சென்னைக்கும் போவதாய் சொன்னது ஞாபகத்திற்கு வர, காவ்யாவின் கல்லூரி முயற்சிகளைப் பற்றியும் அவனிடம் சொல்லுவது நல்லது என்ற யோசனையுடன் பரத்திடம் போனில் பேசியவளுக்கு, அவனது குரலின் துள்ளல் மகிழ்வாகவே இருந்தது.

''ஸாரி நவி - உன்னிடம் பேசணும்னு நினைப்பேன் - ஆனால் நூறு வேலைகள் - முக்கியமாய் எனக்கு அமெரிக்காவின் வெர்ஜினியாவில் நிர்வாகம் படிக்க வாய்ப்பு ரொம்பப் பக்கத்தில் வந்திருச்சு நவி.''

''ஓ.. கன்கிராட்ஸ் பரத் - எப்போ கிளம்பணும்?''

''போன மாசமே தகவல் வந்தது - அதற்கான ஏற்பாடுகளில்தான் ஒரே பிஸி. இரண்டு வருஷப் படிப்பை ஒரே வருஷத்தில் நான் முடிக்கக் கூடிய சலுகையும் கூட கிடச்சிருக்குது. முதலில் 'இன்னும் மூணு வருஷங் கழித்துதான் உங்களுக்கு ஸீட்'ன்னு சொன்னவங்க, இப்படி தகவல் அனுப்பினதில் எனக்கு, முக்கியமாய் அம்மாக்கு ரொம்ப திருப்தி.''

''ம்ம் - செலவும் பாதியாகிடுமே.''

''எக்ஸாக்ட்லி. பகுதி நேர வேலை பார்க்க, ஏன் முழுசாய் தூங்கவும் கூட முடியாத அளவு மும்முரமாய் படிக்கணும். ஆனால் நான் அதற்காய் சலிக்க முடியாது நவி - ஏன்னா அதுதானே என் லட்சியம்? நீ எனக்காய் தினம் வேண்டியிருப்பே - இல்லையா?''

நவ்யாவிற்கு அவனுக்கு என்ன பதில் சொல்வது என்றே தெரியவில்லை. இத்தனை உற்சாகமாய் இருப்பவன் அதைத் தன்னுடன் பகிர்ந்து கொள்ள முயலாதது உறுத்தியது.

தவிர இவளது ஜெப வேளைகள் பெரும்பாலும் கண்ணீருடனேயே கழிந்தன. இழந்த அப்பாவை எண்ணி, புதிதாய் முளைத்த பிரச்சனையான நகுலனை நினைத்து வழியும் கண்ணீருக்கிடையே, பரத்தை இவளும் அதிகம் நினைத்தாளில்லை. 'அவ்வப்போது அவனுக்காய் வேண்டியதுண்டு என்றாலும்...

''தாங்க்ஸ் நவி. அம்மாவுடைய நகைகளை விற்று வந்த பணம்தான் முக்கிய செலவுகளுக்கு. என் மேல் எவ்வளவு நம்பிக்கை இருந்தால் அம்மா அவங்க நகைகளை விற்க.. ம்ப்ச்.. அவங்க பெருமைப்படறாப்பல நான் உயரணும் நவி.''

''நிச்சயமாய். அப்பா, அம்மா எல்லாம் சௌக்கியந்தானே?''

தன் பெற்றோர் துக்கம் விசாரிக்கும் வகையில் கூட நவ்யாவின் குடும்பத்தாருடன் பேசாதது அவனுக்குள் குறுகுறுத்ததோ என்னவோ -

''ம்ம். அவங்களுக்கும் மனசு, பேச்செல்லாம் சதா என் பிரயாணத்தில் தான். படிப்பு முடிஞ்சதும் சம்பாதிச்சு அம்மாவின் நகைகளை மீட்டு, அவங்களை ராணி போல வச்சுக்கணும்.''

பேசி முடித்தவள், தங்களின் சம்பாஷணையை மறுபடி மனதுள் ஓடவிட்ட போது தெளிவாய் புரிந்தது -

பரத்தின் லட்சியம் வெளிநாட்டில் படித்துப் பெறும் பட்டம் என்பது போல அவனது எதிர்காலம் அவனது தாயை மகிழ்விப்பதுதான்.

நவ்யாவை அவன் தனது வாழ்வோடு இணைத்து பேசவில்லை.

ஆனால் அப்படி சுபகாரியம் குறித்துப் பேசும் சமயமும் இதுவல்லவே. தன்னையே சமாதானப்படுத்திக் கொண்டவளுக்கு இடக்கு மொழி ஒன்றும் நினைவிற்கு வந்தது.

'சமாதானச் சொல் நல்ல குடை; ஆனால்
நல்ல கூரை அல்ல!'

ஆக ஏமாற்றத்தை மறைக்க இவள் தன்னையே சமாதானப்படுத்திக் கொள்வது புரிந்தாலும், தாங்கள் இருவருமே தற்சமயம் நேரத்தைச் சரியானபடி பயன்படுத்த வேணும். கற்பனைகளில் மிதந்து நேரத்தைக் கொல்லக் கூடாது.

'நேரத்தை நீ கொன்றால்,

நேரம் உன்னைக் கொல்லும்' என்பதை உணர்ந்து காலத்தைப் பயன்படுத்திக் கொண்டால் அதுவும் இவர்களை மேம்படுத்தும்.

ஆக நவ்யா அலுப்பின்றி உழைக்கலானாள்.

'நாதன்'ஸ் ஸ்டோரின் சிறு சிறு குறைகளையும் உடனே நிவர்த்தி செய்தபடி போக, விற்பனை பெருகியது.

கீழ்நாட்டிலிருந்து வார - கடைசியை மாறுதலாய் கழிக்க மலையேறுபவர்கள்.

'குளுகுளுவென்ற சூழலில், அவசர ஆத்திரம் இல்லாமல் குஷாலாய் ஒரு மாதத்திற்கான மளிகையை, வாரத்திற்குத் தேவையான காய்கறிகளை வாங்கிப் போகிறது வசதி' என்று எண்ணுவதும் அல்லாமல் அதைப் பிறரிடமும் சொல்ல, வியாபாரம் விஸ்தீரித்தது.

அதிலும் தாயும் மகளுமாய் ஓரிரு முறை வருபவர்களையும் மறக்காமல், ''போன முறை நீங்க கேட்ட, கொழுப்பு சத்து குறைந்த சீஸ் வாங்கினோம். பார்க்கறீங்களா?'' என்று விசாரிக்க, ஷாப்பிங் என்றால் அது 'நாதன்'ஸ் ஸில் தான் என்ற எண்ணம் வலுவடைந்தது!

'இதையெல்லாம் அப்பா இருந்து பார்த்து பூரிக்கவில்லையே' என்ற ஒரு குறையோடு மட்டும் வேலையில் மும்முரமாயிருந்தவர்களின் முன்பு டிசம்பர் மாதம்வந்து நின்றது.

வருடம் முடியப் போகிறது என்பது மட்டுமல்லாமல், கிறிஸ்தவ மக்கள் பலர் வாழும் ஊர் என்பதால் கிறிஸ்துமஸ் பண்டிகையின் குதூகலம் சேர, கடையை அலங்கரித்தார்கள்.

வாசலில் கையசைத்தபடி ஆளுயர 'ஸான்ட்டா' பொம்மை, வெள்ளி நிற நட்சத்திரங்களும், நீல சீரியல் பல்பின் வளைவுகளும் தந்த பிரகாசம், கடையின் மையத்தில் நின்ற கிறிஸ்துமஸ் மரம், வரிசையாய் தொங்கிய பலூன் கொத்துக்கள் என்று கடை தயாராகி விட, நாதனின் குடும்பமும் இழப்பின் துயரத்தை மீறி நின்றது.

வரும் குழந்தைகளுக்கு பலூன்களோடு லாலி-பாப்பும் தரப்பட, வாண்டுகள், வீட்டுப் பெரியவர்களை அடிக்கடி 'நாதன்'ஸ்ஸிற்கு இட்டு வந்தனர்! கடைச் சூழல் கலகலப்பாய் இருந்தாலும், வீடு சூன்யமாகவேப் பட்டது. தாயும் மகளும் தங்களை முடிந்தவரை வேலையில் அமிழ்த்திக் கொள்ள முயன்றனர். மலைப்பகுதியை மார்கழியின் குளிர் ஆட்டிய்து.

அன்று சிவப்பு ஸல்வாரின் மேல் நீண்ட கரும்பச்சை கம்பளிக் கோட், மப்ளர் சகிதம் தயாராகி, காலை உண விற்காய் வந்த நவ்யா விதிர்த்து நின்றாள்.

டோஸ்ட், காபி சகிதம் அங்கு மிக சௌஜன்யமாய் நகுலன் இருந்ததுதான் காரணம்.

''ம்ம் - கிறிஸ்துமஸ் கலர்களில் ரொம்ப அட்டகாசமா இருக்கே நவ்யா -''

அவள் பதிலுக்கு இயல்பாய், இனிமையாய் ஏதும் பேசாமல்,

'இங்கே உங்களுக்கு என்ன வேலை?' என்பது போல மட்டுமே பார்த்தாள்.

''நகுல் கிறிஸ்துமஸிற்கு இங்கேதானாம் நவி'' - அம்மாவின் உற்சாக அறிவிப்பு மகளுக்கு எரிச்சலூட்டியது.

''வெளிநாட்டில் பனி போர்த்திய காலத்தில் பண்டிகையை 'வைட் கிறிஸ்துமஸ்'னு கொண்டாடறாங்களே - அதை ஓரளவேனும் இங்கே அனுபவிக்கலாம்னு வந்தேன்.''

''உங்க அம்மாவை விட்டுட்டா?'' நவ்யாவின் கேள்வி 'சுள்'ளென்றது!

''அம்மா கலிபோர்னியாவில்! தங்கைக்கு இரண்டாம் பிரசவம் - தவிர அமெரிக்காவின் அந்தப் பகுதியில் குளிர் கடுமையாயிராது. ஆக அம்மா துணிஞ்சு கிளம்பிட்டாங்க. நானும் நீங்க இருக்கும் தைரியத்தில் இங்கே வந்தேன்.''

''ஷ்யூர் நகுல். நீங்க வந்தது எங்களுக்கு எவ்வளவோ ஆறுதல். ஒரு ஆம்லெட் ரெடி பண்ணிடறேன்'' என்றபடி நளினி உள்ளே போக, அங்கே தனித்து விடப்பட்ட இளையவர்களின் பார்வை ஒருவரை ஒருவர் வெட்டியது.

''நீ என்னை விரட்டுவது போலிருக்குதே நவி?'' என்றான் சீண்டலாய்.

பீங்கான் ஜாடியிலிருந்து தனக்கும் ஒரு காபியை ஊற்றிக் கொண்டவளின் மனதுள் இனமறியாத படபடப்பு.

சில மாதங்கள் கழித்து பார்க்கும் நகுலனை பார்த்த தன் பார்வை அலட்சியம் காட்டினாலும் அதில் ஆர்வமும் இருந்தது அவளைச் சஞ்சலப்படுத்தியது.

''விரட்டலை, வியாபாரத்தில் பார்ட்னர் என்றாலும் வேறேதும் பந்தமில்லாத இங்கே நீங்க வந்தது அ...'' அநாவசியம் என்ற வார்த்தையை விழுங்கி ''ஆச்சரியம்'' என்று முடித்தாள்!

''காபி கோப்பையின் சிறு நீல மலர்களை ஆராய்ந்தபடி பதிலளித்தான்.

''ம்ம் - உறவு, பந்தமெல்லாம் அவசியந்தான் - இல்லியா? அம்மா எனக்காய் ஒரு பெண்ணை, பூமணியைத் தேடி நிறுத்திய போது, அது அநாவசிய பந்தம், தொல்லைன்னு தோணியது. ஆனா அப்படியொரு நெருக்கமான உறவு அவசியம்னு சமீபமாய் ஒரு யோசனை.. அதாவது கல்யாணம் பற்றி யோசிக்க ஆரம்பிச்சிருக்கேன், நவ்யா.''

நீல மலர்களிலிருந்து அவன் பார்வை 'சட்'டென உயர்ந்து, தன் முகத்தில் பதிய - அவன் வார்த்தைகளை விட அவன் பார்வையில் அதிகம் மிரண்டு போனாள் அவள்!



## 11

''நீ என்னைப் பார்த்து பயப்படறேல்லையா... நவி?''

நகுலன் கேட்டது அவளது முதுகைச் சொடக்கியது.

'அப்பர் - லேக் வியூ' என்ற இடத்தில் நின்று இருவரும் அங்கேயிருந்து பார்க்கையில், கொலுவில் அமைக்கும் கண்ணாடி நீர் பரப்பு போல மினுங்கிய மாலை ஏரியைப் பார்த்திருந்தனர்.

கரும்பச்சை மரங்களிடையே சலனமின்றி கிடந்தது ஏரி -



காலை வேளைகளில் சுற்றுலாப் பயணிகளின் துடுப்பும், சிரிப்பும் கலைத்த தன் அமைதியை மீட்டெடுத்துக் கொண்ட நிம்மதியோடு.

அதன் நிச்சலனத்தைத் தனக்குள் கொண்டு வர முயன்ற நவ்யா, செருமி விட்டு மெள்ள சொன்னாள் -

''கடையிலிருந்து நேரே வீட்டிற்குத்தான் போவோம்னு நினைச்சு உங்க காரில் ஏறினேன். ஏன் இங்கே கூட்டிட்டு வந்தீங்க?''

''இன்னும் நீ என்னைப் பார்த்து மிரள்வது எனக்குப் பிடிக்கலை நவ்யா தனியே, ஆற அமரப் பேசினால் உனக்குத் தெளிவு வரும்னு தோணியதால், இங்க வந்திருக்கோம்.''

ஏரியையேப் பார்த்த அவன் கண்களிலும் சலனமற்ற ஆழம். பனிக்காற்றை ஆழ சுவாசித்தவள் துணிவையும் திரட்டிக் கொண்டாள் -

''என் பயம் அதிகமாயிருக்குது.. உங்க போக்கு புரியாததால - நீங்க ஏன் கொடைக்கானல் வந்தீங்க... அதாவது அப்பா இருந்த போது?''

அவன் கண்கள் சற்று சலனப்பட்டனவோ?

''அவர் நல்ல மனுஷன்ங்கறதை நானும் கண்டு கொண்டதால் - நாதன் அங்கிளின் அணுகுமுறை, அவர் பேச்சு எனக்குப் பிடித்திருந்தது. உன் குற்ற உணர்வை நீக்க அவர் முயன்ற முறை - அங்கேயும் அலட்டலாய் ஏதும் பேசாமல், மிருதுவாய் மன்னிப்பு கோரிட்டு கிளம்பிய விதம் - அவர் அபூர்வ மனுஷங்கற மரியாதையை எனக்குள் விதைத்தது.''

கனத்த சால்வைக்குள், கைகளை இறுகக் கட்டியிருந்தும் நவ்யாவிற்குள் நடுங்கியது.

"சரி - ஆனால் அதற்காய் வியாபாரத்தில் பார்ட்னராவது என்பது அதிகப்படி இல்லியா?"

தன் முகம் கடுப்பதை அவளால் தடுக்க முடியவில்லை. நடுங்கிய உடலை அடக்க பற்களை இறுகக் கடித்தாள்.

"அதில் அதிகப்படி லாபம் உங்களுக்குத்தானே நல்யா - பிறகென்ன?" என்றவள் அடுத்தபடி கேட்டது அவனை உலுக்கியது.

"சரி. வெளிப்படையாய் பேசுகிறோம் - இந்த சந்தர்ப்பத்திலேயே அதையும் கேட்டுடறேன் - உன் தங்கை நிறமாய், அழகாயிருப்பதில் - உனக்கேதும் பொறாமை உண்டா, நல்யா?"

நடுங்கிய உதட்டைக் கடித்தவள் சட்டென திரும்பி காரை நோக்கி நடக்க, அவன் கை அவளை அதே வேகத்தில் பற்றி நிறுத்தியது.

அவள் கையின் குளிர்லை, நடுக்கத்தை உணர்ந்தவன் அவளை மறுகையாலும் பற்றி தன்னருகே இழுத்து நிறுத்தினான்.

அவளது கறுப்பு கம்பளி கோட்டின் குண்டு பித்தான்களை உருத்தபடி சிடுசிடுத்தாள்.

"இங்கே தனியே கூட்டிட்டு வந்தது சம்பந்தா சம்பந்தமில்லாமல் நீங்க உளற என்றால்..."

"பதில் சொல்லேன் - சம்பந்தம் என்னன்னு சொல்றேன்."

அவளைப் போல நெஞ்சு விம்மாமல், பதறாமல் பேசினான் நகுலன்.

"காவ்யாவின் அழகு, திறமை எல்லாம்... எனக்குப் பெருமைதான்."



"சரி. உங்கம்மாவை உனக்கு ரொம்பப் பிடிக்குமா?"

கடித்த பற்களூடே சொன்னாள் - "ஆமா."

"ஆக அவங்க சந்தோஷமாயிருக்க நீ எதையும் செய்வே இல்லியா நல்யா?"

"நான்.. நான் கடவுள் இல்லியே."

"அதாவது அது உன்னால் கூடுமென்றால்?"

"ப்ளீஸ் - சொல்றதை வெளிப்படையாய் சொல்லுங்க."

தன் விழிகளை அவன் முகத்திற்கு உயர்த்தி, சவாலான தொனியிலேயே சொன்னாள்.

நிமிர்ந்த அவள் கண்களை தளதால் கவ்வியபடி பேசினான் -

"நீ என்னைக் கல்யாணம் செய்தால், அவங்க எந்தக் குறையுமின்றி வாழலாம் - அவங்க, தேவைகள் எல்லாம் பூர்த்தியாகும்."

அவளது முகம் அச்சத்தில் வெளுத்தாலும், புத்தி உறைந்து விடவில்லை.

"எங்களுக்கு நிம்மதியான வாழ்வு தேவை மிஸ்டர் நகுலன். அதைத் தர நீங்களும் கடவுளில்லை."

அவன் முகத்தில் சிறு சிரிப்பொன்று விரிந்தது.

"பணம் பலதைச் சாதிக்கும் நல்யா. வாழ்வு நாம் விரும்பும் வகையில் போனாலே நிம்மதிதானே?"

இவனைக் கல்யாணம் செய்து கொண்டபின் தன் வாழ்வில் நிம்மதி ஏது? அவளது புத்தி அலறியது.

தான் அறியாமல் அழித்த பூமணியின் இடத்தில் தன்னை இட நினைக்கிறானா?

இதென்ன இப்படி ஒரு இக்கட்டு?

அப்பா உயிரோடு இருந்திருந்தால் இப்படி ஒரு நிலையில் தான் நிற்க நேர்ந்திருக்காது. இப்படி ஒருவன் துணிவாய் தன்னைத் தனியிடத்திற்குக் கூட்டி வந்து மிரட்ட முடியுமா?

அவளுக்குள் கழிவிரக்கம்.

கேள்வியின் அதிர்ச்சியில், குளிர் அவளை மேலும் குடைந்து குலுக்கியதில், கால்கள் நடுங்கின.

"எனக்குக் குளிருது" - என்றபடி அவனிடமிருந்து மறுபடி விலகி நடந்தாள். கழிவிரக்கம் வேறு கண்ணீராய் வெளிப்பட்டு விடும் போலவே...

வேகமாய் நடந்து காரை அவளுக்காய் திறந்தவன், தானும் உள்ளேறி, 'ஹீட்டர்' வசதியைப் பயன்படுத்தினான்.

மறுநிமிடம் காரின் உள்ளே வெதுவெதுப்பானது. சிறுவயதில் அம்மாவைக் கட்டிக் கொள்ளும் போது உணரும் அதே வெம்மை அவளைச் சுற்றியது.

காரை மெல்ல செலுத்த ஆரம்பித்தான் - அதுவும் வழுக்கலாகவே நகர்ந்தது.

பணம் தரும் வசதிகளை தனக்குக் காண்பிக்கிறானோ? ஆனா இச்சின்ன பயணம் கூட இவனருகே அமர்ந்து போகையில் உறுத்த, வாழ்க்கை முழுவதும் இவனோடு என்றால்?

உலர்ந்த உதடுகளை நனைத்துக் கொண்டாள்.

மதுரை விமான நிலையத்தில் இந்த கார் அவனுக்காய் காத்து நிற்கும் - இங்கிருக்கும் சில நாட்கள் பயன்படுத்திக் கொள்ள.

இது போன்ற வசதிகளை உன் குடும்பத்தாரோடு நான் பகிர்ந்து கொள்கிறேன் - என்று ஆசைக்காட்டுகிறான்...!

குளிர் விட்டதும், ஆரம்ப அதிர்ச்சியில் ஸ்தம்பித்த அவளது மூளை சற்று உயிர்த்து யோசித்தது.

"நீங்க பரத்தை சந்திக்கலைனு நினைக்கிறேன்" - சற்று கெத்தாகவே சொன்னாள்.

"பார்த்திருக்கேன் நவி. உங்கப்பா இறந்த சமயம், உன் தலையைக் கோதி ஆறுதல் படுத்தியவன்தானே?"

மறுபடி சற்று அதிர்ந்துதான் போனாள்.

அத்தனையையும் கவனித்து விடுவான் போல?

அப்பாவை இழந்த நேரம் இவள் நகுலன் அங்கு இருந்ததையே உணராமலிருக்க, இவன் கண்கள் எதையும் விடவில்லையே.

உஷாரான, ஊடுருவும் அவன் பார்வைதானே அவளை முதலிலிருந்தே உதற வைத்தது? முதன் முதலாய் மதுரையில் பூமணியின் வீட்டில் அவனைப் பார்த்த போதே கலங்கி விட்டாளே - அந்த கலக்கத்தின் அழுத்தம் தாளாமல்தானே சிரித்தும் தொலைத்தாள்?

அப்பா சொன்னதிற்காய் பூமணியின் பெற்றோரிடம் மன்னிப்பு கோரியவள், நகுலனையும் கைகுவித்தபடி ஏறிட்ட போது, அவன் கண்கள் தன்னைத் துளைத்த விதமே சரியில்லையே. ஊசியாய் குத்தி இவளை சுருள வைத்ததே.

ஆனால் இப்போது இவனை ஒதுக்க வேண்டுமென்ற முடிவோடு பேசினாள்.

"நான்.. நானும் பரத்தும் கல்யாணம் செய்துக்கலாம் என்ற ஒரு எண்ணம் எங்க குடும்பத்திலுண்டு."

"எண்ணம்னால்.. அது உங்க ஆசை இல்லை - சரிதானே?"

"நாங்க ஆசையாய் பழகுவதைப் பார்த்த வீட்டுப் பெரியவர்களுக்கு அப்படி ஒரு எண்ணம் வந்திருக்கலாம்."

"உன் ஆசையின் ஆழம் நான் அறிய மாட்டேன் நவி. ஆனால் பரத்தின் நோக்கம், லட்சியம் எல்லாம் வெளிநாட்டுப் படிப்பின் மேல்."

அவன் சொல்ல, வியப்பில் நவ்யாவின் விழிகள் மட்டுமல்ல வாயும் கூட சற்று விரிந்தே விட்டது!

இதுவும் கூடவா நகுலனுக்குத் தெரியும்? எப்படி?

"ம்ம்.. இப்போ பரத்திற்கு அந்த வாய்ப்பு கிடைச்சிருக்குது - போனில் சொன்னான்."

அவனே அழைத்து அந்த நல்ல செய்தியை இவளிடம் பகிர்ந்தது போலச் சொன்னாலும், இவள் அழைத்ததால் கிடைத்ததே அத்தகவல் என்ற உண்மை உள்ளே உறுத்தியது!

"ஒரு வருடப் படிப்பு முடிந்ததும் ஓடி வந்து உன்னைக் கல்யாணம் செய்து கொண்டு, உன்னையும் உன் குடும்பத்தையும் பாதுகாப்பதாய் சொன்னானா?"

அக்கேள்வியிலிருந்து கேலி அவளை அறைந்தது - கடவுளே... இவனுக்குத் தெரியாததே கிடையாதா? பதில் தெரிந்தே கேட்கும் கேள்விகள் அல்லவா இவை?

தன்னால் எதுவும் கூடும் எனும் நகுலன் மூலம்தான் பரத்தின் படிப்பிற்கும் வாய்ப்பு கிடைத்ததோ?

நவ்யாவின் புருவங்கள் யோசனையில் முடிச்சிட்டிருந்தன. நகுலன் தொடர்ந்தான்.

"ஆனால் நான் கேள்விப்பட்டபடி, பரத்தின் அம்மா அவனுக்கு ரொம்ப விவரமாய் சொல்லியாச்சாம் -



'படித்ததும் இங்கே வந்து வேலை பார்த்து கடனை அடை. போதுமான காசு சேர்த்ததும் நான் பார்க்கும் பெண்ணுக்குத் தாலி கட்டுன்னு.'

இவளுக்குள் வெப்பம் கூடி வியர்த்தது. கண்கள் நகுலனை வெறித்தன.

"என்ன நவி பார்க்கறே? இவன் கடவுளான்னா? மூவுலகில் நடப்பதும் இவனுக்குத் தெரியுமோன்னா? அப்படி ஏதுமில்லை. பரத்தின் பெற்றோர் மதுரை பக்கத்தில்தானே இருக்காங்க... பரத்தின் ஒன்றுவிட்ட தங்கையும் என் மானேஜரின் மகளும் தோழிகள் - ஆக அப்படி என் காதை எட்டிய விஷயங்கள் இவை. பரத்தும் தன் அம்மா பேச்சிற்குத் தலையாட்டியாச்சு..."

"அதாவது நீங்க உங்கம்மா பேச்சிற்குச் செய்வது போல."

அவள் பதிலடிக்க, அவன் உடம்பு சற்று விறைத்தது.

"அப்படித்தானே நீங்களும் பூமணிக்கு நிச்சயிக்கப்பட்டீங்க?"

"ஆமாம். ஆனால் என் மனசில் வேறு ஒருத்தி இருந்திருந்தால் நான் சம்மதித்திருக்க மாட்டேன் நவ்யா."

ஆக இத்தனை காலம் பெண்களுக்குத் தன்னில் இடம் தராதவன் இப்போது தன்னிடம் திருமணப் பேச்சை எடுப்பானேன்?

"பரத்திற்கு ஸீட் கிடைப்பதில் உங்க பங்கு ஏதேனும்?"

"வெர்ஜினியா யுனிவர்ஸிட்டிக்கு மாணவர்களைப் பரிந்துரை செய்யும் நம் பேராசிரியர் ஒருவர் எனக்குப் பழக்கம் - அவரிடம் ஒரு வார்த்தை சொன்னேன் -

...அதற்குப் பரிசாய் நீ ஆசைப் படும் அமெரிக்க படிப்பு இதோ' என்றெல்லாம் நான் சினிமா வில்லனாட்டம் பேரம் பேசலை நவ்யா. பேராசிரியரிடம் கூட பரத்திடம் என் பெயரைச் சொல் லவே கூடாதுன்னுட்டேன். பரத்தைப் பற்றி விசாரிக்க, தற்செயலாகவே அவன் குடும்பத்து நபரின் மூலம் பல தகவல்கள் கிடைச்சது. நான் குறுக்கிடா விட்டாலும் பரத் வெளிநாடு போயிருப்பான் - சில வருஷங்கள் கழித்து.''

ஆக உடனடியாய் பரத்தை இங்கிருந்து கிளப்புவதின் நோக்கம் - நவ்யா தனக்குக் கிடைக்க வேண்டும் என்பது.

ஆனால் நகுலன் குறிப்பிட்டது போல படித்துத் திரும்பியதும் தாங்கள் இணையப் போகும் எதிர்காலம் பற்றி பரத் ஒரு வார்த்தையும் சொல்லவில்லையே! அவன் பேசியதெல்லாம் படிப்பைப் பற்றியும், அதை முடித்த பின்பு தன் தாயை சௌகர்யமாய், சந்தோஷமாய் வைத்துக் கொள்வது பற்றிதானே?

''காவ்யா பரத் உன்னிடம் பேசியது பற்றிய சில விபரங்களைத் தந்தாள். ஆக மொத்தத்தில் பரத்திற்கு உன் மேல் ஒரு ஈர்ப்பு அல்லது சலனம் இருந்திருந்தாலும், பிராக்டிக்கலாய் அதெல்லாம் சரிவராது என்பதைப் புரிந்து சுதாரிச்சுட்டான்னு படுது. உன்னை மணந்து உன் பொறுப்புகளையும் சேர்த்து சுமக்க அவன் தயாரில்லை.''

நவ்யா குன்றினாள்.

பரத்தின் பேச்சையே தான் எடுத்திருக்க வேண்டாமே என்ற மறுகல்.

நகுலன் சொன்னது அத்தனையும் சரியும்தானே?

''தவிர காவ்யாவே பரத்திடம் சமீபமாய் பேசினாள் போல - அதாவது படிப்பு முடிந்து இந்தியா திரும்பியதும்



எங்க அக்காவைக் கல்யாணம் செய்துக்குவீங்களா - என்ற ரீதியில் கேட்க...''

''பொய்.''

''பரத் பிடியே தரலையாம். அம்மா சொல்லும் பெண்தான் என்று பெரும்வாரியான நல்ல மகன்களைப் போல சொன்னானாம்.''

தன்னிடம் கூட சொல்லாதவற்றை தன் தங்கை நகுலனிடம் மனம்திறந்து பேசுகிறாளா? இவன்தான் குடைந்து குடைந்து விசாரித்திருப்பான். இருப்பினும் இப்போது இவன் பொய் சொல்லவில்லை.

அம்மாவும் காவ்யாவும் அவ்வப்போது சேர்ந்து அமர்ந்து பேசுவதை இவள் கவனித்து, ''என்ன ஆலோசனை நடக்குது?'' என்று கேட்க, ''உனக்கு நல்ல பையனாய் பார்க்கறது பற்றிதான்'' என்று பதில் வரும்.

''நம்ப குடும்பத்திற்கு ஒரு ஆணின் துணை வேணும் - அது உன் ஹஸ்பெண்டாய் இருப்பதுதானே இயல்பு? எனக்கு மகனைப் போல ஒரு மருமகன் கிடைச்சால் ஆறுத லாயிருக்கும் நவ்யா. தெம்பாயும் கூட.'' என்று அம்மா சொல் வதை மௌனமாய் ஆமோதிக்கும் தங்கையின் பார்வை.

''பரத்தின் மழுப்பல், நழுவல் உன்னைக் காயப்படுத் திடுமோன்ர கவலையில்தான் காவ்யா, அதுபற்றி உன்னிடம் பேசலை. கிறிஸ்துமஸை உங்களோடு நான் கழிக்கப் போவதாய் அவளிடம் சொன்னதும் ரொம்ப நெகிழ்ந்துட்டா. காவ்யா இப்போ சென்னையில் படிப்பதால அப்பப்ப நான் அவளைப் போய் பார்க்கறதுண்டு. கார்டியனாய் தரப்பட்டிருப்பது என் பெயர் என்பதால், அவளும் வீக்-என்ட்ஸ் வீட்டிற்குத் தங்க வருவா - அதில் எங்கம்மாவிற்கு ரொம்ப சந்தோஷம்.''

இதெல்லாம் நவ்யா அறிந்தது என்றாலும், தங்கை மனம் திறந்து நகுலனிடம் இவ்வளவு பேசுவாள் என்று நினைக்கவில்லை - அதுவும் தன்னிடம் கூட சொல்லத் துணியாத சில தகவல்களை...

''உன் அம்மாவும் காவ்யாவும் நான் உங்க குடும்பத்தில் ஒருவனானால்... அதாவது உன் கணவனானால் ரொம்ப சந்தோஷப்படுவாங்க. முக்கியமாய் நிம்மதியாயிருப் பாங்க. ஆனால் உன் மனசு பற்றி எனக்குச் சந்தேகம் என்பதால்தான் அந்தக் கேள்விகளை அதாவது நீ சம்பந்த மில்லாதவை என்று தட்டிய கேள்விகளைக் கேட்டேன் அவர்களுக்காய் நீ என்னைக் கல்யாணம் செய்துக் கலாமோன்னு.. ஆனா அதற்கு முன் என் மனசையும் உனக்குக் காட்டுவது முறைன்னு படுது நவி...''

அசைவற்று ஒரு சிலை போல அமர்ந்திருந்தாள் நவ்யா

கார் ஒரு பெரிய யூகலிப்டஸ் மரத்தின் கீழே அடைந்து நின்றது.

சற்று திரும்பி அமர்ந்து அவளைப் பார்த்தவன் மிருதுவான குரலில் பேசினான்.

''எனக்குப் பெரும்பாலான ஆண்களைப் போலத் தான்... அழகாய் கோர்வையாய் பேச வராத பிரச்சினை ஆக என் மனநிலையை ஒரு கதை மூலமாய் விளக்க நினைக்கிறேன்.''

கேட்பாயா என்பது போல சிறு கெஞ்சலொன்று அவன் முகத்தில் - இரையை விழுங்கும் முன் மலைப் பாம்பின் கண்கள் இரையாகப் போகும் பிராணியைத் த பார்வையால் உறைய வைத்து விடுமாமே.. அதே போ

''மண்ணைப் பொன்னாய் மாற்றும் மந்திரத்தைக் கற்க, பனிமலை சித்தரிடம் போனானாம் ஒருவன். மிக சிரமத்தூடே தன்னைத் தேடி வந்தவனுக்கு அவரும் மறுக்காமல் அந்த மந்திரத்தைக் கற்றுத் தந்தாராம்.

இவனுக்கோ ஆச்சரியம் - ''மிக எளிய மந்திரமாய் இருக் கிறதே. நிச்சயமாய் வேலை செய்யுமா?'' கேட்டானாம்.

''நிச்சயமாய். ஆனால் ஒரே நிபந்தனை. மந்திரத்தை உச்சரிக்கும் போது குரங்குகளைப் பற்றி நீ நினைக்கவே கூடாது.''

சிரிப்போடு விடைபெற்றவன் பிறகு சிரிக்கவே முடியலை!

ஒவ்வொரு முறை மந்திரத்துடன் அவன் கண்களை மூட, உள்ளே மந்திகள் ஆடின - மனதை ஆக்கிரமித்தன!

நாள் முழுக்க அவன் சிந்தனையில் குரங்குகள் தான்!

பதறியவன் மறுபடி பனிமலை சித்தரிடம் ஓடி வேண்டினானாம் -

''எனக்குத் தங்கம் வேண்டாம் - என்னைச் சுற்றி சதா கும்மாளமிடும் குரங்குகளிடமிருந்து விடுதலைதான் வேண்டும்' என்று.''

நவ்யாவிடம் இன்னும் அசைவில்லை என்றாலும் 'நீ என்ன சொல்ல வருகிறாய்?' என்ற குழப்பம் அவள் முகத்தில் தெரிந்தது.

''தவிர்க்க நினைப்பதையே மனசு வட்டமிடும் என்பதை 'நச்'சுனு இந்தக் கதை சொல்லுது இல்லையா? பார்த்ததுமே என்னுள் புகுந்த உன் ஞாபகத்தையும் என் னால் தவிர்க்க முடியலை நவ்யா...'' தவிப்புடன் சொன் னான் நகுலன்.

"பயந்த கண்களும் பதறிய கைகளுமாய் உன்னை பார்த்ததிலிருந்து என் சஞ்சலம் ஆரம்பமாயிடுச்சு." ச கோபமாகவே சொன்னான்.



## 12

மேலும் சில மாதங்களில் த சம்மதத்தைச் சொல்லி விட்டாள் நவ்ய வெறுமையாயிருந்த தாயின் க களில் புகுந்த நம்பிக்கையும் தவி தங்கையின் விழிகளில் துளிர்த்த மகிழ்வும், தான் எடு முடிவு தவறில்லை என்றன.

ஆனால் தன் எதிர்காலம் தடுமாறி விடுமோ?

படிப்பிற்காய் சென்னை போய்விட்ட காவ்யா இல்லா தனிமை உறுத்தியதுதான். ஆனால் மற்றபடி வியாபா சிறு சிக்கலுமின்றி போனதில் இவளுக்கே சந்தே தோன்ற மேனேஜரை விசாரித்தாள் -

கோபிநாத்தும் ஒத்துக் கொண்டான் -

"எந்தப் பிரச்சனையையும் முதல்ல தன்னிடம் கொண் வரச் சொல்வார் நகுலன் சார் - நீங்க சில பிரச்சனைகளோ வருந்தியது அவருக்குப் பிடிக்கலைன்னு நினைக்கிறே மேம். சரியில்லாத தரம், நேரத்திற்கு வராத சரக் அல்லது பேமென்ட், திடீர் விலை உயர்வு, ஸ்டா பிரச்சனை எல்லாம் அவர் பார்வைக்குப் போயிடும்."

"அம்மாவிடம் சொல்லலாமே?"

"வீணாய் தொந்தரவு பண்ணாதீங்கன்னு சொல்லி டார்."

பாதுகாக்கும் போர்வையில் தங்களை வெற்று பொம்மை களாக்கி விட்டானோ நகுலன்?

ஆனால் அம்மாவின் பொறுப்புணர்வு அதிகரித்திருந்ததுதான் -

முன்பு அப்பாவிடம் -

"என் கைச்செலவிற்குச் காசே போதலை. நினைச்ச எதையும் வாங்க முடியலை" என்று பொறுமிய அம்மாவின் கரிசனை இப்போது கடையின் விற்பனையில் மட்டுந்தான் - எதையும் வாங்குவதில் இல்லை! முன்பு நவீன சுடிதாரை விரும்பி அணிந்த அம்மா இப்போது வெளிர் நிற சேலைகளில் - பறக்கும் கூந்தலும் பாந்தமான கொண்டையாகி இருந்தது.

ஆனால் தாயின் முக வெறுமை, நவ்யாவை வருத்தியது.

"நகுல், நமக்குக் கடவுளாய் பார்த்து அனுப்பிய நல்ல துணை. காவ்யாவின் அட்மிஷன் சமயம் எல்லாம் அத்தனை ஈஸியாய் நடந்தது. ஹாஸ்டலில் காவ்யா விரும்பிய அறையையே அலாட் பண்ண செய்திட்டார். அவர் வீட்டிலேயே ஒரு வாரம் நாங்க தங்கினதால் பிரச்சனையோ பயமோ இல்லை. அவங்க அம்மாவும் அத்தனை ஆசையாய் பழகினாங்க, உபசரிச்சாங்க, நவ்யா."

காவ்யாவும் அவள் பங்கிற்கு நகுல் புராணம் பாடினாள்.

நகுலன் காவ்யாவைப் படிப்பிற்காய் வெளிநாடு அனுப்ப சித்தமாய் இருந்த ஒரு காரணமே அதற்குப் போதுமே!

ஆக தன் வாழ்வில் மிக முக்கியமான இருவருக்குமே நகுலனை மிகப் பிடித்திருந்தது.

நவ்யாவின் பயத்தை யாரும் உணர்ந்ததாய் தெரியவில்லை. நகுலன் தங்களது பிஸினஸ் - பார்ட்னராய் சேர்ந்ததை நளினியோ காவ்யாவோ சதியாகக் கருதாமல் அவனது கூர்மதியாகவல்லவா போற்றுகிறார்கள்?

இப்போது வியாபாரத்தை நடத்துவதில் அவன் பங்குதான் பிரதானம்.

ஒருவழியாய் தன் ஈடுபாட்டிற்கான காரணத்தையும் தான் சொல்லி விட்டானே - 'நீ என்னைக் கடுமையாய் சலனப்படுத்தி, ஈர்த்து விட்டாய்' என்று! அதற்கு அவன் உதாரணமாய் சொன்ன குரங்குக் கதைதான் சற்று நெருடல்!

பெருமூச்சுடன் நவ்யாவின் சிந்தனை ஓடியது!

'பார்த்ததுமே நான் உன்மேல் காதல் வயப்பட்டு விட்டேன்' என்பதைத்தான் சற்று ரசக்குறைவாய் சொன்னானோ?

தன் முன்னே நின்று, முகம் பார்த்து எந்த ஆணும், பரத் உள்பட யாரும் தன்னிடம் அப்படி தன் மனதை வெளிக் காட்டவில்லையே... இனியும் அப்படி யாரும் இவளிடம் மயங்கப் போவதில்லை - ஆனால் இரண்டு நாட்களுக்கு முன்பு கண்களில் பட்ட மற்றொரு குரங்கு கதை போல தன் வாழ்வு பாழாகிப் போனால்...?

அந்த குட்டிக் கதையை மறுபடி மனதுள் உருட்டினாள்.

நிறைய குரங்குகள் ஒரு தோட்டத்தில் பல வருடங்களாய் இருந்ததால் அதன் காவலாளிக்கும் பழக்கமாகி விட்டன. அவனைப் போலவே தோட்ட வேலையையும் செய்தன.

பக்கத்து ஊருக்கு போக வேண்டி வர, தோட்டக்கார காவலாளிக்கு ஒரு யோசனை.

“நான் வரும் வரை செடிகளுக்கு நீருற்றுவீர்களா?” என்று குரங்கு பட்டாளத்திடம் கேட்க, அவையும் உற்சாகமாய் சம்மதித்தன. ஆனால் ஒரு பிரச்சனை.



எந்த செடிக்கு எவ்வளவு நீர் ஊற்ற என்பது அவைகளுக்குத் தெரியவில்லை.

'அது சுலபம்தான். வேர் பெருத்த செடிகளுக்கு அதிகமாயும், சின்னதிற்கு கொஞ்சமாயும் ஊற்றினால் சரியாயிருக்கும்' - என்றுவிட்டு வெளியூர் போய் திரும்பிய காவலாளிக்கு அதிர்ச்சி. அத்தனை செடிகளும் பிடுங்கப்பட்டு காய்ந்து கிடந்தன!

“வேர் பெரிதா, சின்னதா என்று பார்க்கத்தான் பிடுங்கினோம்” என்றனவாம் மந்திகள்.

நடுக்கத்துடன் நவ்யாவின் யோசிப்பு தொடர்ந்தது -

நகுலன் அத்தனை முரடனோ, முட்டாளோ அல்ல.. என்று தன்னையே சமாதானப்படுத்த முயல்வதற்குள் மறுபக்க புத்தி எச்சரித்தது -

“உன்னைப் பார்த்ததுமே காதல் முளைத்ததாய் சொல்வது முட்டாள்தனமில்லையா? உனக்காக அவன் செய்த அதிரடி காரியங்களில் முரட்டுத்தனம் இருக்கிறதே. ஆக இவனை நம்பி திருமண பந்தத்தில் சிக்குவது பக்குவமானதா - புத்திசாலித்தனமானதா?” என்று.

'காரணம் இல்லாமல் காதல் வருவதில்லை

அந்தக் காரணந்தான் தெரிவதில்லை' - என்று பாஸ்கல் சொல்லிப் போகவில்லை?

மேதைகளே இந்த முடிவிற்கு வருகிறார்கள் என்றால் சாதாரண நகுலனின் நிலை?

ஆனால் நகுலனை ஒரேயடியாக சாதா ரகமாய் ஒதுக்க முடியாது. இளம் வயதிலேயே கடும் உழைப்பு, சாதுர்யத்தால் ஊர் கவனித்துப் பாராட்டுமளவிற்கு உயர்ந்தவன். ஆக அவனது அணுகுமுறையும் சற்று அதிரடியாகவே இருக்கலாம்.

இருப்பது என்ன?

நினைத்து மறுகியது - தொடர்ந்தது.

இவளது சம்மதம் கிடைத்ததுமே வெளிநாட்டிலிருந்து தாயை வரச்சொல்லி விட்டான் நகுலன். தங்கையின் குழந்தைக்கும் மூன்று மாதமாகிவிட்டதால்,

'எனக்கு என் மருமகளைப் பார்க்க ரொம்ப ஆசை உனக்கு உன் அண்ணியைப் பார்க்கும் ஆர்வமிருந்தா வந்து சேர்' என்று தங்கையை மிரட்டி, அவர்களுக்கு பயணச் சீட்டுகளை ஏற்பாடு செய்து விட்டான்.

'நெருங்கிய சில சொந்தங்களுடே எளிமையாய் ஒரு நிச்சயதார்த்தம்' என்றாகி விட நவ்யாவின் பதட்டம் கூடியது.

விடுமுறை சமயம் என்பதால் காவ்யா வீட்டிற்கு வந்து நவ்யாவைக் கொஞ்சி தீர்த்தாள் - விதவிதமாய் அழகு படுத்தினாள்.

"இந்த தங்க - முலாமை ஃபேஸ்-பாக்காகப் போட்டா சும்மா ஜொலிப்பே பாரு அக்கா...."

"இதென்ன புதுசா எனக்கு 'அக்கா' பட்டம்?"

"நகுலை இனி 'அத்தான்'னு கூப்பிடணுமாம் - அப்ப முதல்ல உன்னை அக்கான்னு கூப்பிடப் பழகிடலாம்னு தான். தவிர..."

"சொல்லு."

"நீ ஒரேயடியாய் காதலில் தடுமாறி கல்யாணம் பண்ணிக்கலைன்னு தெரியும்க்கா - எங்களுக்காய் தியாகம் பண்றது போல.. நினைச்சு..."

"அதெல்லாமில்லை. ஒரு மாதிரி வசதியாய்..."

"உனக்கு அவர் மேல் பிரியமில்லையாக்கா?"

இளையவள் கண்களின் கலக்கம் பார்த்த மூத்தவள் முயன்று புன்னகைத்தாள்.

"பிரியம் வந்துட்டே இருக்குன்னு வை - சரி. விதவித மான பழக்கூழ் ஃபேஸ் - பேக், பால், தயிர் எல்லாம் போய் என் மேல் தங்கத்தைத் தேய்க்க ஆரம்பிச்சுட்டே?"

"உன் குணத்திற்கு ஏற்றார்போல கண்ணும் மின்னனுமில்லையா?"

"நீ எதைத் தடவினாலும் நான் உன்னளவு அழகாக முடியாது காவ்யா."

பெருமையாகவே பாராட்டினாள் தங்கையை.

"அழகான அம்மா விழுந்தது அப்பாவின் கவர்ச்சியில தானே? முக்கியமாய் அந்த சிரிப்பில்..."

"ஷ்ஷ்.." - கூச்சத்துடன் தடுத்தாள் மூத்தவள்.

"இது தெரியாதாக்கும் - தமிழ் பாடல்களில், 'சிரித்து சிரித்து என்னைச் சிறையிலிட்டாய்'ங்கறதை மட்டும் அம்மா ரகசியமாய் ரசித்து கேட்பதை நீ பார்த்ததில் லியா?"

'சிறுக்கி சிரிப்பு என்ன - சிலுமிஷத் தேளா?' என்கிறது இன்றையப் பாடல் - ஆக எந்த காலத்திலும் சிரிப்பு சாவிதான் பிறரின் மனதைத் திறந்து விடுகிறதோ?

"எனக்கு அம்மாவின் நிறமும் சாயலும் இருந்ததால், அம்மா கொண்டாட, அழகுணர்ச்சி எனக்கும் ஜாஸ்திங் கறதால நானும் என்னை தினுதினுசாய் அழகுபடுத்தி கிட்டேன். ஆனா நீ மெனக்கெடலை - அவ்வளவுதான். ஆனால் உன் உயரமும், வடிவமும், முக்கியமாய் நீ வாய்விட்டு சிரிக்கும் போது மின்னுற உன் கண்களும்

கூடவே தெற்றுப் பல்லும்.. ச்சே அள்ளுங்க்கா! இப்ப உன் புருவங்களைத் திருத்தி, சரும மாலிஷ் சேர, யு லுக் ஸ்மாஷிங் - அதாவது அப்பாவைப் போல!''

அப்பாவின் குணத்தில், பண்பில் திளைத்தவர்கள் அவர் தோற்றத்தைக் கவனிக்கத் தவறியிருக்கலாம் - தவிர அவரும் தன் உருவத்தை மேம்படுத்திக் காட்டத் தெரியாதவர் - ஆனால் அவரும் பழுதில்லாத அம்சம்தானே?

கச்சிதமாய் தைக்கப்பட்ட ரவிக்கைகளும் குழைவான பட்டும் ஓரிரு நகைகளும் சேர, நவ்யா ஜொலித்தாள்.

நகுலன் தனக்காய் தேர்ந்தெடுத்திருந்த வாழ்க்கைத் துணையை ஆர்வமாய் பார்க்க வந்த அவன் குடும்பத்தினருக்கு வெகு திருப்தி.

''பொண்ணு தேவதையாட்டம் இருக்காடா. முகத்திலேயே அறிவும் அடக்கமும் தெரியுதே.'' - சிலாகித்தார் பையனைப் பெற்றவர்.

நவ்யா உள்ளறைக்கு வர, அவளைத் தொடர்ந்த நகுலன் சீண்டினான் -

''ஏதோ கொஞ்சம் வித்தியாசம் தெரியுதே? அதைத்தான் அம்மா அறிவு, அடக்கம்னாங்களா?''

''ஷ்ஷ்.. இதுதான் கல்யாண களை அத்தான். அது ஏனோ பெண்களுக்கு மட்டுந்தான் வருது. மாப்பிள்ளைகளுக்கு ஒரு தினுசான அசட்டுகளைதான் - பாவம் சேருது'' - காவ்யா கிண்டலடிக்க, ரசித்து புன்னகைத்தான்.

அவனது தாயும் தங்கையும் அள்ளி வந்திருந்த பரிசுகளைக் கண்ட இளையவளுக்கு ஒரே துள்ளல்.

''ஹையோ... இந்த அமெரிக்கன் ஃபவுன்டேஷனைத் தடவினால் நாலு மணி நேரத்திற்கு மேக்-அப் கலையாது. இந்த லிப்-க்ளாஸ் அட்டகாச கலர்ல?''



நகுலனின் தங்கை வகுளாவிற்கு தன் தேர்வு பாராட்டப்பட்டதில் குஷிதான் - ஆக,

''உனக்கும் கலிபோர்னியா போனதுமே இதையெல்லாம் ஒரு செட் வாங்கி அனுப்பறேன், காவ்யா'' - என்று ஒட்டிக் கொண்டாள்.

திருமணத்தைப் பெண்ணின் ஊரில் அமரிக்கையாய் முடித்து, வரவேற்பை அமர்க்களமாய் சென்னையில் நடத்துவதாய் திட்டம். நிச்சயம் வீட்டோடு நடந்தது.

''அதற்கு இந்த இளநீலப் பட்டும் முத்து செட்டும் போட்டுக்கோ நவ்யா'' - என்ற நகுலனின் தாய், தன்னையும் மீறி,

''ஹூம் - நான் முன்னே ரோஜா நிற டிஷ்யு சேலையும், ரூபி செட்டும் வாங்கினேன் - ஆசையாத்தான்.. ஆனால்... அது நிராசையாய் போச்சு - நாங்க போட்ட நகைகளை பெண் வீட்டார் திருப்பி அனுப்புவதாய் சொல்ல, ஏனோ நகுலே போய் தனக்கு அவங்க போட்ட வைர மோதிரத்தையும் கொடுத்துட்டு, அவங்க தந்ததை வாங்கிட்டு வந்தான்...'' என்று பேச, வகுளா தாயை அடக்கினாள்.

''இப்ப ஏம்மா அந்தப் பேச்செல்லாம்?''

''பூமணி விவரம் நவ்யாக்குத் தெரியும்னு நகுல் சொன்னானே?''

''அதனால அதுபற்றி பேச இது சமயமா? இனி அதை எல்லாம் நினைக்கவே வேண்டாம்.'' என்ற வகுளா, பின்பு வாய்த்த தனிமையில் நவ்யாவிடம்,

''ஸாரி, அம்மா இங்கிதமில்லாமல் சிலவற்றைக் கிளறியதற்காய். ஆனா ஒரு விஷயம் அண்ணி. என்னை

றேனே? பூமணியைத் தேடி தேர்ந்தெடுத்தது அம்மா - அதை ஒரு மாதிரி ஏற்ற நகுலண்ணாக்கு அதை மறுக்குமளவிற்குக் கூட சிரத்தை இல்லாது போலப் பட்டது எனக்கு. அம்மா சொன்ன அந்த ரோஜா நிற டிஷ்யு, நகையை அதாவது பெண்ணிற்குப் பரிசாய் நாங்க வாங்கியதை நகுல் பார்க்கவுமில்லை. ஆனால் இந்த ப்ளு புடவை, நகையெல்லாம் ஹிஸ் சாய்ஸ் - அதிலும் அம்மா 'முத்து வேண்டாம்டா - வைர ஸெட்டாய் வாங்கிடலாம்'னதை மறுத்து 'அது கல்யாணப் பரிசு - இந்த நகை, நவியோட சிரிப்பிற்கு மேட்ச் பண்ணும்'னு ரசிச்சு வாங்கினான்.''

வகுளாவின் பரிவைப் புரிந்து கொண்டு நன்றியுடன் முறுவலித்தாள் நவ்யா.



# 13

கையிலிருந்த பெட்டியைத் 'தொப்' பென்று போட்ட கவிதா, விழியும் வாயும் திறந்து அதிசயப்பட்டாள்.

''ஹைய்... நவி. இதென்ன அப்ஸரஸாட்டம் மின்னுறே! யு ஆர் இன் லவ் - அதான்.'' என்று ஆர்ப்பாட்டமாய் பேசினாள். கல்லூரி சிநேகிதி கவிதாவை தன் கல்யாண நிச்சயத்திற்கு போனில் அழைத்த நவ்யா அதிகத் தகவல்களைத் தரவில்லை என்றாலும் மாப்பிள்ளை - நகுலன் நரேந்தர் என்றதும் கவிதா துள்ளியது புரிந்தது.

''மோதலில் காதல் ஆரம்பமாகும்னுவாங்க. உனக்கு நடுக்கத்தில் ஆரம்பித்தது போல? பூமணி வீட்டில் நீ அவரைச் சந்திச்சதை ரொம்ப பயத்துடனே என்னிடம் சொன்னே - இனி அவர்தான் உன்னிடம் அஞ்சி சேவகம் செய்யணும்.''

காவ்யா செய்துவிட்ட அலங்காரத்துடன், இளநீலப் பட்டைச் சுற்றி இதமாய் மின்னிய முத்துக்களை அணிந்து, பூச்சூட்டிய நவ்யாவை விட்டு யாராலும் கண்களை விலக்க முடியவில்லை.

மணமகளாய் நின்றவளைப் பார்த்து கண்கலங்கி நின்றாள் தாய்.

''நியாயமாய் நான் உன்னைத்தான் அதிகம் கொஞ்சியிருக்கணும் - நீ உன் அப்பாவின் சாயலில் இருப்பதால் - அதே திருத்தமான முகமும் கொள்ளை கொள்ற சிரிப்பும்... அவரும் இருந்திருந்தால்...'' நடுங்கிய உதடுகளால் மகளின் வகிட்டில் முத்தமிட்டாள்.

ஊரும் உறவும் நவ்யாவின் அதிர்ஷ்டத்தை மெச்சியது.

'கோடீஸ்வரன்.. அதுவும் தேடி வந்து பெண்ணைத் தவிர வேற எதையும் எதிர்பாராமல் கட்டிக்கிறதுன்னா... அதிசயந்தான்' என்று மோவாயைத் தட்டினார்கள்.

அன்றிரவு நவ்யாவின் அறையிலேயே கவிதாவும் தங்க, அவர்களுக்குப் பேச வாய்த்தது.

''நீ வந்ததில் எனக்குச் சந்தோஷம், கவி.''

விடிவிளக்கின் நீலத்தோடு மௌனமே கலந்திருந்தது.

''கவி, தூங்கியாச்சா?'' இம்முறை முணுமுணுப்பாய் கேட்டதற்கு பதில் வந்தது.

''இல்லை நவி. உன் சந்தோஷம் உன் முகத்தில் முழுசாய் தெரியலையே எனக்கு...''

''ஏதோ அப்ஸரஸாட்டம் இருக்கேன்னியே காலையில்?''

''ஆனந்தம் மிஸ்ஸிங்கறேன். ஏதோ ஒரு கலக்கம் தெரியுது உன் கண்ணில்.''

போர்வையை விலக்கியபடி இரு பெண்களுமே எழுந்து உட்கார்ந்தார்கள். முதல் பாதியைத் தோழிக்கு

...தையும் சொல்ல, ஒ
சால்வைக்குள்ளிருந்தபடி கவனமாய் கேட்டிருந்தா
கவிதா.

"ஏதோ விறுவிறுப்பான சினிமா போலிருக்குது நவி இடைவேளைக்கு முன்னே ஒரு சஸ்பென்ஸ்ன்னா மறுபாதியில் எதிர்பாராத திருப்பங்களோடு."

"அதான் கொஞ்சம் மிரண்டுட்டேன்."

"அதாவது நகுலன் பழி வாங்கிடுவார்னா?"

மௌனமே பதிலானது.

"தொழிலில் இவ்வளவு சாமர்த்தியமுள்ள நகுலன், தன் குடும்ப வாழ்வைச் சொதப்பிடுவார்னா நினைக்கறே? உன்னைக் கல்யாணம் செய்த பின் நீயும் அவரு சரிபாதி. உன்னைப் பொறுத்துதான் அவரது வெற்றியும் சந்தோஷமும். உன்னைத் துன்பப்படுத்திட்டு அவ மட்டும் நிம்மதியாய் இருந்திட முடியுமா?"

"ஸாடிஸ்ட்ஸ் பற்றிக் கேள்விப்பட்டிருக்கியா? பிற துன்பந்தானே அவர்களின் இன்பம்?"

"ச்சேச்சே..." கவிதாவின் மறுப்பு அரைமனசாகவேப் பட்டது!

இரண்டாம் நாள் மலைமுகட்டில் கம்பீர அழகுட னிருந்த ஆலயத்தில் அவர்களின் திருமணம் முடிந்து சில நூறு விருந்தாட்களுடன் விருந்தும், வாழ்த்துமாய் தொடர்ந்தது. வெண்பட்டில் ரோஜா மாலையுடன் நின்ற வளுக்கு அத்தனையும் கனவு போலிருந்தது - இனிய கனவே என்றாலும் இது நிமிஷத்தில் கலைந்து போகுமே...

ஆனால் இத்தனை பேரின் பிரார்த்தனைகளும் வாழ்த் துக்களும் வீணாகக் கூடுமா?



வகுளா, காவ்யாவுடன் வந்தவர்களை வரவேற்றுக் கொண்டிருந்த சிநேகிதி கவிதா முகமெல்லாம் மலர நின்றது, நவிதாவிற்கு உறுத்தியது. முந்தாநாள் தன் நிலையைப் பற்றிச் சொன்னபோது, கேட்டு பரிதாபப்பட்டவள் இப்போது கல்யாண கலகலப்பில் ஐக்கியமாகி விட்டதென்ன? தன் மீது யாருக்குமே அக்கறை இல்லையா என்ற சோர்வு இவளுக்குள்...

அன்றிரவு ஏரிக்கரையிலிருந்த ஒரு நட்சத்திர ஹோட்டலில் அவர்கள் தனித்து விடப்பட, நவ்யா மேலும் அரண்டாள்.

அறை மிக ரம்யந்தான்.

வெண்பட்டு விரிப்பில் ரோஜா இதழ்களின் சிதறல், வாசம். மிக மெல்லிய இசை, மயக்கும் மங்கலில் ஒளி, சாப்பிட பழங்கள், பால் என்று எதிலும் குறைவில்லை.

ஆனால் இவள் மனம் நிரம்பி வழியவில்லை. ஆசை, ஆர்வம், வெட்கம் என்ற உணர்வுகள் ஏதுமற்ற வறட்சி.

"உங்க வீட்டிலேயே இருக்கணும்னு நினைச்சியா நவி?"

இவள் முக மாற்றத்தைக் கண்டு, கேட்டான்.

"இந்த சம்பிரதாயத்தை.. நான் எதிர்பார்க்கலை."

"முதல் - எப்போதும் விசேஷந்தானே?" சின்ன முறுவலுடன் பெரிய கண்ணாடி ஜன்னலை அவன் திறக்க, குளிர் காற்றோடு கிடைத்த காட்சியில் அவள் திகைத்தாள். அந்த அறையே நீரில் மிதப்பது போன்றிருந்த அமைப்பிலிருந்தது அறை!

அன்று பௌர்ணமி என்பதால் நிலவு, நிலத்தோடு நீரையும் பாலாய் தோன்றச் செய்தது. வெள்ளியாய் சலசலத்த ஏரிநீரின் குளுமை அவளை வருட, சிலிர்த்தாள்.

...ஜன்னலை மூடியவளின் மறு கை அவளை அணைத்தது.

"நம் முதல் அணைப்பு" மறுகையும் அவளைச் சுற்றி திமிறினாள்.

"முதல் கோணல் முற்றும் கோணல்ங்கறதுதான் எனக்கு நினைப்பிற்கு வருது. நம் முதல் சந்திப்பு - அந்த சூழல், நீங்க என்னை அடைவதற்கான காரணம், அதற்காய் முதலில் எடுத்த முயற்சி - எதுவுமே சரியில்லையே.."

"என் மனசை.. மனநிலையை உன்னிடம் தெளிவாய் சொன்னேன், நவி."

"ஓ.. அந்தக் குரங்கு கதைதானே?"

சற்று கிண்டலாய் கேட்டவள், தன் குரங்கு கதையை இவனிடம் சொல்லலாமா என்று யோசித்தாள். ஆனால் அசதி அவளை 'பேசாமல் படு' - என்று அதட்டியது. இங்கே வியர்ப்பதில்லை என்றாலும் இத்தனை அலுப்பிற்கு வெந்நீர் குளியல் சுகமாயிருக்கும்.

"குளிக்கணும்" என்றவள் அவனிடமிருந்து விலகி, அம்மா தனக்காய் நிரப்பி அனுப்பியிருந்த சிறு பெட்டியைத் திறந்தாள். ஏற்கெனவே காவ்யா, இவளது தலையலங்காரத்தை கலைத்து, தளர்வாய் கூந்தலைப் பின்னி விட்டிருந்தாள் - தலையை 'ஷவர் கேப்'பினால் மூடி விட்டு, வெந்நீர் ஷவரின் கீழே கால் மணி நேரமாவது நிற்க துடித்தது உடம்பு. மாற்றுடைக்காய் பெட்டிக்குள் இருந்ததைக் கண்டவளுக்குள் எரிச்சல் சுரந்தது! ஆழ் சிகப்பில் வழுவழுப்பான சாட்டின் இரவு உடை, தோள்பட்டையில் நூலளவே உள்ள லேஸ்களோடு!

"ஹ்ஹா! முதலிரவிற்கு மிக பொருத்தமான உடை. வைன் கலரில்.. செக்ஸியாய்!"



அவன் குரல் சீண்டியது. அதில் தன் கோபத்தை மறைக்க முயலுகிறானோ? பல பெண்கள் துரத்திய தன்னை, மணந்தவள் அலட்சியப்படுத்தும் ஆத்திரம்?

ஆனாலும் அந்த வழுக்கிய உடையைப் பெட்டிக்குள்ளேயே வீசியவள், விடுவிடுவென குளியலறை நோக்கி நடக்க அவன் அவளின் எதிரே!

கூறுபோட்ட அவனது கண்கள் இவளைக் கலக்கின.

'நீ எனக்கானவள் - என் சொத்து' - என்ற கர்வத்துடன் கொத்தின.

இவனும் தனக்கானவன் அல்லவா? - ஒரு குட்டிப் பெண் முதன் முறையாய் காட்டு விலங்கை பார்ப்பது போல அவனை ஏறிட்டாள்.

மறுபடி இழுத்து இறுக்கினான்.

உணர்வு மிகுதியால் கரகரத்த குரலில் - "ஷ்.. அப்படி பார்க்காதே பேபி. தட் டஸ் எ ஹோல் லாட் ஆஃப் டேமெஜ்." என்றவனை முயன்று விலக்கியவள் குளியலறைக்குள் புகுந்தாள்.

பட்டுக்களைக் களைந்து இளஞ்சூடான வெந்நீர் பொழிவின் அடியே நின்றாலும் அவன் அணைப்பின் கதகதப்பு இதில் இல்லை என்றே பட்டது! பதட்டம் சற்று அடங்கவும்தான், மாற்றுடையை தான் எடுத்து வரவில்லை என்பது உறைத்தது. ஆடம்பர ஹோட்டல் என்பதால், சோப், க்ரீம் என்பவையோடு, மிருதுவான துவாலைகளும் குளித்ததும் போட்டபடி வெளியேறக் கூடிய 'பாத்-ரோப்'பும் இருந்தன. முழங்கால் வரை கூட வரவில்லையென்றாலும், உடம்பின் மேற்பகுதியைக் கணிசமாய், கண்ணியமாய் மூடிய அதைச் சுற்றியவள்,

மயிரிழைகள் மட்டும் நனைந்து சொட்ட, ரோஜா நிற அங்கிக்குள் பனிமலராய் வெளியேறிவளை காத்திருந்தவனின் கைகள் அள்ளித் தூக்கின!

"என்னதிது...?" கால்களை உதறினாள்.

அதை ரசித்தது போல அவளை மேலும் இறுக்கியவன், "நல்ல ஆரம்பம்" என்றான்!

எப்படி இத்தனை அலட்சியமாய் தன்னைத் தூக்குகிறான்?

அப்பா அடித்துச் சொல்வார் "சினிமாவில் ஹீரோ பெண்களைத் தூக்கிச் சுழற்றுவதெல்லாம் கேமரா - டிரிக் தான். அதெப்படிடா ஐம்பது, அறுபது கிலோ ஹீரோயினை அப்படி சுலபமாய் தூக்கக் கூடும்?" என்று.

அதைக் கேட்டு அம்மாவும் மகள்களும் சிரிப்பார்கள்.

ஆனால் இப்போது நவ்யாவினுள் நடுக்கம். இவனது பலத்தின் முன்பு தான் எம்மாத்திரம் என்ற கலவரம்.

இந்த அந்தரங்கமான நேரத்தை எண்ணி எண்ணி தானே தன் பயத்தைப் பெருக்கினாள்?

கட்டிலில் அவளை ஒரு பூவைப் போல வைத்தாலும் அவனது பிடி இளகவில்லை. பறந்து விடக் கூடும் ஒரு பறவையைப் பிடிக்குள் பத்திரப்படுத்தும் அழுத்தத்தோடிருந்தன அவனது விரல்கள் - அவை அவளது மேனியில் அலைய ஆரம்பிக்க, இவள் விழிகள் மூடின.

அவன் கைகளின், உதடுகளின் ஸ்பரிசத்தைப் பற்றி யோசிக்கக் கூட கூசியவள் இப்போது அவனது ஆளுமைக்குள்!

அவன் முத்தமிட்டால் தன் மூச்சு நின்றுவிடுமோ என்றும் அணைத்தால் அருவெருப்பில் சுருண்டு விழுந்து



விடுவோமோ என்றும் அஞ்சியவள் இப்போது அவனது பாதியாக...

கண்களைத் திறக்க முயன்றவள்.. ஆனால் கிறங்கி செருகிய அவற்றைப் பிரிப்பது லேசாயில்லை!

மிக மென்மையுடன் அவனது விரல்கள் அளவெடுத்த இவளது பெண்மை, அவன் மோக வெப்பத்தில் மெழுகாய் உருகுவதை உணர்ந்ததும் நிலைகுலைந்து போனாள்!

பெருகிய ஆசை வெள்ளம் அவளை சுலபமாய் அடித்துத் தள்ளியது. முடிவற்ற மோகச் சுழலில் எதிர்க்கவும் கூட வகையற்று மூழ்கிப் போனாள் அவள்...



## 14

இத்தனைக் கதகதப்பான தலையணைப்பில் தான் தலைசாய்த்ததே இல்லையே என்ற உணர்வுடன் புரண்டவளை ஒரு கை விலக விடாமல் இழுத்து அணைத்தது.

அவன் இளம்சூடான மார்பில் ஒண்டவும்தான் அந்தத் தலையணை அவனது புஜம் என்பது புரிந்தது. கூடவே முந்தைய இரவின், உறவின் நினைவுகளும் வர, அதிர்ந்து குறுகினாள்.

"காலையில் நீ இப்படி வெட்கத்தோடு பதறி எழக் கூடாதுன்னுதான் ஹோட்டலில் தங்க ஏற்பாடு செய்தேன், நவி - ரிலாக்ஸ்."

மிக திருப்தியுடன் சொன்னவனிடமிருந்து திமிறி விலகினாள் - தன் விருப்பப்படியே எல்லாம் நடந்து விட்ட திண்ணக்கம் அவனுக்கு - என்ற எரிச்சலுடன் நடந்தாள்.

பதிலின்றி குளியலறைக்குள் மறுபடி புகுந்தா
இம்முறை மாற்று உடைகளுடன்! வெகு நேரமெடுத்
குளித்து, தயாரான பிறகே அவள் வெளியே வந்த போ
ஃபிளாஸ்கில் காபியோடு டோஸ்ட் காத்திருந்த
அதோடு அறையை ஒரு பணிப்பெண் சுத்தம் செய்
ஆரம்பித்திருந்ததால் நகுலன் தானும் தயாராகப் போனா
கண்ணாடி ஜன்னலைத் திறந்து காலை வெயிலி
பளபளத்த ஏரியை, சின்ன சின்ன நீர்ப்பறவைகள் ம
டுமே கலைத்த அதன் அமைதியைப் பார்த்தபடி காபியை
பருகினாள். பிறகு வீட்டிற்கு போன் போட்டவள்,
"காவ்யா வர்ரியா? எனக்கு வீட்டிற்கு வரணும் போ
ருக்கு" என்று விட்டு, சேலை உடுத்தி தலை வாரலானா
சிநேகிதி கவிதா நேற்று மாலையே ஊருக்குக் கிளம்பி
யாயிற்று. மிக உற்சாகமாய் தன்னையும் நகுலனையு
வாழ்த்தியவளை நினைத்தாலும் கூட எரிச்சலாயிருந்த
அத்தனையும் தெரிந்தும் துளிக் கரிசனை, கவலை கா
டாமல் 'தான் - தன் வேலை' என்று கிளம்பி விட்டாளே?
அம்மாவும் காவ்யாவுமே நிம்மதியும் மகிழ்வுமாய்
இருக்கும் போது மற்றவர்களைக் குற்றம் சொல்வானேன்?
கண்ணாடியின் முன்னே அமர்ந்து, நகைகளை
போட்டுக் கொண்டிருந்தவளை நெருங்கியவன் சற்று
கடுப்பாகவே கேட்டான்.
"எல்லாம் நல்லபடி நடந்த பிறகும்.. என்ன நவ்யா?"
"ம்ம்.. உங்க திட்டப்படிதான் நடந்துச்சு."
"ஏன் உனக்கதில் சந்தோஷமில்லையா?" -அவனது
கண்ணோரங்கள் குறும்பாய் சுருங்கிய விதம் கவர்ச்சி
யாகவே இருந்தாலும் இவளது மனம் சுருங்கியது.



என்ன ஒரு எக்களிப்பு?

இவனுக்காக பல கழிசடைகள் காத்திருக்க, அவர்களில் ஒருத்தியைத் தேர்ந்தெடுக்காமல் தன்னிடம் ஏன் வந்தான் இவன்?

'பெண் ரொம்ப அழகு - அவ நல்ல குணம் அவ முகத்திலேயே தெரியுதே' என்று பலர் கடந்த இரு நாட்களாய் இவள் காதுபடவே சொன்னாலும் தன்னை விட அவற்றில் சிறந்தவர்கள் இல்லையா என்ன?

பருந்து சிறு கோழிக்குஞ்சை தூக்கியெடுப்பது போல நகுலன் தன்னைக் குறி வைத்து கொத்திக் கொள்ள ஏதோ ஒரு காரணமுண்டு.. இன்னும் வெளிப்படையாய் சொல்லாத ஒரு குதர்க்க நோக்கம். ஆக ஒரு நாளிரவின் மயக்கத்தில் இவள் தலை சுற்றிப் போவது முட்டாள்தனம்.

இவள் மௌனம் அவனை அவமானப்படுத்தியது போலும் -

"பேசு நவ்யா. இல்லைன்னா எனக்கேதும் புரியாதே? கரும்பு கடினமானது. தடவி, நக்கினால் அதன் இனிப்பு புரிவதில்லை. கொஞ்சம் முரட்டுத்தனமாய் கடித்து, சுவைத்தால்தான் அது சாறு உள்ளிறங்கும். அப்படி உன்னைக் கொஞ்சம் வலியவே வந்து கல்யாணம் செய்துகிட்டேன். அது தப்பில்லை என்பது நேற்றிரவின் இனிப்பான நம் தாம்பத்தியத்தில் புரிந்தது-இனியும் என்ன?"

நல்லவேளை நேற்றிரவு அவளை அடித்து ஓடிய மோக வெள்ளத்தில் மிதந்து போனாளே ஒழிய, அவனுக்கு ஈடுதரவில்லை. இவள் கரங்கள் அவனைத் தழுவ வில்லை.

... ஆசையை அவன் கண்களில் குவித்துக் கொட்டவில்லை.

''நான்... நான்... கர்ப்பமாயிருப்பேன்னு நம்பறேன்..''

இவள் பேசியதில் கிளம்பிய அவனது திகைப்பை வெகு திருப்தியாய் பார்த்திருந்தாள்.

''நான் போக்கிய ஒரு உயிருக்கு ஈடாய்த்தானே என்னைக் கல்யாணம் செய்தீங்க? நான் பதிலுக்கு ஒரு உயிரைத் உருவாக்கித் தந்துட்டா என்னை விட்டுடுவீங் கல்ல?''

அப்படிப் பேச வேண்டுமென நவ்யா யோசிக்க வில்லை.

ஆனால் அவனுக்கு அப்படி ஒரு நோக்கம் உண்டோ என்ற சந்தேகமுண்டு. அது இப்போது 'திடும்'மென வார்த்தையாகி வந்துவிட, அது ஏற்படுத்திய பாதிப்பு அவளுக்குப் பிடித்திருந்தது.

மிக அழுத்தமான, ஏன் சற்று அகங்காரமான நகுலன் தடுமாறுவது பிடித்திருந்தது.

ஒரு பயில்வான் புல் தடுக்கி விழுந்ததை கண்டு விட்டவளைப் போல வேடிக்கைப் பார்த்திருந்தாள்!

கத்திரிக்கோலைப் பயன்படுத்தக் கற்றுக் கொண்ட ஒரு சிறுமி வெட்டிப் பழக, வேறு என்னென்ன கைக்குக் கிடைக்கும் என்பது போல் ஒரு பரபரப்பு அவளுக்குள்.

''சீக்கிரம் ரெடியாகுங்க. வீட்டுக்குப் போகணும்'' - உத்தரவின் தொனியில் சொன்னவள் உலர்ந்த கூந்தலைச் சிக்கு பிரித்துத் தளர பின்னலிட்டாள்.

வெண்ணை நிறப் பட்டில் அகண்ட, நாவற்பழ நிற கரைப் புடவைக்குப் பொருத்தமாய் கார்னெட் கற்களா



லான ஜிமிக்கியும், ஆரமும். தங்கைக் கற்றுத் தந்திருந்த தின்படி, ஐந்து நிமிடங்களில் தன் முகத்தை ஒப்பனை செய்து கொண்டவள் முழுநீளக் கண்ணாடியில் தெரிந்த பிம்பத்தைச் சற்று கர்வத்துடனேயே நோக்க நேர்ந்தது!

மேனியெங்கும் ஓடிய மினுமினுப்பை, கண்களின், உதடுகளின் திருப்தி அவளைப் பேரழகாக்கியிருந்தன தான்.

பார்ப்பவர்களின் வியந்த பாராட்டு, உற்சாகப்படுத் தியது.

தன் மன வெதும்பலை, குழப்பங்களையும் மறைக்க அலங்காரம் உதவியதுதான்.

'பெண் கொஞ்சம் சோர்வாய் தெரியறாளோ?'

'சோகமாய் இருக்காளோன்னு நினைச்சேன்.'

'கெட்டிக்கார, களையான, கோடீஸ்வரனைப் பிடித்த வளுக்கு என்ன குறை?'

என்றெல்லாம் யாரும் பேசிவிடக் கூடாதென்ற கவனத் தில் இட்டுக் கொண்ட பூச்சு!

இவர்கள் வெளிவர, வரவேற்பில் நின்ற பெண், புன் னகையுடன் ஒரு கருஞ்சிவப்பு ரோஜாவை நவ்யாவிடம் தர, அதையும் பின்னலில் சூடிக் கொண்டாள்.

ஜோடியாய் வெளியேறியப் புதுத்தம்பதிகளை, ஹோட் டலின் ஊழியர்கள் மிக பூரிப்புடன் பார்த்து நின்றார்கள் - ஏதோ தாங்கள்தான் இந்தக் கல்யாணத்தையே நடத்தியது போல!

வீட்டிற்குப் போகும் போதும், காரில் ஓட்டுனர் இருந்த தால் தம்பதிகளுக்கிடையே கசந்த மௌனம்தான். வீட்டில், மாமியார், நளினா என்று பெண்கள் நவ்யாவைச் சூழ்ந்து கொள்ள, நகுலன் ஒதுங்க வேண்டியதாயிற்று.

மகளை விழிநிரம்ப பார்த்த நளினா,

"ஒரு சின்ன குறையுண்டு, நவ்யா என் நிறத்தோடு பிறக்கலையேன்னு..." ஆரம்பிப்பதற்குள் சம்பந்தியம்மாளுக்குத் தாங்கவில்லை-

"எம் மருமகளுக்கு இதமான இளந்தேனின் நிறம் தவிர அவ நளினமும் களையும் யாருக்கு வரும்?"

"அதைத்தானக்கா சொல்ல வர்றேன்? நகுலைப் பார்த்ததிலிருந்து தான் நவியிடம் புது பூரிப்பு. மொட்டாயிருந்த அவ அழகு இப்போ மலர்ந்து, வேறு யாரும் பக்கத்தில் நிற்க முடியாதளவிற்கு சோபிக்குதே."

கண்களில் நீர் மல்க மகளை முத்தமிட்டாள் தாய்.

வசிஷ்ட வாயால் பாராட்டென்றால், தான் இத்தனைப் பொலிவானதற்குக் காரணம் நகுலன்தானோ? முன்பே கவிதா சொல்லவில்லை? சிநேகா, லலி என்ற இரு பெண்கள் அவனைப் பார்க்கப் பறந்ததாய்? அது போல வேறெத்தனை பேரோ? ஆனால் நகுலனின் தேர்வு - தான் - என்ற கர்வம், களிப்புதான் இந்தப் புது களைக்கான காரணமா?

அப்பாவை இழந்தபோது அம்மா புலம்பினார்கள்-

'எதை நீ இழந்தாலும், உடனே அதன் மதிப்பு இரட்டிப்பாகி விடும்-என்பாங்க. இந்த முட்டாளுக்கு அவர் அருமை இப்பதானே புரியுது'என்று.

தனக்கும் கிடைத்த பொருளின் மதிப்பு தெரியவில்லையோ? ஆனால் நகுலனை தன் தந்தையோடு ஒப்பிடவே முடியாது. அதிரும் வார்த்தைகளோ, முரட்டுத்தனமோ அப்பாவிடம் தேடினாலும் கிடைக்காதே...

அவளது சிந்தனைகள் அவளை நகுலனிடமிருந்து பிரித்துத் தள்ளின...



சென்னையில் நடந்த வரவேற்பில் சமுத்திர கூட்டம். யார், எவர் என்று புரியாமல், போலிப் புன்னகையும், கைக்கூப்பலுமாய் நின்றவளுக்கு பலர் முகங்களில் எரிச்சல் தெரிந்தது! வரவேற்பு நடந்த ஹாலிலிருந்த ஏ.ஸி. அறைகள் பெண் வீட்டாருக்குத் தரப்பட்டிருந்ததால், அங்கேயே சுற்றிக் கொண்டிருந்த காவ்யா, மூத்தவளை அலங்கரித்தபடி சொன்னாள்-

"மண்டப அலங்காரத்திற்கு ஹாங்-காங்கிலிருந்து 'ஆர்க்கிட்' பூக்கள் வந்து குவிஞ்சிருக்குக்கா-வெள்ளி ரிப்பனால் கட்டப்பட்ட ஊதா பலூன்களோடு ஆர்க்கிட்ஸை பிரமாதமாய் கோர்த்திருக்காங்க. அதான் அத்தான் உன்னை ஊதா டிஷ்யு கட்டி வைரங்கள் மட்டும் போடச் சொல்லியிருக்கார்-ஹி இஸ் அமேஸிங். எல்லாத்திலும் இத்தனைத் திறமையானவர் கிடைக்க யு ஆர் லக்கி. முன் கேட்டின் அலங்காரத்தைப் பார்க்கப் போயிருந்தேனா... அங்கே ரெண்டு பொண்ணுங்க புலம்பிட்டிருந்தாங்க..."

சொன்ன காவ்யாவிற்குச் சிரிப்பு பொத்துக் கொண்டது.

"அதுங்க கண்ணில் அத்தனைப் பொறாமை! முன்பு அத்தானின் ஆபீஸ் பக்கமிருந்த காபி ஷாப்பில் இவரைப் பார்க்கவே போய் காத்திருப்பாங்களாம். அவர் காரோட்டி வர்ர ஸ்டைல், நடக்கும் நடை, அவர் டிரஸ் - சென்ஸ், மிடுக்கை எப்படி ரசிப்போம். அவர் பற்றிய செய்திகளை மனப்பாடம் செய்தோம். மனுஷர் நம்மை இந்த வரவேற்புக்குக் கூட கூப்பிடாமல் ஏங்க விட்டுட்டாரே'ன்னு ஒரே புலம்பல்."

"அவங்க பேர் சிநேகா, லலிதாவா?"

ஐ-ஷாடோவிற்காய் விழிகளை மூடியபடியே நவ்யா கேட்க,

"ஐயோ... ஆமாக்கா... அப்படித்தான் ஒருத்தன் மற்றவர் கூப்பிட்ட ஞாபகம்! எப்படி தெரியும் உனக்கு? நீ அந்தப் பக்கமே இல்லியே?"

"இது கூட தெரியலைன்னா எப்படி?" அமர்த்தலாய் பதில் வந்தது!

"அத்தானோடு சேர்ந்து நீயும் படு ஸ்மார்ட் ஆகிட்ட ம்ம்!"

தாய் நளினியும் பெருமைக்கும் பயத்திற்கும் நடுவே அல்லாடினாள்-

"நிறைய பேர் என்னிடமே பொறுமலாய் பேசினாங்க நவி. கண் பட்டிடுமோன்னு எனக்கே கொஞ்சம் கவலையாயிருக்குது."

அம்மா அதிலெல்லாம் நம்பிக்கை அற்றவர் என்பது நவ்யாவிற்குத் தெரியும் என்பதால் தாயைப் பரிவுடன் பார்த்தாள்-

"யாருக்கு யாரோடு கடவுள் முடி போட்டிருக்காரோ அங்கேதானே முடியும்னு நான் சொன்னாலும் ஒரு அம்மணி அப்பட்டமான கோபத்துடன் என்னிடமே கேட்டாள் நவி,

"மலைமேல் இருந்தபடி எப்படி சிட்டி ஸ்டாரான எங்க நகுலனைப் பிடிச்சீங்க?"ன்னு. நானும் விடாமல்,

"எம்மகளைத் தேடி நகுல்தான் மலையேறி வந்தார்"னு பீற்றிகிட்டேன். இதெல்லாம் பார்க்கவும்தான் எனக்கும் மர்ப்பிள்ளை சொன்னது புரியுது."

"என்ன சொன்னார்?"

நவ்யாவின் கேள்விக்கு தாய் பதிலளிக்கும் முன்பே வகுளா வந்து "அண்ணி, உங்களுக்கான ஷாப்பிங்



இருக்குது - நெருக்கமானவங்க எல்லோரும் புதுத் தம் பதிகளை விருந்துக்கு அழைச்சிருக்காங்க. நானும் அம்மாவும் இன்னும் இருபது நாட்கள்தான், இந்தியாவில் இருப்போன்றதால், உறவு வீடுகளில் எங்களுக்கும் சேர்த்தே அழைப்பு. அசத்தலாய் உங்களுக்கு சில டிஸைனர் ஸாரீஸ் வாங்கிடணும்னு அம்மாக்கும் எனக்கும் ஆசை. உடனே வாங்கினால்தான், அதற்கான ப்ளவ்ஸஸ் ரெடியாகும் - கிளம்புங்க."

"நீ... நீங்க அதுக்குள்ளே கிளம்பணுமா, வகுளா?"

"பின்னே? அவருக்கு ஜெர்மனியில் கம்பெனியின் ட்ரெயினிங் என்பதால் கல்யாணத்திற்கும் வர முடியலை. பாவம் தனியா எங்களை மிஸ் பண்ணிட்டிருப்பார்."

துளி வெட்கமும் மகிழ்வுமாய் வகுளா சொன்னாள்.

"சரி-ஆனா அத்தை இங்கே இருக்கலாமே? டெலிவரிக்காய் வந்து உங்களோடு ஆறு மாசம் இருந்தாங்களே?"

"ரெண்டு குழந்தைகளோடு நான் இருபது மணி நேர ஃபிளைட்டில் போவது ரொம்ப கஷ்டமே அண்ணி. குழந்தைங்க அலுத்து அழுதால் என் கை, கால், புத்தியும் கூட ஓடாது. அம்மாவின் ஒத்தாசை இருந்தால் சமாளிச்சுடுவேன்."

தன் தாயாரைத் தொடர்ந்து, இவர்களும் போய் விட, இப் பெரிய வீட்டில், ஆனால் ஒரே அறையில் தானும் நகுலனும் மட்டுமே.

தங்கை காவ்யா வேறு, தனக்கு இரண்டாம் வருடப் படிப்பை டெல்லியிலுள்ள பாஷன் கல்லூரியில் தொடர, தன் கல்லூரி முதல்வர் பரிந்துரை செய்திருப்பதால் சொல்லி குதித்துக் கொண்டிருக்கிறாள்... ஒரு வேளை

பரத்தை வெளிநாட்டிற்கு மூட்டை கட்டி அனுப்பியது போல... இதுவுமே நகுலனின் ஏற்பாடோ?

ஏற்பாடென்ன ஏற்பாடு... சதி!?

தவிப்பாய் யோசித்தவள், புலி அல்லது கரடிக்கு அஞ்சி காட்டில் உள்ளவர்கள் தீப்பந்தத்தை ஏற்றி வைத்து அவற்றை மிரட்டி, விரட்ட தயாராய் இருப்பது போல, நகுலனை எட்டியே நிறுத்த சில வார்த்தைகளை வாக்கியங்களைத் தேடலானாள்-அல்லது தன் கணவன் தன்னை விழுங்கியே விடுவான் என்று தோன்றியது அந்தப் புதுப் பெண்ணிற்கு!



## 15

இதமான வெளிச்சம், இசை, குளிரோடு அந்த அழகு நிலையத்தின் அறை மணக்கவும் செய்தது!

கண்களை மூடியபடி சாய்ந்திருந்த நவ்யாவின் தலையை ஒரு சீனப் பெண்ணின் தேர்ந்த பிஞ்சு விரல்கள் 'மசாஜ்' செய்து கொண்டிருந்தன.

மூலிகை மணத்தோடிருந்த வெதுவெதுப்பான எண்ணெயை நவ்யாவின் மயிர்கால்கள் ஆசையாய் உறிஞ்சிக் கொள்ள, உடலின் சூடு தணிந்திருந்தது.

அந்த சுகத்தில் அவ்வப்போது உறங்கியேப் போன அவளது கூந்தலை கழுவி, உலரவும் வைத்த சீனப் பெண், அதற்குள் முகத்தையும் மெருகூட்டியிருந்தாள். இதெல்லாம் போதாது போல உள்ளங்கைகளில் மருதாணியின் பூக்கோலம்.

''இதெல்லாம் எதற்கு வகுளா? கல்யாணந்தான் ஆச்சே?''



''ரெண்டு பெற்ற நானே இதையெல்லாம் செய்துக்கறேன் - புதுப் பெண்ணிற்கு அவசியமில்லையா?''

முந்தினநாள் அலுக்கும் வரை கடைகளில் ஏறி இறங்கியவர்கள் மாலை நகுலனின் அத்தை வீட்டிற்கு போய் விருந்தாடினார்கள்.

''இன்னைக்கு விமலாத்தை வீட்டிற்குப் போறோம் அண்ணி. அவங்களுக்கு வயசை ஐம்பதைத் தாண்டிலும் அலுக்காமல் அலங்கரிச்சுக்குவாங்க-அதிலும் நான் நேர்த்தியாய் உடுத்திக்கலைன்னா திட்டு வேறு வரும்.

''உங்கண்ணா சம்பாதிச்சு குவிக்கிறான். ஜம்முனு உடுத்தி, வீட்டை பராமரிச்சுக்கறதை விட உங்களுக்கென்ன வேலை?''ன்னு.

''ஓஹோ?''

''நாம வாங்கின டல் ஆரஞ்சு நிற ஜூட் ஸில்க் புடவையைக் கட்டி, ஆன்டிக் தங்க ஜிமிக்கி, நெக்ஸலோடு உன் மருதாணி விரலும் சேர்ந்தால் அமர்க்களந்தான்.''

அலங்காரத்தை வெறுக்கும் பெண் உண்டா?

அதுவும் பார்ப்பவர்களெல்லாம் பாராட்டையும் அள்ளித் தரும் போது?

ஆனால் அன்று மாலை அந்த அலங்காரத்துடனிருந்த தன்னை அள்ளி விழுங்கிய நகுலனின் கண்கள் அவளை அசௌகர்யமாய் நெளிய வைத்தது.

அவனை வெறுப்பேற்று அஸ்திரங்களை இவள் வீசி எறிய, நகுலன் ஆத்திரத்துடன் விலகியே இருந்தான். அதை அவன் அணைத்த இரவுகளில் இவள் மரக்கட்டையாய் கிடக்க, அதுவும் அவனை வெறுப்பேற்றியது.

''இப்படி விருந்துகளுக்கு வேண்டா வெறுப்பாய் கடைசியாய் வந்து, எங்களை வீட்டிற்கு கூட்டி வரும் அண்ணனா, அரை மணி நேரம் சீக்கிரமாவே வந்து, தன் பெண்டாட்டியை முறைத்துக் கொண்டிருப்பது?''

''உனக்குக் கல்யாணமானபோது மாப்பிள்ளை இதை விட மோசமான நிலைமையில் இருந்ததாய் ஞாபகம்'' என்று அவன் தங்கையின் வாயடைத்தான்.

வகுளாவின் மூத்த குழந்தை ஸ்னேகாவைத் தூக்கி நவ்யா கொஞ்சும் போதெல்லாம் நகுலனின் முகம் கருத்தது-

சில சமயம் குழந்தையை மனைவியிடமிருந்து பிடுங்கி விடுமளவிற்கு! அதன் காரணம் நவ்யாவிற்கு தெரியும்தான்-

தான் ஒரு குழந்தைக்காய் ஏங்குவதாகவும்- அது பிறந்ததும் அதை நகுலனிடம் தந்து விட்டு தான் விலகி விடுவதாய் ஒரு சமயமும், பிறிதொரு வேளை,

'அந்தப் பிள்ளை முகம் பார்த்தேனும் நான் ஆறுதல் பட்டுக் கொள்வேனில்லையா?'' என்றெல்லாம் அவனை ராவி எரிய விட்டது அவள்தானே?!

வகுளாவும் குழந்தைகளும் இருந்த வீடு களையாய் கலகலத்தது போல, அவர்களோடு நகுலனின் தாயும் கிளம்பியதும் வீடு வெறிச்சோடியது. இரு பெண்களுமாய் சேர்ந்து பேச, சிரிக்க, சமைக்க, உடுக்க, சுற்ற என்றிருந்த தில் விரைந்த நாட்கள் இப்போது ஊர்ந்தன.

இப்போது கணவனின் பிடியில் கட்டையாய் கிடப்பது நவ்யாவிற்கு மேலும் சுலபமாயிருக்க, நகுலன் சிடுசிடுத் தான்.

''உன்னை நான் ஏமாற்றலை நவி - ஏமாற்றப்பட்ட அபலை போல இதென்ன நாடகம்?''

''இது நாடகமில்லை நகுலன் - இதுதான் நிஜம் - என் மனசு இங்கேயில்லையே? வெறும் உடம்பின் பங்கு தாம்பத்தியத்தில் 25% தான் - மிச்சதெல்லாம் மனசின் ஆதிக்கம்தான். இதைச் சொல்வது பாலுணர்வு வல்லுனர்கள்..'' என்றாள் சற்று சோகமாய்!

''நீ சம்மதித்த பிறகுதான் நம் கல்யாணம் நடந்தது.''

''அந்த சம்மதத்தை நீங்க வாங்கிய விதம் உங்களுக்கு மறக்கலியே? அம்மாவை, காவ்யாவைக் காட்டி, அவங்க சந்தோஷத்திற்காய் என்னைத் தியாகம் செய்ய வச்சீங்க.''

''அவங்களுக்கு என்னைப் பிடிச்சிருந்தது.''

''ஆனா உங்களைக் கல்யாணம் பண்ணினது நான்! என் வீடு, எங்க வியாபாரம் - அன்றாட வேலையில் கூட புகுந்து வியாபித்து எனக்கு சம்மதிப்பதைத் தவிர வேறு வழியில்லாமல் மடக்கிட்டீங்க.''

''இன்னும் பரத்தை நினைச்சிட்டிருக்கியா?''

அவள் முகம் சட்டென சிவந்தது. நீர் கட்டிய கண்கள் அவனை வெறித்தன.

''அங்கேயும் உங்க முரட்டு பலத்தைக் காட்டுனீங்க... ஆக எனக்கு வேற வழியில்லை...''

அவளை நெருங்கி நின்றவனின் குரல் தணிவாய் பேசியது.

''உன்னையே ஏமாற்றிக்காதே நவி. உன் குடும்பத் திற்காய் தியாகம் செய்ததாய் என்று. உனக்கும் என்னைப் பிடித்திருந்தது - என் மேல் நம்பிக்கை இருந்தது. என் தொடுதல், அணைப்பு இதெல்லாம்... யு என்ஜாய் -

... இரு மடங்காகும் உன் இதயத் துடிப்பே சாட்சி.”

“அது ப்ரியம்! இப்போ ஒரு பாம்பைப் பார்த்தால் அது மூன்று மடங்கு வேகமாய் கூட துடிக்கும்!”

“ஓ?” தோளிலிருந்து அவளது மணிக்கட்டு வரை மெள்ள நீவியவன், அவளது கையைப் பற்றி, அவளது உள்ளங்கையில் முத்தமிட்ட, அவனது இடது கை இவள் மணிக்கட்டின் துடிப்பை கணித்தது!

“உன் பல்ஸ் வேகமாகுதே?”

“வெறுப்பு!”

“அப்போ ஒரு பெண்ணின் விருப்பு எப்படியிருக்கும் நவி?”

“அதை நீங்க பூமணியிடம் பார்த்திருக்கணும்.”

பிடித்திருந்த இவள் கையை உதறினான் -

“இப்போ அந்தப் பேச்சு ஏன்?”

“ஓ... நீங்க பரத்தைப் பற்றி பேசியதால்தான் நானும் தைரியமாய் பூமணியின் பேச்செடுத்தேன்...”

அலட்சியமாய் அவனை மடக்கினாள்.

“ஹோ..” பெருமூச்செறிந்தான் - “வீட்டு நிர்வாகக் கல்வி யில் விதண்டாவாதம் பண்ணுவது பற்றிய பாடம் இருந் ததா? அதைப் பிரமாதமாய் கற்றுத் தேறியிருக்க?” என்ற படி அவன் விலக, முறைப்புடன் நின்றிருந்தாள் நவ்யா.

வேண்டாத எண்ணங்களால் மனம் மேலும் கசடா வதை உணர்ந்தவள் தாய் சொன்னது போல, சமையலில் இறங்கினாள்.

‘விதவிதமான குக்கிங், பேக்கிங் படிச்சியே நவி. நகுலுக் குச் செய்து தர்ரேல்ல?’ என்று நளினி கேட்டபோது சிரித்து மழுப்பியவள், ஏதேனும் செய்தால்தான் தன் மனமும் கட்டுப்படும் என்பதை உணர்ந்து வீட்டு வேலை களையும் இழுத்துப் போட்டு செய்தாள்.

அன்று ஸூப், மீட் - பை, புட்டிங் என்று சமைத்து முடித்தவள், பரிமாறப்படும் மேஜையையும் அதற்கேற்ப அமைத்தாள் -

அழகிய மேஜை விரிப்பில் பளபளத்த கண்ணாடி தட்டுகளும் வெள்ளி டம்ளர்களும், ரோஜாக்களோடு, மெழுகுவர்த்தியின் வெளிச்சத்தில் கண்களை நிறைத்தன.

‘ரொமான்டிக் ஸெட்டிங் இது’ என்று ஆசிரியை கற்றுத் தந்தபோது மாணவிகள் கிளுகிளுவென சிரித்தாலும், இப்போது இது நவ்யாவிற்குக் கசந்தது.

வாழ்வில் ரொமான்ஸ் இல்லாமல் அதற்கான ஸெட்டிங் மட்டும் எதற்கு என்ற சலிப்புடன் முத்து போல ஒளிர்ந்து மெழுகுவர்த்தியின் சுடரை ஊதி அணைத்தாள் -

கருகிய திரி எழுப்பிய புகை ஊடாய் அந்த சத்தம் புகையிலிருந்து வரும் பூதம் போல!

“ரொமான்ஸ் எல்லாம் வெறும் சாப்பாட்டில் மட்டுந் தானா நவி?” கேட்ட நகுலன் எப்போது வந்தான்? மிகத் தாமதமாகவே அலுவலகத்திலிருந்து வருபவன் இப் போது வீடு தேடி ஓடி வருவதாய் வகுளா கேலி செய்தது போல, தாமதமின்றி வீடு வருகிறான்தான் - இவளோடு சேர்ந்து சாப்பிட... ஆனால் பேசத்தான் ஏதுமில்லாமல் மௌனம் ஒரு வேண்டாத மூன்றாம் நபராய் அவர்கள் இடையே உட்கார்ந்து விடுகிறது!

“கல்லூரியில் படித்ததெல்லாம் மறந்துடக் கூடா தில்லையா?” பட்டும் படாமல் பதிலளித்தாள் -

சரியாய் கற்றுத் தராமல் விட்டுட்டாங்களே?'' சீண்டலாய் சலித்தவனின் கைகள் இயல்பாய் மனைவியின் தோளைச் சுற்றின.

இவளது உடம்பின் நெடுக ஒரு சிலிர்ப்பு...

அது விருப்பினாலா அல்லது வெறுப்பா என்பது பற்றி ஒரு பட்டிமன்றமே அவளுக்குள்!

வலது கையின் விரல்களால் நவ்யாவின் கன்னத்தை வருடியவன், ''இதைப்போல நீ மென்மையானவள் நவி... என் அணுகுமுறையும் சற்று மென்மையாய் இருந்திருக்க வேணும். என் அவசரத்தில், அதிரடியாய் முயற்சித்து உன்னைப் பிடுங்கினதில் உனக்குக் கொஞ்சம் எரிச்சல்... ம்ம்? ஆனால் பயந்து விலகிய உன்னை வேறெப்படி அடைவதுன்னு இயந்திரங்களோடு பழகும் எனக்குத் தெரியலை. கரும்பை கூட மென்மையாய் ருசிக்க முடியாதே... அது போல.''

''அதை முன்னமே ஒருதரம் சொன்னீங்க.''

''ஞாபகம் வச்சிருப்பதற்காய் நன்றி'' என்று சிரித்தவனின் கவர்ச்சி இவளைப் பாதித்ததுதான் - ஆக முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''தவறுகள் மன்னிக்கப்படலாம், தீர்ப்புகள் திருத்தப்படலாமே நவி? அதுவும் நான் இவ்வளவு கெஞ்சலாய் உன்னைக் கொஞ்சும்போது.''

மனைவி மேலும் முறுக்கிக் கொள்ள, அவன் பேச்சை மாற்றினான் ''நம் கல்யாணத்திற்கு சில நாட்களுக்கு முன்பு டி.வி.யில் ஒரு ஹாலிவுட் சினிமா பார்த்தேன்.''

''உங்களுக்கு அதற்கெல்லாம் நேரமிருக்குதா?''

''வேலைகளின் இடையே அவ்வப்போது பார்த்தேன் - புரிய அது போதுமாயிருந்ததே - பார்க்கக் காரணம் படத்தின் பெயர் - 'புதுத் தம்பதிகள்' - 'ஜஸ்ட் மாரிட்.'-''

இவளது தோழிகள் அது பற்றி பேசியதாய் அவளுக்கு நினைப்பில்லை. ''பெரிய பணக்காரப் பெண் ஒருத்தி, கவர்ச்சியான இளைஞனைக் காதலித்து, பெற்றோர்கள் அவர்களுக்கு முதிர்ச்சி போதாதுன்னு நினைச்ச போதிலும் கல்யாணம் செய்துக்கறாங்க. தேனிலவிலேயே அவர்களுக்கிடையே பொறாமை, சந்தேகப் பூசல்கள்.''

தாங்களும் பரத், பூமணியைத் தங்கள் பேச்சில் இழுத்து ஒருவரை ஒருவர் காயப்படுத்த முயன்றதை நினைத்துக் கொண்டாள், நவ்யா.

அவன் கதையைத் தொடர்ந்தான் -

''தேனிலவு காலம் முடியும் முன்பே தங்களின் விவாகத்தை ரத்து செய்து விடும் முடிவிற்கு வரும் தம்பதிகளில் ஹீரோயின் தாய் வீட்டிற்குப் போய் விட, ஹீரோ தன் தந்தையைப் பார்க்கப் போகிறான் - மனைவியை இழந்த அவர், தனது போட்டோ ஆல்பத்தை ரசித்துக் கொண்டிருக்கிறார் -

மகன் - ''நீங்களும் அம்மாவும் எவ்வளவு இணக்கமாய், மகிழ்வாய் வாழ்ந்தீங்க - இல்லையாப்பா?'' என்கிறான் சற்று ஏக்கமாய்.

நவ்யாவின் சமையலை எழுந்து போய் இடையே நகுலன் ருசி பார்க்க, அவளுக்குள் தகப்பனின் பதிலை அறியும் ஆர்வம் -

அவளைச் சற்று அல்லாட விட்டவன் - ''அதற்கு அந்த அப்பா என்ன சொன்னாராம்?'' என்று இவள் கேட்ட பிறகே கதையைத் தொடர்ந்தான்!

''ம்ம்... இந்தப் படங்கள் எடுக்கப்பட்டது மகிழ்வான தருணங்களில்தான். ஆனால் அவற்றின் இடையே, எங்களின் உறவைக் காப்பாற்றிக் கொள்ள, அடுத்த ஆனந்த நேரத்தை உருவாக்க, நானும் உன் அம்மாவும், நிறைய முயன்றோம், உழைத்தோம், விட்டுக் கொடுத்தோம்.' என்பார்! பிறகென்ன சின்னவர்கள் சேர்ந்துட்டாங்க.''

தொடர்ந்த மௌனத்தில் நவ்யாவின் கண்கள் பனித்தன. தங்கள் தாம்பத்தியத்தின் நிலைமையை எண்ணி, அவளே பரிதாபப்பட்டபடி அங்கிருந்து அகன்றாள்.



## 16

கடவுள் கூட நகுலனின் பக்கம் தானோ?

சற்று திகைப்புடன் குழம்பினாள் நவ்யா!

முகமெல்லாம் சிரிப்புடனிருந்த பவித்ராவைப் பார்த்தவளுக்குத் தானும் சிரிப்பதா அல்லது அழுது விடலாமா என்ற புது அல்லாட்டம்!

இவள் கல்லூரித் தோழியான பவித்ராவிற்குப் படிப்பு முடித்த கையோடு கல்யாணமும் ஆகி இப்போது கையில் பொம்மையாய் குட்டிப் பாப்பா வேறு. அப்பா இறந்த இவர்கள் தங்கள் 'நாதன்'ஸ் ஸ்டோர்ஸை திறந்த சமயம் என்பதால் நவ்யாவிற்கு தோழியின் கல்யாணத்திற்குப் போக முடியவில்லை. கைக்குழந்தையோடு பவி, கொடைக்கானல் வரமுடியவில்லை என்றாலும் சென்னையின் தடபுடல்பட்ட வரவேற்பில் கலந்து கொண்டவள், பிறகும் ஓரிரு முறை நவ்ய[illegible]வந்து பார்க்கவே செய்தாள்.



'எங்க வீட்டிற்கு தம்பதிகளாய் நீங்க வரணும் மிஸ்டர். நகுலன் நிஜ பிரியாணி போடறேன்' என்றவள் தொடர்ந்து, தங்கள் விடுதியின் 'சைனா பிரியாணி' கதையை எல்லாம் அவனுக்குச் சொல்ல, அவனும் சுவாரஸ்யமாய் கேட்டுக் கொண்டான்.

''நல்லா பார்த்தியா பவி? பாஸிடிவ் என்றா காட்டுது?''

''நீயே பாரேன் நாம் கர்ப்பமா இல்லையாங்கறதை இந்த ஐம்பது ரூபாய் சாதனம் கச்சிதமாய் காட்டிடும். வாழ்த்துக்கள் - வருங்கால அம்மாவே!''

தோழியைக் கட்டிக் கொண்டாள் பவித்ரா.

''இப்ப... இனி என்ன பவி?''

''நானும் கல்யாணமானதுமே கர்ப்பமாயிட, இப்படி முழிச்சேன் தான். அது சரி, நீ ஏன் 'ஹி ஹி'ன்னு சிரிக்கலை நவி? சங்கடமான சந்தர்ப்பங்களில் ஒரு சிரிப்பை அவிழ்த்து விடுவியே... ஆனா இது சந்தோஷமுமில்லையா? நமக்குள்ளே ஒரு ஜீவன் உருவாகி, வளர்ந்து நம்மை நம்பி இந்த உலகில் பிறப்பது? அது ஒரு அற்புத அனுபவம் நவ்யா. மொத்த குடும்பமுமே இப்போ என் குட்டி மகளைச் சுற்றிதான் நீ நாள் தள்ளிப் போயிருக்குன்னதும் இந்த 'கிட்'டோடு, வந்தால், இங்கேயும் இனி ஒரு குழந்தை ராஜ்யம்தான்.''

சற்று நேரமாய் தாய் தன்னைக் கவனிக்கவில்லையே எனும் ஆதங்கத்தில் பாப்பா சிணுங்க, நவ்யா பூப் போலிருந்த அந்த மழலையைத் தூக்கிக் கொண்டாள். தன்னை எடுத்த புது முகத்தை ஒரு கணம் புருவம் சுருக்கிப் பார்த்த குழந்தையின் கவனம் 'சட்'டென நவ்யாவின் கழுத்தில் மின்னிய கிறிஸ்டல் மாலைக்குத் தாவியது. வெள்ளையும் ஆரஞ்சுமான க்ரேப் சில்க்

கிறகுப் பொருத்தமாய் அவள் மார்பில் நீளத் தொங்கிய ஆரஞ்ச் நிற கிறிஸ்டல் மாலையை எடுத்து வாயில் வைத்துக் கொண்டது.

''பல் முளைக்கப் போகுது போல நவி - ஆக எதை யாகிலும் அவளுக்குக் கடிக்கணும்.''

அந்தப் பிஞ்சு கைகளின் ஸ்பரிசம், பால் மணம், அள்ளியவளை நெகிழ்த்த, அணைத்து முத்தமிட்டாள் -

நகுலனும் இதே போலத்தானே தன்னை இறுக்கி முத்தமிடுவான்?

அவன் மனதும் தன்னில் நெகிழ்ந்ததாலா அது?

ஆனால் தான் வீறாப்பும் விறைப்புமாய்... அது அச்சத்தி னாலா வெறுப்பாலா என்பது அவளுக்கு இன்னுமே தெளிவாகவில்லை!

மிக வெற்றிகரமான, கவர்ச்சியான நகுலனுக்குத் தன் மேல் தோன்றிய 'திடீர்' ஆசை ஏன்? அதுவும் தன்னை மனைவியாக்கிக் கொள்ளும் அளவில் - என்ற கேள்விக் குடைச்சல், பெரும் குடையாகி, கணவனின் மோக மின்னலில் முத்த மழையில் இவளை நனைய விடாமல் தடுத்துக் கொண்டிருந்ததே!

''மனசைச் சந்தோஷமாய் வச்சுக்கோ. நவி பலர் வியந்து பாராட்டும் நகுலன் உன்னிடம் சரணாகதி அடைந்ததே போதுமே - உன்னைக் கிளுகிளுப்பூட்ட இனி குழந்தையும் சேர்ந்தால் டபுள் ஜாலி'' என்ற பவித்ரா, முதன் முறை வீட்டிற்கு வந்தபோது ஆவலாய் இவளது காதல் கதையைக் கேட்க, முகமெல்லாம் சிவக்க நவ்யா தடுமாறினாள்.

அப்போது நகுலன்தான் கை கொடுத்தான்!



''காதல் பெறுவது, தருவது, அடைவதெல்லாம் இல்லை -

அது நிகழ்வது! என்பதைக் கேள்விப்பட்டதில்லையா பவித்ரா நீங்க? எங்களிடையே அது நிகழ்ந்து விட்டது - அவ்வளவுதான்'' பவித்ரா பரவச நிலைக்கே போய் விட்டாள்!

''ச்சே, நீ ரொம்ப லக்கி, நவ்யா. உன்னவர் பிஸினஸில் கில்லாடிங்கறது ஊருக்கேத் தெரியும். காதல், கவிதை சமாச்சாரத்திலும் அவர் கொடி உயரத்தான் பறக்குது!''

வழக்கமாய் சிரித்து மழுப்பும் நவ்யா, ஏனோ அன்று விடாமல் பேசினாள் -

''எனக்கும் காதல் கஜல்கள் இப்போது பரிச்சயம் பவி,

'நம் ரகசியத்தை
நான் எப்போது வேண்டுமானாலும்
வெளியிடக்கூடும்! வைத்திருக்கும் வலி -
கொடுமையானது! - எப்படி?'''

நல்லவேளை தம்பதிகளின் கண்கள் உரசி, அதில் பொறி பறந்ததை, பவித்ரா கவனிக்கவில்லை! ஆக கவிதாவிடம் போல, இங்கே நவ்யா தன் மனதைத் திறந்து காட்டவில்லை.

காட்டினாலும் என்ன பயன் - என்ற சலிப்பு!

பூமணியின் விபத்து, விசாரணை எல்லாம் படு ரகசியமாகவே வைக்கப்பட, இவர்களின் கதையைப் பலர் பளபளப்பான காதல் முலாம் பூசியே ரசித்தார்கள்!

''போன தரம் நீயும், உன் நகுலனுமாய் ஏதோ காதல் வரிகளை வைத்து எனக்குப் பூச்சாண்டி காட்டுனீங்களே? நானும் நம்ப வலம்புரி ஜானின் கவிதை வரியை இப்போ உருப்போட்டு வச்சிருக்கேன் -

'காதல் - அதைச் சொல்லித் தர முடியாது -
ஆனால் கற்றுக் கொள்ள முடிகிற கவிதையின்
ரீங்காரமது?'' 'தாய் அபிநயத்துடன் முழங்க, பவித்ராவின்
குழந்தை தன் பொக்கை வாயைத் திறந்து சிரித்தது!

சிநேகிதி போன பிறகு படபடப்புடன் கண்ணாடியின்
முன்னே நின்று தன்னை உற்றுப் பார்த்தாள் நவ்யா.

சருமத்திலும் கண்களிலும் தனி மினுமினுப்பு
இருப்பது - இதனால்தானா? சென்ற மாதத்தில் ஒரு
நாளிரவு நகுலன் தன் காதில் முணுமுணுத்தானே - 'முதல்
நாளே, கர்ப்பமாகணும்னு ஆசைப்பட்டாய் இல்லையா
நவி? இப்ப உன் ஆசை நிறைவேறியிருக்கும்' என்று!

அவன் கை வளைவிலிருந்தவள் முரண்டி, மறுபுறம்
திரும்பியபடி பதிலடித்தாள் -

"வேணாம் - எனக்கு உங்க குழந்தையே வேணாம்.
அப்போ வாரிசு தர முடியாத என்னை நீங்க விவாகரத்து
செய்திடுவீங்க இல்லியா?''

வழக்கமாய் இவளது கோபத்தைக் கொண்டு சிரிப்
பவன், அன்று அவளை முரட்டுத்தனமாய் திருப்பினான்.

"இனி இப்படி உளறாத நவ்யா'' என்றவனின் கோபம்
ஏனோ இவளை மிரட்டவில்லை!

"அப்போதும் என்னை விட மாட்டீங்களா?'' என்றாள்
விடாமல்!

"குழந்தைக்காக நான் வேறொரு கல்யாணம் செய்
தாலும், நீ நிச்சயம் இங்கேதான் - என்னோடுதான்.''

அன்று அவன் குரூரமாய் சொன்னதை இன்று நினைத்
தாலும் கொதித்தது!



என்ன ஒரு கர்வம்?

வாரிசு இல்லாவிட்டால் இவன் சாம்ராஜ்யமே வீணாகி
விடும் போலொரு திமிர் பேச்சு?

இப்போது தான் கர்ப்பம் என்ற செய்தி - அவன்
திமிருக்குத் தீனியல்லவா போடும்?

தன் தாயிடம் இவள் விவரத்தைச் சொல்ல, அடுத்த
அரை மணி நேரத்தில் ஒரு சிறு பையனின் குதூகலத்
துடன் வீடு வந்து விட்டான் நகுலன்!

இவள் கையில் ஒரு பெரிய ரோஜா கொத்தை,
இனிப்பை வைத்தவன் நெற்றியில் முத்தமிட்டான்.

"ஆக நீ இனி நவி அம்மா - ம்ம்?''

அவன் கண்களும் குறுகுறுவென இவளில் ஓடின.

"நீ ரிலாக்ஸ்டாய் இருக்கணும் நவி... நான் ஏதும் தப்
பாய் பேசியிருந்தால் அதை மனசில் வச்சுக்காதே - ம்ம்?''

தங்களது திருமணத்தில் ஏதோ ஒரு மர்மம் இருப்பதாய்
தான் நினைக்கும் வரை எப்படி முழு நிம்மதி வாய்க்கும்?

ஆனால் நகுலனின் குதூகலம் அந்த வீடெங்கும்
பரவியது. மாமியாரும், நாத்தியும் போனிலேயே கொஞ்சி
வாழ்த்த, வீட்டின் கலகலப்பும் கூடியது.

"இதுவரை கொறிச்சதுக்கு நான் ஏதுஞ் சொல்லலை.
ஆனா. இனிமே நல்லா அள்ளிச் சாப்பிடணும் - அப்ப
தான் உடம்பு வலுவாயிருக்கும்'' என்று அங்கே பல வரு
ஷங்களாய் வேலைக்கிருந்த முத்தாயி அதட்டியதோடு,
கூடவே நின்று பரிமாறினாள்.

வகுளாவை இது போல பராமரித்த முத்தாயி, இப்போது
தன்னையும் தன் பாசச் சிறகின் கீழே சேர்த்துக் கொண்டது
புரிந்தது.

"வாய்க்கு எது ருசிக்குதோ - அதைச் சொல்லுடா. எந்நேரமானாலும் செய்து தரேன். தம்பி எனக்கு இப்ப அஜிஸ்டென்ட் வேற போட்டிருக்குல்ல?"

தாய் இங்கே இருக்கும் போதே நகுலன் -

"முத்தாயிக்கு உதவிக்கு ஆள் போடுங்கம்மா - ஒரு அஸிஸ்டென்ட் இருந்தால், கூட நாலு வருஷம் அவங்க இங்கயே இருக்கலாம்' என்றிருந்தது நவ்யாவிற்கும் தெரியும்.

உழைப்பவர்களைக் கரிசனையாய் கவனிப்பவன் தான்.

அலுவலகத்திலும் அவன் கீழே வேலை பார்ப்பவர்களை அனுசரித்துப் பழகுபவன் - தாயும் தங்கையும் அவனிடம் உருகுகிறார்கள் -

தன்னிடம் மட்டும் ஏன் எக்குத் தப்பாய் எகிறுகிறான்?

அல்லது அவன் பிரியத்தைத் தன்னால் மட்டும்தான் புரிந்து கொள்ள முடியவில்லையோ?



## 17

தள்ளிப் போடப்பட்டிருந்த அவர்கள் அலுவலகத்தின் வரவேற்பு விழா இப்போது இரட்டை அமர்க்களமாய் அமைந்து விட்டது.

'உங்களது தாம்பத்யம் அருமையாய், அழகான குழந்தைகளோடு ஆண்டவனால் ஆசீர்வதிக்கப்படட்டும்' என்று வாழ்த்திய நகுலனின் ஊழியர்கள், மாலைகள், பரிசுப் பொருட்கள் என்று குவிக்க, விருந்தை ஏற்பாடு செய்திருந்தது நகுலன். அலுவலக ஊழியர்கள் மிகப் படித்தவர்கள் என்றாலும், அதிகக் கல்வி இல்லாத பஸ் ஓட்டுனர்கள், மெக்கானிக்குகளும் சம ஆர்வத்துடன் சகஜமாய் விழாவில் கலந்து கொண்டதை நவ்யா கவனித்



தாள். மேலும் ஆச்சரியப்படுத்தியது - நகுலனுக்குப் பலரின் குடும்பம் தெரிந்திருந்ததுதான் - இவன் பேர் சொல்லிக் கூப்பிட்டு பேச, பலரது பிள்ளைகள்.

"அங்க்கிள்" என்று அவனை ஆசையாய் அழைத்துப் பேசினார்கள்.

'அங்க்கிள்' பிள்ளைகளுக்கு தந்த பரிசான வீடியோ கேம்ஸ் அவர்களை மேலும் குஷிப்படுத்த,

'பிள்ளைகள்ன்னா சும்மாவே நகுல் செல்லம் கொடுப்பார் - இப்போ தன் குழந்தையை தரையிலேயே நடக்க விடமாட்டார்' என்ற கேலியும் சேர்ந்தது.

கம்பெனியின் மேனேஜர் நகுலனின் பள்ளி, கல்லூரி - சீனியர். ஆக கடைசி வரை இருந்தவர் உரிமையாய் சீண்டினார் -

"நவ்யா - உன்னைப் பார்த்ததுமே பயல் கவிழ்ந்திருப்பானே? எனக்கு அதற்கான காரணம் தெரியும்."

நவ்யா ஆர்வமானாள் -

"சொல்லுங்களேன்."

"நகுல் தெற்றுப் பல் சிரிப்பில் தடுமாறிடுவான்!"

மற்றவர்கள் சிரிக்க, நகுலனின் முகம் சிவந்ததை நவ்யா கவனித்தாள்!

"ஸ்கூல் காலத்திலேயே அவனுக்கு அந்த வீக்னஸ் ஆரம்பமாயிடுச்சு."

"ஓ... அவரோடு படிச்ச பெண்ணிற்குத் தெற்றுப் பல்லா?"

"இல்லை. எங்க அஸிஸ்டென்ட் ஹெச்-எம்மிற்கு!"

சிரிப்பு கூடியது.

"அவங்க எள் என்றால் நகுல் எண்ணெயாய் வழிவான்."

''கமான் ஹரி - ஓவராய் கதை விடாதே. அவங்க ஆங்கிலக் கவிதைப் பாடத்தை ரொம்ப அற்புதமாய் கற்றுத் தருவாங்க - அதான்...''

''ச்சும்மா. ஒவ்வொரு வரியையும் விளக்கி விட்டு, 'புரியுதா'ன்னு ஒரு சிரிப்பு சிரிப்பாங்களாம் - இவள் காத்திருந்தது, ரசித்தது அதைத்தான்.''

அனைவரும் விடை பெற்றுப் போன பிறகும் நகுலனின் முகம் மலர்ந்தே இருந்தது. அத்தனை பேரது மனமார்ந்த வாழ்த்துக்கள் அவனை இளக்கியிருக்க வேண்டும்.

காவ்யா டெல்லிக்குப் படிப்பின் நிமித்தம் போயிருந்த தால், உடனே வர முடியாவிட்டாலும், வித விதமான பலகாரங்களுடன் அம்மா, நளினி வந்து விட்டாள்.

முத்தாயி தன் மகளைக் கவனித்துக் கொண்ட பாங்கில் அம்மாவிற்கு முழு திருப்தி.

''பேறுகாலம் உங்க ஊரிலியாம்மா?'' என்று கேட்ட ஆயாவிடம் ''அது நிச்சயமில்லை முத்தாயி. எங்க குடும்ப டாக்டர் அவங்க மகளின் பேறு காலத்திற்காய் அமெரிக் காப் போவாங்க போலிருக்குது - உடனேத் திரும்பக் கூடிய தொலைவில்லையே அது? ஆக இன்னும் ரெண்டு, மூணு மாதங்களில் அங்கேப் போறவங்க, திரும்ப ஆறு மாசமாகும்.''

''கவலையேப் படாதீங்கம்மா - நம்ப டாக்டரு புஷ்ப வல்லிம்மா இங்கே இருக்கையில என்ன சங்கடம்? அம்மாவுக்கு பேறு காலம் பார்த்தவங்களாம் - பிரியமாய் பழகுவாங்க...''

''ஆமா - அக்கா கூட போனில் அவங்களைப் பற்றி சொன் னாங்க. முதல்ல ஒரு செக் - அப்பிற்குப் போயிடணும்.''

நளினி சொல்ல, நகுலன் உடனே ஒரு அப்பாய்ன் மெண்ட் குறித்து வாங்கினான்.

நகுலனை வாழ்த்துடன் வரவேற்ற டாக்டர் புஷ்ப வல்லியைப் பார்த்ததுமே நவ்யாவிற்குப் பிடித்துப் போனது.

அவர் முகத்தில் அனுபவமும் கம்பீரமும் இருந்த அளவிற்கு கண்களில் கனிவிருந்தது.

''கல்யாணப் பெண்ணாய் உன்னைப் பார்த்தது நவ்யா - இப்போ தாய்மையின் களையும், சேர, யு ஆர் லவ்லி'' என்றவர் இவளைப் பரிசோதித்து விட்டு,

''இப்போதுள்ள இளம் பெண்கள் வீட்டிலும், பிறகு அவதியாய் ஓடி ஆபீஸிலும் ஓய்வில்லாமல் வேலை பார்ப்பது - அவர்கள் கர்ப்பமாய் இருக்கும் போதேனும் தவிர்க்கப்படணும். ஆனால் சும்மா வீட்டிலிருப்பதும் ஆரோக்கியமில்லை. வீட்டு வேலைகளில் ஈடுபடு - முக்கியமாய் மனதை சுறுசுறுப்பாய் வைச்சிரு...''

''நவி - அப்போ அவங்க அம்மா வீட்டிற்குப் போகட் டுமா டாக்டர்?''

''கர்ப்பத்தின் முதல் மூணு, இறுதி மூணு மாசங்கள் பயணங்களைத் தவிர்க்கணும். இங்கேதான் பொறுப்பாய் முத்தாயி இருக்காளே? நீங்களும் அடிக்கடி இங்கே வந்து போகலாமே மிஸஸ். நளினி?''

''நல்லது டாக்டர். நீங்க சொல்றபடிதான்.''

''குட். போலிக் சத்துள்ள மாத்திரைகளைத் தந்திருக் கேன் - நவ்யா கொஞ்சம் மிரண்டு தெரிவதால்தான் மனசை எதிலேனும் ஈடுபடுத்தச் சொன்னேன். நகுலன் வீடு விசித்திர அமைப்பிலிருக்குமே - ஒரு பாதி சிறுசும் பழமையுமாய், மறுபாதி புதிதாய்?''

''ஆமா டாக்டர். அவங்களின் பழைய வீட்டை
எடுத்துக் கட்டினாங்க போல.''

''நகுலின் அம்மாக்கு வீட்டை அலங்கரிப்பதில் ரொம்
நாட்டமில்லை. நீ வீட்டை மாற்றி அமைக்கலாமே
நவ்யா? அது உன்னை உற்சாகப்படுத்தும்? தவிர இந்
ஸ்மார்ட் பிஸினஸ் மேனின் வீடு, அவனுக்கேற்
தோரணையில் இருக்க வேண்டாமா?

மிக உற்சாகமாய் வீடு திரும்பினாள் நவ்யா!

வீட்டின் அமைப்பும் அலங்காரமின்மையும் அவளுக்கு
ஆச்சரியம்தான் என்றாலும், வந்ததுமே தான் அதில்
மாற்றங்களைச் செய்யத் தயங்கினாள் -

'புதுப் பொண்ணு ரொம்ப அலட்டுது' என்ற விமர்சனத்
திற்கான அச்சம்!

''அத்தைப் பிடிக்குமோ பிடிக்காதோ?'' என்றவள்
இழுக்க,

''அம்மாக்கு நீ எது செய்தாலும் பெருமைதான்' என்று
நகுலன் சொல்லிவிட, புதுப் புது திட்டங்கள் நவ்யாவி
னுள்ளே!

மாமியாரும் போனில்,

''நகுல் வீட்டுக்காரியைப் போல வீடும் கண்ணை
நிறைக்கட்டும்மா'' - என்றுவிட, சுவர்களின் வண்ணங்
கள், திரைச்சீலைகள், எங்கெங்கே என்னென்ன அலங்
காரம் அல்லது ஓவியம், மரச் சாமான்கள் தேவை என்று
பட்டியலிட்டாள்.

வீட்டின் சின்ன, பழைய பகுதியை - அலுவலக
பயனிற்கு, சமையல், சலவை, ஸ்டோர் என்பதற்காய்
பிரித்தவள் - எஞ்சிய பகுதியை குடும்பத்தினருக்கென
தயார்ப்படுத்தினாள். நிறங்களைப் பற்றிய அடிப்படை



தெரியும் என்பதால் வெகு சுலபமாய் சுவருக்கான வண்
ணங்களைத் தேர்ந்தெடுத்தவள், நகுலனின் தகப்பனார்
பயன்படுத்திய மேஜை, நாற்காலி, அலமாரிகளை
பாலிஷ் செய்து மாமியாரின் அறையில் அவற்றை 'செட்'
செய்தாள். 'அம்மாக்கு சந்தன கலர் பிடிக்கும்' என்று
நகுலன் சொன்னதால், அங்கே இரு சுவர்கள் வெண்மை,
மற்ற இரண்டு சந்தன வர்ணம் என மாறின.

ஒவ்வொரு அறைக்கும் தோதாய் தானே ஓவியங்
களையும் வரைந்தால் என்ன என்று தோன்ற, கேன்வாஸ்,
வர்ணங்களின் நெடி நவ்யாவிற்குக் குமட்டியது.

இவளுக்குப் பருக மோர் எடுத்து வந்த முத்தாயி,

''இந்த நெடி எனக்கே சாஸ்தி - உனக்குத் தாங்காதேப்பா
- நாலாம் மாசத்துக்கு மேலே தலை சுத்தலெல்லாம்
மட்டுப்பட, இந்த வேலை ஆவட்டும்'' என, மோரைப்
பருகியவள் பத்தாம் நிமிடமே அதை வாந்தியெடுத்தாள்
- முகத்தைக் கழுவியபடி பாத்ரூமிலிருந்து வெளி
வந்தவளை, வேறேதோ வேலையாய் அலுவலகத்தி
லிருந்து வந்த நகுலன் வந்து அணைத்தபோது அவனை
உதறினாள் -

''எனக்கு உங்க நெடியுமே... பிடிக்கலை'' என்றபடி.

''பிள்ளையைச் சாக்கு வைத்து என்னை ஒதுக்க
நினைக்காதே, நவ்யா'' என்றவனின் முகத்தை இவள்
ஏறிட்டுப் பார்க்காததால், அதிலிருந்தது காட்டமா கெஞ்
சலா என்பது இவளுக்குத் தெரியவில்லை!

ஆனால் மொத்தத்தில் அவன் போக்கு மென்மைப்
பட்டிருந்தது. கம்ப்யூட்டர் திரையில் அவள் உருவாக்கி,

''கெஸ்ட் ரூம் இப்படியிருக்கும் நம்ப ரூமின் கலர்
இதுதான் உங்களுக்குப் பிடிச்சிருக்கா?''

அவள் காட்டியதை அவனுமே ரசித்தான்.

ஆக நாட்கள் சற்று சுலபமாய், சுவாரஸ்யமாய் போயின.

அத்தனைச் சுலபமாய் காலம் வழுக்கி விடக் கூடாதே என்பது போல வந்த ஒரு மாற்றம் அங்கே முட்டுக் கட்டையானது.

"அங்க்கிள் பாஷ்யம், வங்கியின் உயர்மட்ட அதிகாரியாய் இருந்ததால், எனக்கு ரொம்ப உதவினார், நவ்யா. அப்பா இறந்த பின் இவங்க ஆதரவு எனக்குப் பெரிய பலம்."

என்று தங்கள் வீட்டில் சில காலம் தங்க வந்தவரை நகுலன் அறிமுகப்படுத்த, சிவந்து பருத்த மேனியும், வழுக்கையுமாயிருந்த அந்த மனிதர் சிரித்தார் -

"பெரிய உதவி ஏதும் நான் செய்துடலை. திரும்பத் தரக் கூடிய ஆட்களாய் பார்த்துதானே நாங்க வலை விரிப்போம்? சும்மா லட்சங்களைக் கடனாய் தந்துடுவோமா?"

என்றவர் நல்லவராய்த் தெரிந்தாலும் அவரோடு வந்த அவர் அழகு மகள் மஞ்சரியை நவ்யாவிற்கு அத்தனைப் பிடிக்கவில்லை! நவ்யாவே வளர்த்தி என்றாலும், இவளை விட ஒரு பிடி அதிக உயரமாயிருந்த மஞ்சரி, பொன் நிறத்தில் வேறு இருந்தாள். தன் வனப்பை வெளிக் காட்டுவது ஒன்றே நோக்கம் போல உடுத்தியிருந்தவள், நகுலன் தோளில் வந்ததிலிருந்து தொத்திக் கிடந்ததும், அவனிடம் மட்டுமே கொஞ்சி இழைந்ததும் காரணங்களோ?

"ஆறு மாசங்களாய் குர்கானிலே போஸ்டிங் - அங்கே கடும் வேலை - அதான் உங்கக் கல்யாண வரவேற்புக்குக் கூட வர முடியலை."



"இப்படி திடுதிப்னா கல்யாணம் பண்ணிக்கறது நகுல்? சொன்னால் நான் வந்து தடை போட்டிருவேன்ற பயந்தானே?" மகள் கோபித்தாள்.

"ரொம்ப டென்ஷனான பிரான்ஞ்ச் அது, நகுல் - அதில் என் ரத்த அழுத்தம் கூடியதோடு, மார் வலியையும் தந்திடுச்சு. செக் - அப் னால் அதை நம்மூரிலேப் பண்ணிக்கறது தானே நல்லது? தெரிஞ்ச டாக்டர்ஸ், அதுவும் இங்கேயேத் தங்கிக்கலாம் - உனக்கேதும் தொந்தரவில்லையே?"

"இல்லை அங்க்கிள். உடம்பு தேறும் வரை நீங்க இங்கே தாராளமாய் தங்கலாம் - டாக்டர்ஸிடமும் நான் சொல்லி வைக்கிறேன்."

"செக் - அப் போல ஷாப்பிங்கிற்கும் சென்னை போல வராது, நகுல். தரமான பொருட்கள் சரியான விலையில் - அதுவும் ஸச் வெரைட்டி. அதையெல்லாம் விட முக்கியம் நான் உங்களோடு இருக்கலான்றதுதான்."

நகுலன் மையமாய் சிரித்தான்.

அதுவும் நவ்யாவிற்குப் பிடிக்கவில்லை - 'எனக்கு நிறைய வேலையுண்டு. வீட்டிலே மனைவியுமுண்டு' என்று சொல்லாமல் அதென்ன சிரித்து மழுப்புவது?

"அடடே... வீட்டில் பெயிண்ட் வாசனை - வீட்டிற்கு புது - லுக் வரப் போகுதா? நவ்யா, இன்ட்டீரியர் சம்பந்தமாய் ஏதும் ஆலோசனை வேணும்னால் என்னைக் கேட்டுக்கோ - அழகு சம்பந்தமான விஷயங்கள் எல்லாவற்றிலும் நான் எக்ஸ்பர்ட்!"

மஞ்சரியின் அலட்டல் அவர்களை எட்டிப் பார்த்து விட்டு, முகம் திருப்பியபடி போன முத்தாயிக்கும் அவ்வளவாய் பிடிக்கவில்லை என்றே தோன்றியது!

இன்னும் பூச்சு வேலை ஆரம்பிக்கப்படாத அறையாய் அவர்களுக்கு ஒதுக்கப்பட... அவர்கள் தேவைகளை கவனித்துவிட்டு, மதியச் சமையலுக்கும் சில திருத்தங்களைச் சொல்ல வந்த நல்யா, முத்தாயி நகுலனை அதட்டியதைக் கேட்க நேர்ந்தது -

"என்ன தம்பி, வீட்டில் பெரியம்மா இல்லைங்கிற சமயம் இந்தப் பொண்ணு இங்கத் தங்கறது நல்லாவிருக்கா?"

"இப்பதான் சின்னம்மா வந்தாச்சே?"

"அது உலகமறியாப் பொண்ணு - தவிர மாசமாயிருக்குது- கண்ணேறுப் படக் கூடாத சமயம்."

"மஞ்சரி என் கண்ணு போடப் போறா?"

நகுலனும் விடாமல் வார்த்தையாடினான்.

"உங்களுக்குமே உலகந் தெரியலை." முத்தாயியின் குரல் தாழ்ந்தாலும் உன்னிப்பான நல்யாவின் காதுகளுக்குத் தப்பவில்லை -

"மதுரையில உங்களுக்கு முதல்ல ஒரு நிச்சயம் நடந்துதே? அதன் பிறகு இந்த மஞ்சரி இங்கே கொஞ்சகாட்டமாய் வந்தது - அதன் எரிச்சலான முழி சரியில்லைன்னு நான் நினைச்சது போலவே - அந்த முதல் பொண்ணு செத்துப் போச்சு... பொல்லாத கண்ணு தம்பி."

"ஆயா, இதை நல்யாட்ட சொல்லிடாதீங்க - அநாவசியமாய் பயந்துக்குவா" - சற்று கண்டிப்புடனே நகுலன் சொல்ல, நல்யாவின் மனது பயத்தால் நடுநடுக்க ஆரம்பித்தது!



18

தன் தாயிடம் பேசி விட்டால் தேவலை போலிருந்தது நல்யாவிற்கு - வீட்டை மாற்றி, அழகு படுத்தும் ஆர்வத்தில் அடங்கியிருந்த அவள் மனதுள் மறுபடி சஞ்சலம், சலனங்கள்.

போனில் பேச ஆரம்பித்ததுமே நளினி கேட்டு விட்டாள் -

"என்ன நல்லி - என்ன பிரச்சனை? நான் அங்கே வரட்டுமா?" என்று?

அப்படி அம்மா கேட்டது தூண்ட... தன் கிலேசத்தைக் கொட்டி விட்டாள் மகள் -

"நகுல் சொன்னது போல, இது அநாவசிய பயம், நல்லிம்மா - இதற்குப் பெயரே மூட - நம்பிக்கைதானே? பிறகும் நாம் ஏன் இந்த 'கண்ணு' படும் பின்னணியை நம்பணும்? உன் நிலையில் சற்று பதட்டமிருக்கலாம் - நிலைக்கல."

"ம்ம் - பூமணியின் நிச்சயத்தின் போது இந்த மஞ்சரி இல்லை. பூமணியின் விபத்து நேர்ந்த சமயம் மஞ்சரி இங்கே... அதாவது இந்த வீட்டில் இருந்திருக்கா - மஞ்சரியோடு பேசின போது இன்னொரு விபரமும் தெரிஞ்சதும்மா - ரெண்டு மூணு வருஷம் முன்னே அவ இங்கிருந்தபோதுதான் மாரடைப்பில் நகுலனின் அப்பாவும் இறந்தாங்களாம்."

"ஆக பழி உன் மேலில்லை நல்லி - அத்தனையையும் அந்த மஞ்சரி மேல் சுமத்திட்டு நீ 'அக்கடா'ன்னு இரு."

அம்மாவின் கிண்டல் புரிந்து மகளும் புன்னகைத்தாள்.

"முட்டாள் தனம் தான் - ஆனா இப்போ எனக்கென்னவோ சின்ன விஷயங்கள் கூட பெரிய கலக்கம் தருதும்மா. ஒரு மாற்றத்துக்காய் முத்தா நான் குழந்தைகளுக்கான கடைக்குப் போய் சுற்றினோம். எத்தனை விதமான தொட்டில், விளையாட்டுப் பொருட்கள்

...நிறத்தில் பலவர்ண பாசிமணிகள் கோர்க்கப்பட்ட ஒரு தொட்டில் என் கண்ணைப் பறிக்க, நகுலும் அதை உடனே காரில் ஏற்றிடுங்கன்னார். ரொம்ப குஷியாய் இருந்த எனக்கு அடுத்த நிமிஷமே ஏமாற்றம் -

'நீங்க பார்த்த பட்டியலில் அந்த ஒரு ரகம்தான் மேடம் இல்லை - மற்றதெல்லாம் இருக்குதே' என்றதும். ஏனோ ரொம்ப அப்ஸெட் ஆயிட்டேன்.''

''தொட்டில் எல்லாம் தாய் வீட்டு சீர், நவி. நீயேன் அலையறே - மனசை அலட்டிக்கறே?''

''சும்மாயிருந்தாலும் வேண்டாத யோசனைகள்மா. ஓவியத்திற்காய் எல்லாம் ரெடி - ஆனா பெயிண்டின் நெடி குமட்டுது.''

''மியூஸிக் கேள் - நல்ல புஸ்தகமாய் படி. எவ்வளவு நாட்கள்தான் அவங்களும் விருந்தாடுவாங்க. வந்த வேலை முடிஞ்சதும் கிளம்பிடுவாங்க.''

''ஆனா அதற்குள் ஏதும் அசம்பாவிதம் நேர்ந்திடுமோன்ற அச்சம்மா. அவர் அப்பா, பிறகு பூமணி இறந்தது போல, என் குழந்தைக்கு...''

''எந்த ஆபத்தும் வராது. கடவுளை வேண்டிட்டு ரிலாக்ஸ். பூமணியின் சாவில் உன்னைப் பழி சொல்றது சரியில்லைங்கற போல, இந்த மஞ்சரியை விரல் காட்டுவதும் நியாயமில்லை. நீ நகுலனுக்கு, அவர் உனக்கு என்று கடவுள் முடிச்சிட்டிருக்க, அந்த விபத்து நிகழ்ந்தது. தவிர அந்தப் பூமணி ரொம்பத் தெளிவான பெண்ணில்லை - மலைப்பாதை இறக்கத்தில், வானத்தைப் பார்த்தபடி, மணியில்லாத சைக்கிளில் வர்றதென்றால்?... சரி அவ ஆயுள் அவ்வளவுதான். நீதான் நகுலுக்கு ஏற்ற கெட்டிக்காரியும் கூட. சரிதானே?''

சமீபமாய் தன்னை அழகி என்று கொண்டாடிய தாய் தன் அறிவையும் பாராட்ட, நவ்யா 'அதெப்படி' என்று கேட்டே விட்டாள்.

''பின்னே? நகுலுக்கு வயசு முப்பதாச்சு. பல பெண்களைப் போல 'குழந்தைப் பேறை' தள்ளிப் போடாமல், உடனே அவரைத் தகப்பனாக்கிட்டியே - அது போதாது - உன் சாமர்த்தியத்திற்கு?''

மாமியாருமே போனில் சதா பாராட்டும், கொஞ்சலுமாய் நவ்யாவைச் சீராட்டினார்.

அம்மா பூமணியைப் பற்றிக் குறிப்பிட்டதில் அந்த ஞாபகம் வேறு... சைக்கிளோட்டும் அனுபவமோ, போதிய பயிற்சியோ இன்றி அந்த இளம் பெண் அன்று ஓட்டியது சரியில்லைதான் என்றாலும், அவள் தன் வருங்கால கணவனை நினைத்தபடியே கூட கவனத்தைச் சிதற விட்டிருக்கலாம்... இப்போது அந்த நகுலன் தன் கணவன் என்பதும் அவர்கள் குழந்தை தன்னுள் வளர்வதும்... நவ்யா சிலிர்த்தாள்.

முழு நீளக் கண்ணாடியின் முன்னே நின்று தன் உருவத்தை ஆராய்ந்தாள்.

இடை இன்னும் பெருக்கவில்லை.

ஆனாலும் சோர்வும் வெளுப்புமான பிம்பமே தெரிந்தது. மஞ்சரியின் அப்பா தன் உடற் பரிசோதனைகளை முடித்து விட்டு, தெற்கே இருந்த தன் உறவுக் கல்யாணத்திற்காய் கிளம்பி விட்டார்.

'வேலையில் இருக்கையில் இப்படி உறவுகளோடு சேர்ந்திருக்க முடியலை. இனி இதை எல்லாம் விடற

மஞ்சரி அசைவதாயில்லை. 'ஷாப்பிங்' தன் தோழிகளைப் பார்ப்பது, ஜிம், சினிமா, டிஸ்கோ என்று சுற்றினாலும், அவளை இங்கேயே தங்க, நவ்யாவிற்கு வயிற்றில் ஒரு இறுக்கம்.

தன் வயிற்றின் கரு, நகுலனுக்கு சாதனை, தனக்கு வேதனை என்று மறுகியவளுக்கு இப்போது தன் குழந்தைக்கு ஏதும் ஆகி விடக் கூடாதே என்ற ஒரு கவலை மட்டுமே...



## 19

ஒரு தேக்கரண்டி பாலாடையில் சில சொட்டு தேனைக் கலந்த நவ்யா முகம், கழுத்தென அதைத் தடவி பின் கழுவியதும், சருமம் மினுமினுப்பது போலத் தான் தெரிந்தது!

உலக அழகிப் போட்டியின் கடைசி சுற்றில் மேடையில் நிற்கும் ஐந்து இளம் பெண்களை நீதிபதிகள் உன்னிப்பாய் கவனிப்பது போல நவ்யா தன்னையே ஆராய்ந்தாள்!

இத்தனை நாட்களாய் உணவு வெறுத்தது போலவே பவுடர் பூச்சின் நறுமணம் கூட பிடிக்கவில்லை.

''இதுதாம்மா மசக்கை - பொண்ணுங்க ஓடி சாடாம பதனமாயிருக்க ஆண்டவனாய் போட்ட தடையிதுன்னு வையேன்'' - இது முத்தாயியின் கருத்து!

நான்காம் மாதம் முடியக் காத்திருந்தது போல இவளது பசி விஸ்வ ரூபமெடுத்தது! ஆக இடுப்பு வளைவு பூசினாற் போலானது. ஆனால் அதிலும் கூட ஒரு நூதனமான கவர்ச்சி இருந்ததுதான்! அம்மா செய்து தந்த பலகாரங்களையும் ஆசையாகவே சாப்பிட்டவளுக்குத்



தாய் வந்திருந்த சமயம் மஞ்சரி இங்கில்லாததுதான் குறை!

'பெங்களூரில் ஒரு பேஷன் ஷோவில் நான் கலந்துக்கறேன், நவி' என்று அவள் ஓடியது இயல்பா அல்லது வேண்டுமென்றா என்று அதற்கும் நவ்யாவினுள் ஒரு பட்டிமன்றம் நடந்தது!

அம்மா ஊருக்குக் கிளம்பிய மறுநாளே வந்து சேர்ந்த மஞ்சரி, 'ராம்ப் - வாக்கில் எனக்குத்தான் அதிக அப்ளாஸ், நவி - ஐ என்ஜாய்ட் இட்' என்றதைக் கேட்டவள் ரசிக்கவில்லை!

எண்ணெய்க் குளியலில் பட்டாய் பறந்த கூந்தலுடனிருந்த நவ்யா கவனமாகவும் உடுத்திக் கொண்டாள்.

இளம் ஊதா நிற ஜார்ஜெட்டிற்குத் தோதான கிரிஸ்டல் மாலை, வளையல்கள்.

மெல்லிய சேலை வயிற்று மேட்டைக் காட்டினாலும், பருத்தி அல்லது பட்டு கட்ட நவ்யாவிற்கு சம்மதமில்லை. மஞ்சரி பகட்டாய் வீட்டினுள் வளைய வர, தான் மாமி போலிருக்க முடியாதே!

இவளைப் பார்த்த கையோடு முத்தாயி ஓடிவந்து 'சுற்றிப்' போட்டதில் கூட ஒரு தனி திருப்தி.

ஆனாலும் மஞ்சரி வெகு சுவாதீனமாய் இங்கேயே 'செட்டில்' ஆனாதான் உறுத்தியது - அதைப் பற்றி எப்படி நகுலனிடம் பேச்செடுப்பது என்பதும் தெரியவில்லை.

உணவு மேஜையில் அமர்ந்த மனைவியை நகுலனின் கண்கள் ரசனையுடன் பார்த்தன - இங்குள்ள அலுவலகத்திலேயே சிலரைச் சந்தித்தவன், வழக்கமான நேரத்தில் ஆபீஸ் செல்லவில்லை.

தலைக்கு ஊற்றிய அசதி பசியைக் கூட்ட, மேஜையில் பரப்பப்பட்ட அத்தனையிலும் வகைக் கொன்றாய் எடுத்துக் கொண்டு உண்ண ஆரம்பித்த நவ்யாவிற்கு, மஞ்சரியின் தட்டைப் பார்த்ததும் 'பகீர்'ரென்றானது!

அதில் நாலே நாலு வெள்ளரி வட்டங்கள், கால் ஆப்பிள், ஆறு திராட்சைகள் - அவ்வளவேதான்!

அதை மஞ்சரியும் கவனித்து விட்டு சீண்டினாள் -

''ஹைய்யோ, நவி - ஒரு வேளைக்கு இவ்வளவு சாப்பிட்டா உனக்குப் பாப்பா பிறந்த பிறகும் நீ பீப்பாய்தான்'' என்று!

இதுவரை மசக்கையினால் அரை வயிற்றுக்கூட உண்ண முடியாதவளுக்கு இப்போது பசி அகோரமாயிருக்க, அடிக்கடி,

'எங்களுக்கு என்ன தருகிறாய்?' என்று நாக்கும் வயிறும் மாறி மாறி கேட்டனவே!

''நவ்யா பீப்பாயாய் இருந்தாலும் என் கண்ணுக்கு அவள் தான் ரதி'' என்றபடி நகுலன் விடை பெற்றுக் கொண்டது ஆறுதலாய் இருந்தாலும் நவ்யாவிற்குள் மறுபடி குழப்பங்கள்.

புத்தியை அதிலிருந்து மாற்ற, கேன்வாஸைப் பரப்பியவள், வரைவதற்காய் ஆயத்தப்பட்ட போதுதான்,

''அம்மா, உங்களைப் பார்க்க ஒருத்தங்க வந்திருக்காங்க'' என்றாள் புது வேலைக்காரப் பெண்.

''யாராம்?''

''தெரியலியேம்மா - வயசானவங்க...''

வந்திருந்தவர் டாக்டர். புஷ்பவல்லி!

''வாங்க, டாக்டர் - உட்காருங்க - என்ன குடிக்கறீங்க?''



''மோர் - பத்து நிமிஷங்களுக்குப் பிறகு. குட் - இப்ப உன் முகம் தெளிஞ்சிருக்குது - வீட்டிலும் நிறைய மாறுதல்கள் - என் ஆலோசனைகள் உதவியிருக்குது போலவே?''

''ஆமா டாக்டர் - தாங்க்ஸ்.. அடுத்த வாரம் செக் - அப்பிற்கு வரணும் நான்.''

''வாம்மா - உன் மாமியாரும் அவ்வப்போது ஒரே உஜாராய் என்னிடம் பேசுவாங்க. நான் அரசாங்க ஹாஸ்பிடலில் வேலை பார்த்த சமயம் தான் அவங்களுக்கு நகுலும், வகுவும் பிறந்தாங்க. பிரசவம் பார்த்தது நான். ஆக உன் பிரசவமும் என்னிடம் என்பதில் அவங்களுக்கு சந்தோஷம்.''

இரு தலைமுறைகளை இந்த உலகிற்கு கொண்டு வர உதவும் அந்த மருத்துவரை சிறு பிரமிப்புடன் பார்த்தாள் இளையவள்.

''மனதின் நினைப்புகளைத் துல்லியமாய் காட்டிவிடும் முகம், உனக்கு நவ்யா - ஆக அதில் சற்று ஜாக்ரதையாகவே இருக்கணும் நீ! பக்கத்திலுள்ள மளிகைக் கடைக்கு வந்தேன் - அப்படியே இங்கேயும் வரத் தோணிச்சு'' - புன்னகைத்தார்.

''தாங்க்ஸ் டாக்டர்.''

''இனி சாயங்காலம் அல்லது காலை சின்ன வாக்ஸ் போகணும்மா நீ. இந்த வீட்டு வேலை உன் தனிமைக்கு மருந்து...''

''வந்து நான் தனியே இருக்கேன்னு சொல்ல முடியாதுங்க டாக்டர்'' என்றவள் மஞ்சரியைக் குறிப்பிட்டவள், தன்னையும் மீறி மஞ்சரியின் 'டயட்' பற்றியும் குறிப்பிட, மருத்துவர் புன்னகைத்தார் -

ஆக விதவிதமாய் 'மெனு' போடும் வேலை உனக்கில்லை. அரைக் கிலோ கூடினாலும் மாடலிங் துறையில் இருப்பவங்க அலறிடுவாங்களே...''

''ஆமா டாக்டர். பார்பி பொம்மை போலிருப்பதுதான் மஞ்சரியின் லட்சியமாம்.''

''ஆஹா? பார்பி டாலின் அளவுகள் பற்றி சமீபத்தில் எக்ஸ்பிரஸில் ஒரு சுவாரஸ்யமான கட்டுரை. சாத்தியமில்லாத அளவுகளில் இப்போதுள்ள இளம் பெண்கள் தாங்களிருக்கத் துடிப்பதற்கு இந்த பொம்மையும் ஒரு காரணமென்று! அந்த அளவில் ஒரு பெண்ணை கம்ப்யூட்டரில் மாடலாய் செய்து பார்த்தால் - அந்த ஒடுங்கிய உடலின் மேற்பகுதியில், பாதியளவு ஈரலுக்கு, கால்வாசி குடலுக்கும் தான் இடமிருந்ததாம்! அப்படி நிஜப் பெண் இருந்தால், வயிற்றோட்டம், சோகை, சோர்வென்று அவள் நித்ய நோயாளிதான்.''

நவ்யாவுடன் சேர்ந்து டாக்டரும் வாய்விட்டு சிரித்தபடி கிளம்பினார் -

''எனக்கெதற்கு தாங்க்ஸ். இப்படி இள வயதினரோடு பேசி சிரிப்பது - தான் எனக்கான டானிக். நீயும் இப்படி உற்சாகமாகவே இரு - என்ன?''

சொன்னவரிடம் இவள் பலக்கத் தலையாட்டி விட்டாலும், உற்சாகத்தை அத்தனைச் சுலபமாய் கட்டி இழுத்துவிட முடியவில்லை!

வீட்டு வேலை, ஓவியம் என்றவள் தனக்காய் உருவாக்கிய உற்சாகத்தை மஞ்சரியின் சில வார்த்தைகள் அல்லது செய்கை துடைத்து எடுத்தது.

அதிலும் நகுலனைப் பற்றி மஞ்சரி சொன்னவை இவளை மறுபடி நடுங்கவே வைத்தன.

'நகுலை யாரும் ஏமாற்றிட முடியாது. அவருடைய ஒவ்வொரு பேச்சு, செய்கைக்கும் காரணமிருக்கும்' என்றவள் சொன்னது -

ஆக அவன் தன்னைத் திருமணம் செய்து கொண்டதற்கான காரணம்? என்ற பழைய கேள்வியை உசுப்பி விட - அது மாம்பழத்து வண்டாய் நவ்யாவின் இதயத்தை சதா குறுகுறுவெனக் குடைந்தது!

நகுலன் கண்களிற்கும் மனைவியின் பதட்டம் தப்பவில்லை.

''மறுபடி ரொம்ப மிரண்டு தெரியறே நவி? ஏன்?''

அவளால் சொல்லாமலிருக்க முடியவில்லை.

''என்னால் இன்னுமே நம்ப முடியலை. நீங்க என்னைப் பழி வாங்கத்தானே கல்யாணம் செய்தீங்க? ஆக எந்நேரம் என்ன நடக்குமோன்ற பயம்.'' இவளது தோள்களைப் பற்றித் திருப்பினான்.

''என்னை நம்பேன் நவி - இன்னுமா பிரியம் வரலை?''

'யாருக்கு யார் மீது?' என்பது போல அவள் விழிக்க, அவன் முகம் இறுகியது.

அவனது கோபம் உணர்ந்தவள் அவசரமாய் பேசினாள் -

''நா... நான் வேண்டும்னே பூமணியின் குறுக்கே வரலை... அவங்க யார்னு கூட எனக்குத் தெரியாதே.''

''சரி. ஆனால் ஏன் அப்படி சிரிச்சே நவ்யா? மதுரையில பூமணியின் பெற்றோரிடம் மன்னிப்பு கேட்க வந்த நீ - வெளியேறும் போது ஏன் சிரிச்சே?''

''உங்களை அங்கே... அப்போ நான் எதிர்பார்க்கலை...'' என்றாள் மெள்ள.

''அந்த நிமிஷந்தான் நானும் உன்னை அடைய முடிவு செய்தேன்'' என்றான் அவனும் மிக மெல்ல!

## 20

மேஜையில் ஆப்பிள், பேரி, தர்பூஷணி எல்லாம் அழகாய் அரிந்து வைக்கப்பட்டிருந்தன.

''ம்ம் - எனக்குமே இன்னைக்கு வெறுமே பழங்கள் போதும்'' என்று அமர்ந்தான் நகுலன்.

அவசரமாய் அவன் தட்டில் பழத் துண்டுகளைப் பரிமாறிய மஞ்சரி,

''சின்ன பழ ஃபோர்க்கை எடு, நவி'' என்று உத்தர விட்டாள்.

நவ்யா அசையாமல் நின்றதைப் பார்த்தவள்,

''ஓ... உனக்கது எங்கே இருக்குன்னு தெரியாதே'' - என்றபடி பீங்கான் தட்டுகளும் குவளைகளும் அடுக்கப்பட்டிருந்த அலமாரியின் முன் குனிந்து, ஒரு இழுப்பறையை இழுத்து அதிலிருந்த சிறு முள் கரண்டி களை எடுத்தாள்.

முன் தினமும், ''தயிர் சாதத்திற்கு களாக்காய் ஊறுகாய் செம தோது. ஆன்ட்டி குற்றாலத்திலிருந்து தருவித்தது'' என்று ஒரு பாட்டிலை எடுத்து மஞ்சரிதான் பரிமாறினாள்.

மேலும் ஒரு கரண்டி தயிர் சாதம் போட்டுக் கொள்ள அந்த ஊறுகாய் தூண்டினாலும், மஞ்சரியின் 'பாப்பா - பீப்பா' கேலிக்கு அஞ்சி கைகழுவிக் கொண்டாள் நவ்யா -

இவர்களோடு சாப்பிட அமரும் மஞ்சரி பேசுவது தான் அதிகம் - ''பாவம் இன்னும் நவிக்கு இந்த வீடு கூட பழ கலை. ஃபோர்க்கை எடுன்னா திகைச்சு நிற்கறா. இந் நிலையில் வயிற்றில் பிள்ளை...''

''அவளுக்கு எதற்கு முன்னுரிமைத் தாணும்ங்கறது தெரிஞ்சிருக்குது மஞ்சரி. நான் இப்பவே அரைக் கிழவன்.



ஆக முதலில் என்னை அப்பா ஆக்கிட முடிவு செய் திட்டா - அவ்வளவுதான்.''

''நீங்க அறுவதில்கூட குமரனாய்தான் இருப்பீங்க, நகுல்.''

மஞ்சரி கொஞ்சினாள்!

''உரியவங்க கண்களுக்குக் குமரனாய் தெரிந்தால் - சரிதான்.''

கணவன் தனக்காய் பேசியதில் நவ்யாவிற்கு நிம்மதி என்றாலும் மஞ்சரியும் அவனுமாய், தன்னைத் தங்களின் பேச்சில் உருட்டுவது கசந்தது.

நகுலன் தன் லேப் - டாப்பிற்காய் எழுந்து படியேற, மஞ்சரியின் கண்கள் அவனைப் பின் தொடர்ந்தன -

''பாவம் - நகுலனுக்கு அது பெரிய அதிர்ச்சிதான். ஆனால் அவர்தான் எதையும் சமாளிச்சுடுவாரே? அப் படித்தான் பூமணியின் மரணத்தையும் ஜீரணிச்சுட்டார்... அவ ரொம்ப அழகானப் பெண் வேற.''

முயன்று வாய் திறந்தாள் நவ்யா -

''அதெப்படி உங்களுக்குத் தெரியும்? நீங்க பூமணியைப் பார்த்திருக்க வாய்ப்பில்லையே?''

''அது... நிச்சயதார்த்த ஸி.டி. பார்த்தேனே - கண் ணெல்லாம் காதலாய் நகுல் அந்தப் பெண்ணைப் பார்த்தது அதில் பதிவாகியிருந்ததே.''

தொடர்ந்து கேட்க விரும்பாமல்,

''அவர் கூப்பிடறது போலிருக்குது'' என்றபடி விலகி னாள் நவ்யா. படியேறிய அவளது கால்கள் துவண்டன...

ஆக நகுலன் பூமணியை நேசித்திருக்கிறான் - அந்த நேசம்தான் பூமணியின் விபத்திற்குக் காரணமானத் தன்னைக் கல்யாணம் செய்வதற்கான தூண்டுதல்.

முயற்சி? இதில் கரும்பை சற்று முரட்டுத்தனமாய் சுவைத்தால்தான் அதன் இனிப்பு தெரிய வரும் என்ற விளக்கம் வேறு...!

ஆனால் இதுவரை பதமாகவே நடந்து கொண்டிருக்கிறான் -

சில நேரத்துக் கடுமையைத் தர, அரக்கத்தனமாய் தன்னை கொடுமைப் படுத்தினானில்லை.

ஒருவேளை குழந்தைப் பிறந்ததும் தன்னை துரத்தி விடுவானோ?

குழந்தை அவனதும்தானே?

பாசமின்றி அதை விலக்க முடியுமா?

ஆனால் தனியே, நகுலனின் பிள்ளையை வளர்ப்பதுதான் தனக்கான தண்டனை என்பது அவன் முடிவோ?

அதற்காகவா அத்தனை மோகமும்... மூர்க்கமும்?

தன் அலுவலகப் பெட்டியுடன் இறங்கியவனையேப் பார்த்து நின்றாள் -

''என்ன - அப்படி பார்க்கறே?''

''கொஞ்சம் சோர்ந்து தெரியறீங்க.''

''ஆக - நீ என்னைக் கவனிக்கறே - ம்ம்?''

''ரெண்டே பேர்தானே - வேறு யாரைக் கவனிக்க?''

''பேச்சு கொஞ்சம் அலுப்பாய் தோணுதே - சாயங்காலம் வெளியேப் போகலாமா?''

''ம்ம் - குழந்தைகளுக்கானதைப் பார்க்க... எனக்குப் பிடிச்சிருக்குது.''

''ஷ்யூர். ஆனால் போன முறை நீ ஆசைப்பட்ட தொட்டில் கிடைக்காமல் மூட் - அவுட் ஆனாய்...''

''ஏதும் வாங்க வேண்டாம். ஜஸ்ட் விண்டோ - ஷாப்பிங்.''

''ஆக காசிற்கு வேட்டில்லை.''

''அம்மா பிள்ளைப் பிறந்ததும் வாங்கிக்கலாம்னாங்க...''

''அம்மா ஒரு சுற்று...'' - 'உங்களோடு' என்று சொல்ல வந்த வார்த்தையை வெட்டி விழுங்கினாள்!

இவளது முழங்கை அல்லது தோளைப் பற்றியபடி அவன் மெல்ல உடன் நடந்து வருவது நவ்யாவிற்குப் பிடிக்கும். கட்டிலில் அவனது அணைப்பை - காமத்தில் அல்லது கோபத்தில் விளைந்தது - என்றெண்ணி சுருளும் அவளுக்கு இந்த இதமான தொடுதல் இஷ்டம்.

கரும்பைக் கடிப்பது போன்ற முரட்டுத் தனமில்லாத மென்மையான ஸ்பரிசம்.

அன்று மாலை அப்படி விதவிதமான கடைகளில் ஏறி இறங்கியவளுக்கு, மனதில் பல கற்பனைகள் - தன் குழந்தையின் அறையை எப்படி அமைக்க வேண்டும் என்பது பற்றி.

ஆண் என்றால் நீலம், பெண் குழந்தைக்கு. இளரோஜா என்பதால் அவற்றை விட்டு விட்டு, பொதுவாய் பொன் நிறத்திலேயே அறையின் சுவர்கள் இருக்க வேண்டும். பாலாடை நிறத்தில் தொட்டில், அலமாரிகள், வர்ணங்கள் அத்தனையிலும் விளையாட்டு பொருட்கள் -

ஏழெட்டு வருஷங்கள் போன பிறகு வேண்டுமானால் பிள்ளைகளின் ரசனைக்கேற்ப அந்த அறையை மாற்றி அமைக்கலாம் - அதற்குள் இரண்டு பிள்ளைகள் தங்களுக்குப் பிறந்திருக்குமே...

நகுலன் தன்னை விரட்டியடித்து விடுவதாய் காலையில் எண்ணியதற்கு முரணாய்...

நெற்றி சுருங்க யோசித்தவளை, தோளோடு இறுக்கியவன் இவளது உச்சியில் முத்தமிட்டான்.

எதிரே வந்த சில இவர்களைப் பார்த்து இனிப்பாய் புன்னகைக்க,

நவ்யா இளகித்தான் போனாள்...

வீட்டிற்குத் திரும்பியதும் ஒரு அகன்ற பேஸினில் வெதுவெதுப்பான உப்பு நீரைத் தந்து -

“பாதம் வலிக்கும்மா - அதுல பத்து நிமிஷம் முங்க விடு” என்று முத்தாயி சொன்னது போல செய்தவளின் மனதுக்குள்ளும் சுக வெதுவெதுப்பு.

வெறுப்பவன் அத்தனைப் பதமாய் தன்னை முத்தமிடுவானேன்?

அதுவும் பிறர் பார்ப்பதையும் பொருட்படுத்தாமல்?

“அடிக்கடி உன்னை வெளியே கூட்டிட்டுப் போகணும் போல நவி. உன் முகம் மலர்ந்திருக்குது.”

“ம்ம்... ஆனா ஒரு சந்தேகம்.”

“போச்சு... ஆனால் கேட்டிடு - ”

“பூமணியின் விபத்தில் எனக்கு ஒரு பங்கிருந்ததை நீங்க ஏன் யாருக்குமே சொல்லலை? உங்கம்மா, தங்கைக்கும் கூட தெரியாது போலவே...”

“தேவையில்லையே - அவசியமற்ற முடிச்சுகளைப் போட்டு வாழ்வை சிக்கலாக்குவானேன்? உனக்குப் சங்கடம்...”

“இனிமேல் தெரிய வந்தால்?”

“அநாவசிய கற்பனை - வாழ்வு பெரும்பாலும் சிக்கலற்றது - அதை நாம் அப்படியே ஏற்றுக்கொள்வது சுகமானதும் கூட...”

அன்று கணவனது அணைப்பிற்குள் வழக்கமான மிடுக்கை, விறைப்பைக் காட்டாமல் சுகமாகவே ஒண்டினாள் - வரப்போகும் சில தடங்கல்கள் தங்கள் வாழ்வைக் குலுக்கிப் புரட்டப் போவதை அறியாமல்...



## 21

டாக்டர். புஷ்பவல்லியின் முகத்தின் வழக்கமான கனிவு மாறியிருந்தது.

“உன்னைப் பொறுப்பானவன் என்று நம்பித்தானே பெரியவங்க நவ்யாவை உன் பொறுப்பில் விட்டிருந்தாங்க நகுல்? நீ கவனமாய் இருந்திருக்க வேண்டாமா?”

“ஸாரி - டாக்டர்... இன்னும் டெலிவரிக்கு மூணு வாரங்களேனும் இருக்கும்னு நினைச்சதால்...”

“நவ்யா வலிக்குதுன்னு சொன்ன பிறகும் அலட்சியப் படுத்தியிருக்கே நகுல். இது உன் பிஸினஸ் டைமிங் போல பக்காவாய் இருக்காது.”

“ம்ம் - நவி எப்படியிருக்கா?”

“என்ன நடந்தது? வந்த போது அவ நிலைமை மோசம் தான் - ஜன்னியின் உளறலும் உதறலுமாய்.”

தலை குனிந்தான் -

“சண்டையா?”

“அப்படிச் சொல்ல முடியாது. அதிகமாய் கற்பனை செய்கிறாய்னு திட்டிய அன்றிரவு இந்த வலி எனவும் - இதுவுமே கற்பனைன்னு நினைச்சுட்டேன், டாக்டர்.”

“கர்ப்ப காலத்தில் ஒரு பெண்ணின் உடலில் பல மாற்றங்கள் - ஹார்மோன்களின் மாற்றம். சற்று தொட்டாச் சிணுங்கியாயும் இருப்பாங்க என்பதால்தான் தாய் வீட்டிற்கு அவங்களை அனுப்பறது. ஆக அன்பும், அனு

சரணையும் அந்நிலையில் அவசியம் எங்க ஹாஸ்பிடல் ஜோக் ஒண்ணு சொல்றேன். ஒரு மருத்துவ மனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் காலை தோறும் ஒரு நோயாளி இறக்க, டாக்டர்ஸுக்குக் குழப்பம் - மருத்துவ ரீதியான காரணமில்லை என்பதால் ஏதும் அமானுஷ்யமா என்று கூட ஒரு யோசனை! ஒரு நாள் அந்த அறையில் ரெண்டு மருத்துவர்கள் ஒளிந்து நின்று பார்க்க, காரணம் விளங்கியது!

காலை எட்டிற்கு கதவைத் திறந்து உள்ளே நுழைந்த பணிப்பெண், உயிர்காக்கும் இயந்திரத்தின் பிளக்கைப் பிடுங்கி அதில் தன் வேக்வம் கிளீனரின் பிளக்கைச் செருகியதும்!

பலர் கல்யாணமானது காதலின் பிளக்கைப் பிடுங்கிடறாங்க! அப்படி காதல் சாகடிக்கப்பட, வாழ்க்கை கரிஞ்சு போயிடும் - காதலை உயிர்ப்போடு வைக்க, வாழ்க்கை வசந்தந்தான்.''

இம்முறை சற்று கெஞ்சலாகவே கேட்டான்.

''நவி எப்படியிருக்கா?''

''பல்ஸ், பி.பி. ஸ்டெபிலைஸ் ஆயாச்சு. வலி விட்டு விட்டுதான் வருது. ஆக அதற்கு டிரிப் ஏற்றணும்.''

''என் குழந்தை...''

டாக்டரின் முகம் மறுபடி கனிந்தது.

''அட்டாவிஸம் கேள்விப்பட்டிருக்கியா நகுல்? தன் சந்ததி தொடரணும், தன் பிள்ளைகளைப் பார்க்கணும் எனும் ஆணின் ஆசைக்குத்தான் அந்தப் பெயர்! உன் குழந்தையின் துடிப்பும் நல்லாயிருப்பதால்தான் நான் உட்கார்ந்து உன்னைத் திட்டி, ஜோக் சொல்லிட்டிருக்கேன். தே ஆர் ஃபைன்.''



அவன் கண்கள் கலங்கின.

''ஐ லவ் ஹர், டாக்டர்.''

''நேசத்தை வெளிக்காட்டினால் பிரச்சினையே இல்லை. கணவனது பிரியம் புரியாமல்தான் பாவம் அலமலந்து போறா. இதில் பெண்ணின் மனதை ஆழங்காண முடியாதுன்னு வேற வசனம் பேசுவீங்க.''

பிளாஸ்கிலிருந்த காபியை நகுலனுக்கும் ஊற்றி நீட்டினார் டாக்டர். ''இன்னைக்கு உங்களுக்கு உங்க வீட்டுக்காரர் மேல் ஏதும் கோபமா, டாக்டர்?''

''ம்ம் - தெம்பாயிட்டே? குட். நான் என் வேலையைப் பார்க்கறேன்.'' என்று புன்னகையுடன் எழுந்து போனார்.

காபி கோப்பையுடன் எழுந்தவன், தாழ்வாரத்தில் நடந்தான்.

ஒரு வாரமாய் நடந்தவற்றை மனதுள் மறுபடி அசை போட்டபடி.

விலகியே நின்ற நவ்யா, முதல் முறையாய் தன்னை நெருங்கி வந்த மகிழ்வில், மறுநாள் வெகு உற்சாகமாகவே அலுவலகத்திற்குப் போனவனுக்கு ஒரு அதிர்ச்சி அங்கிருந்தது.

அவன் அப்பாவின் காலத்திலிருந்தே அவர்களுடன் ஒட்டுனராய் பணியாற்றிய சுந்தரம் செய்த ஏமாற்றுதான் அது.

முன்பே லேசாய் காதை உரசிய அந்தப் புகார்களை அவன் பெரிது படுத்தவில்லை. ஆனாலும்,

''சுந்தரம் ஸாரின் ரூட்டினைச் செக் பண்ணிடுங்க - ஏதும் ஆதாரம் கிடைச்சால் என் கவனத்திற்குக் கொண்டு வாங்க'' என்றிருந்தான். அவர் குற்றமற்றவராய்தான் இருப்பார் என்ற நிச்சயத்தில்.

ஆனால் வந்த தகவல்கள் இவனைத் தாக்கின.

கடந்த பத்து வருஷங்களாய் கம்பெனியில் வேலை பார்க்கும் சுந்தரம் ஏழு வருஷங்களாய் இவர்களை ஏய்த்தும் இருக்கிறார்!

கம்பெனிகளின் ஊழியர்களுக்காய் ஓடும் தங்கள் பஸ்களின் நேரம் அறிந்தவர் என்பதால், இடையே நேரம் ஒதுக்கி மற்றவர்களுக்காகவும் வாகனங்களைப் பயன்படுத்தியவர் - அதில் வந்த பணத்தைப் போட்டது தன் பாக்கெட்டில்! ஸ்பேர் பஸ்களும் வாடகைக்கு விடப்பட்டு, அதில் வந்த பணமும் ஆபீஸ் கணக்கில் இல்லை!

கூட்டாய் திருடி பின் தான் திருந்தியதாய் சொல்லிக் கொண்ட மற்றொரு டிரைவர் மூலம் செய்தி முதலில் முதலாளியை எட்டியது.

அன்று மாலையே நகுலனின் நட்பு வட்டத்தில் 'ஏய்ப்பதின் விதங்கள்' பற்றி பேச்சு எழுந்தது.

''தினுசு தினுசான திருட்டுப்பா. கண்டக்டர் ஒருத்தன் டிக்கெட்டின் 'பிளாக்'கை ஸ்கேன் செய்து, ஸி.டி. காப்பி எடுத்து - கள்ள டிக்கெட்ஸைத் தயார் பண்ணிட்டான். காலை அந்த பஸ் ரூட்டில் செக்கர் போகாத வசதியில் பெருந் தொகைகளை அடிச்சிருக்கான்.

''நாம லோனில் பஸ்ஸை வாங்கி, டீஸல் விலையேற்றத்தைச் சமாளித்து ஓட்டி, தினம் 'செக்' செய்து, இவங்களுக்குச் சம்பளம் கொடுக்கறோமில்லையா - இது தேவைதான்.''

அலுத்தவரிடம் - ''நம்ப காசு, ஆக கணக்கிலும் நாமதான் உஷாராய் இருக்கணும்'' என்ற நகுலன் தன் கம்பெனியின் கட்டுப்பாடுகளையும் சற்று இறுக்க, அதில் அவனுக்கு வேண்டிய விவரங்கள் கசிந்தன!



ஆக, சுந்தரம் திருடியது உண்மைதான் என்பதற்கான ருசு கிடைக்க, நகுலனுக்கு அது அதிர்ச்சி, அவமானம், ஆக்ரோஷம் எல்லாமும் தந்தது.

கூப்பிட்டு விசாரிக்க ஆரம்பித்ததுமே சுந்தரத்தின் விழிகளில் எட்டிப் பார்த்த கள்ளத்தனம், வார்த்தைகளின் பிசிறு.. அவரை வேலையிலிருந்து விலகச் சொல்லி விட்டான்.

எத்தனை மதிப்பு வைத்து தான் 'சுந்தரம் ஸார்' என்றே அழைத்த தன் ஊழியர் தன்னை ஏமாறிய வேதனையுடன் - இனி குற்ற உணர்வுடன் கவிழ்ந்த அவரின் முகத்தைத் தான் காண வேண்டாம் என்று தன்னையே சமாதானப் படுத்தியபடி நகுலன் ஒரு மாலை தன் வீட்டில் நுழைய, அங்கே அவனுக்கு அடுத்த அதிர்ச்சி!

கதவைத் திறந்த முத்தாயி, தருவதாய் சொன்ன காபியை மறுத்தவன் கேட்டது ''நவி எங்கே'' என்றுதான்.

''மாடியிலதான் தம்பி.''

வழக்கமான சுறுசுறுப்பு இன்றி, தொய்வாகவே படியேறினவனின் நடை தன் அறை வாசலில் சற்று ஆச்சரியத்துடன் நின்றது. இவன் அறையின் வலது கோடியிலிருந்த இரும்பு அலமாரியைத் திறந்து எதை அத்தனை ஆவலும் அவசரமுமாய் தேடிக் கொண்டிருக்கிறாள் நவ்யா?

அதில் கணினியில் பதியப்பட்ட, ஆனால் 'எதற்கும் இருக்கட்டுமே' என்று விடப்பட்ட பழைய கோப்புகள், சில முக்கிய டாக்குமெண்ட்ஸ், கடிதங்கள்.. இதில் அவளுக்கு வேண்டியது என்ன?

''நவ்யா'' - இவன் கூப்பிட, திடுக்கிட்டு திரும்பியவளின் முகம் வெளிறியது - மூச்சை இழுத்தவள், பேச்சு வராமல் தடுமாறிய விதம் ஏற்கெனவே நொந்தவனினை

"மனைவியைக் கூட நம்ப முடியதா?'' என்று கேட்டு ரணமாக்கியது.

உள்ளத்தை அப்படியே பிரதிபலித்த நவியின் இளமுகம், கள்ளமற்ற கண்கள் - அந்த வெகுளிச் சிரிப்பு - அத்தனையும் போலியா? புரட்டுத்தனமா?

"என்ன?" என்ற வினாவுடன் இவன் புருவங்கள் உயர, அவள் திக்கித் திணறினாள் -

''பூ.. பூமணி...''

"அவ அந்த அலமாரிக்குள்ளே இல்லையே?''

அத்தனை இளப்பமும் காட்டமுமாய் அவன் பேசி அவள் கேட்டதில்லை என்பதால் கண்களில் நீர் முட்டி நின்றது.

வேறேதும் பேசாமல் அறைக்குள் வந்து அலமாரியை மூடியவன், சாவியைத் தன் பாக்கெட்டினுள் போட்டபடி மறுபடி வெளியேறினான்.

நள்ளிரவு தாண்டியே வீடு திரும்பியவன்,

"சாப்பிட்டாச்சா?'' என்ற மனைவியின் கேள்வியைக் கேட்டதாய் காட்டிக் கொள்ளவில்லை.

இரவு இவள் கையைப் பற்றாமல் அவன் படுப்ப தில்லை. வயிறு பெருத்த பின், இடுப்பைச் சுற்றி தான் கை போடுவது மனைவியை இம்சைப் படுத்தும் என்ற கவனத்துடன், மென்மையாய் ஸ்பரிசிப்பவன் அன்று முதுகு காட்டி படுத்தது இவளை இம்சித்தது

புரண்டு புரண்டு படுத்தாள்.

''ஆறாம் மாசத்திற்கு மேல திரும்பிப் படுக்கணும்னா எழுந்து உட்கார்ந்து பிறகுதான் மாறணும்'' என்ற முத்தாயி யின் ஆலோசனைகள் அன்று நினைவிற்கே வரவில்லை. மனதின் பயம், வேதனை உடலை முறுக்கிப் பிழிந்தது. உடலின் சோர்வு உள்ளத்தை முறித்துப் போட்டது.

நகுலனுக்கு மனைவியின் வெம்பல இப்போது புரிந்தாலும் அப்போது புரியவில்லை.

வெறுப்பால் இறுக மூடிக்கொள்ளும் மனதிற்கு எப்படி புரியும்?

ஆக, அவள் ''எனக்கு முதுகெல்லாம் குடையுது நகுல். அடிவயிறு ஒரு மாதிரி இறுகி வலிக்குது... டாக்டர்ட்ட கேட்கலாமா?'' கேட்டபோது அவன் அசையவில்லை. எழுந்து அறைக்குள்ளேயே நடந்தவள், இவன் தோளைத் தட்டி -

''வலி கூடியிருக்கு.. தா.. தாங்க முடியலை'' என்று முணங்கிய போதும்,

''உனக்குக் கற்பனை அதிகம் - அப்படியே வலித் தாலும் மூணு மணிக்கு கிளம்பணுமா? டாக்டர் எட்டு மணிக்குத்தான் கிளினிக் வருவாங்க.''

அவள் வாயடைத்தான்!

ஐந்தரைக்கு மன உளைச்சலுடன் இவன் தூங்கிப் போக, முத்தாயிதான் டாக்டரிடம் தகவல் தெரிவித்து, ஆம்புலன்ஸை வரவழைத்தது -

''உடம்பு ஒரு மாதிரி உதறுதும்மா - கண்ணு செரு கறதைப் பார்த்தாச் சரியாத் தோணலையே'' என்று முத் தாயி ஒப்பாரியிட, டாக்டர் நவ்யாவிற்காய் மருத்துவமனை யில் தயாராய் காத்திருந்தார்.

'பேத்திக்கு நிமோனியா டாக்டர் - ஹாலிடேக்கு சிறுசை என்னிடம் விட்டுட்டு மருமகனும் வகுளாவும் பனி மூடிய ஒரு அமெரிக்கப் பகுதிக்குப் போக, அவர்களிடமிருந்த மூன்று வயது சிறுமிக்கு மார்ச்சளி - உயிருக்கே ஆபத் தாகும் வரை போய் மீண்டிருக்கா'' என்ற நகுலனின் தாயை மகளுடனேயே கூட இருந்து கவனிக்கும்படி ஆலோசனைத் தந்த தன்னையே திட்டிக் கொண்டார் டாக்டர். புஷ்பவல்லி.

"குறித்த நாளுக்கு ரெண்டு வாரம் முன்னே நீங்க வந்தால் போதும்" என்றும் இவர் சொன்னதால் நளினியும் வராமலிருக்க, நவ்யாவிற்கு இந்த நிலைமை.

பொறுப்பானவன் என்று நகுலனை நம்பியதுதான் தப்பாய் போனதா?

இப்படி அஞ்சிய டாக்டர் நகுலனைக் கடிந்து கொண்டார்.

ஆனால் இவன். தன் வேதனையை யாரிடம் சொல்ல?

நவ்யா வலியைக் கற்பனை செய்து, தன் பரிதாபத்தைப் பெறுவதற்காய் வலிப்பதாய் சொன்னாள் என்றால் கிடைக்கப் போவது மேலும் திட்டுக்கள் அல்லது குட்டுக்கள்!

ஆனால் இவனது பாராமுகம் அவளைப் பாதித்து.. குற்ற உணர்வுடன் குமைந்தான்.

கல்லெறியப்பட்ட குளம் போல இவனுக்குள் வட்ட வட்டமாய் யோசனைகள் விரிந்தபடி...

"கன்கிராட்ஸ்" - டாக்டர் அவன் தோளை இதமாய் தட்டினார்.

"ஒரு நாளுக்கும் மேலாய் ஹாஸ்பிடலில் இருந்தாச்சே நகுல். வீட்டுக்குப் போய் குளிச்சு, சாப்பிடு. ஒரு தூக்கம் கூட போடலாம். அப்ப முத்தாயியை குழந்தைக்கும் அம்மாக்கும் தேவையான சில துணிமணி எடுத்துட்டு வரச்சொல்லு - அவளுக்கு விவரம் தெரியும் - வந்து உன் மகனைப் பார்க்கறியா?"

கட்டிய தொண்டையிலிருந்து குரல் எழும்பாததால் தன் குட்டி மகனை மௌனமாகவே பார்த்தான். குற்ற உணர்வு அவனை முழுதாய் மகிழ விடவில்லை.

கனவில் நடப்பவன் போலவே போய், வீட்டில் மறுபடி சேதி சொன்னவனை முத்தாயி நெட்டி முறித்து வாழ்த்தினாள்.

"சாப்பாட்டை சூடு பண்ணி மேசையில வைக்கிறேன் தம்பி. குளிச்சு, சாப்பிட்டிட்டு படுங்க" - என்றபடி அவள்



வேலையில் மும்முரமாக, இவன் கனத்த கால்களுடன் மெல்லவே மாடியேறினான். மஞ்சரியின் அறையிலிருந்து டி.வி. அலறியது. அவளிடமும் குழந்தை பிறந்த செய்தியைச் சொல்ல, அவன் அறையை நெருங்கிய நேரம் மின்சாரம் தடைபட, வாய்த்த அமைதியில் மஞ்சரியின் குரல் உரக்கக் கேட்டது.

"ரதி - எப்படியேனும் பெங்களூரில் எனக்கு ஒரு 'ஷோ'வை ஏற்பாடு பண்ணு. அப்பா கல்யாணத்திற்கு, கோவிலுக்குன்னு ஸவுத்தில் சுற்றிக் கொண்டிருக்காங்க. நான் தொடர்ந்து நகுல் வீட்டிலே இருந்தால் - எனக்கு ஆயா வேலைதான். நகுல் வைஃப்பிற்குக் குழந்தை பிறந்திருக்கு..."

"..........."

"ஆமாமா - இப்பதான். இங்குள்ள வேலைக்காரக் கிழவி என்னை, 'நீ ராத்திரி ஆஸ்பத்திரியில போய் நவ்யாக்குத் துணையாத் தங்கிக்கோ'ன்னு மிரட்டறா. இன்னும் இங்க இருந்தால் கக்காத் துணி அலச, கஞ்சி காய்ச்ச வச்சிடுவாங்க..."

"..........."

"வேலையாட்கள் இருந்தாலும், எனக்கு இந்த நொச்சு பிச்செல்லாம் சரிவராதுப்பா. நான் செய்ய நினைச்சு, வந்த காரியம் வேற - இப்ப இங்கே சேவகம் பண்ணனும்னா... ச்சேச்சே..."



## 22

தொலைக்காட்சியின் இரைச்சலை மீறி தன் பேச்சு கேட்க வேண்டும் என்பதற்காய், உரக்கவே பேசிக் கொண்டிருந்த மஞ்சரி மின்வெட்டில் அறை அமைதியான பிறகும் கூட, தன் குரலைக் குறைத்துக் கொள்ளாததில், துளி திறந்தருந்த கதவின் வழியே அவள் பேசியதெல்லாம் தெளிவாய் நகுலனை எட்டியது!

அசந்த உடலும் மனமும் அவனை அசைய விடாமல் அங்கே நிறுத்தியிருந்தன.

''உனக்கொன்றும் வேலையில்லையே? இங்க கரெண்ட் வேற போயிடுச்சு. பேசிட்டிருப்போம்.''

''............''

''ஆமாமா அந்த பயந்தாங்கொள்ளி நவ்யாக்கு ஆண் சிங்கம் பிறந்திருக்காம். பூமணின்ற பெயரை வைத்தே நா ரொம்பச் சுலபமாய் மிரட்டிட்டிருந்தேன். அந்தப் பெயரைக் கேட்டதுமே இவ முகம் மாறிடும் - பாவம் புருஷன் மேல் அவ்வளவு காதல். செத்தவ மேலும் கூட பொறாமைப் படும் அளவுக்கு! நிச்சயதார்த்த ஸி.டி.யிலேயே நகுலன் - பூமணியின் ஆசை தெரிந்தது - அவளுக்கு நிச்சய மோதிரம் போட பிடித்த அவ கையை நகுல் விடவே யில்லை - ஏதோ பேசறது போல நகுலின் உதடு பூமணி யின் காதை உரசினது கூட கேமராவில் சிக்கிடுச்சு - நாங்க எல்லாரும் பார்த்து செம கேலி பண்ணினோம்னு சொல்லி வெறுப்பேத்தினேன்.. 'நீங்க சொன்ன ஸி.டி எங்கேயிருக்கு? தேடினேன் கிடைக்கலியே'ன்னு நவ்யா என்னிடமே பரிதாபமாய் கேட்டாளேப் பார்க்கணும்.''

''..............''

''ஸி.டி.யில் அப்பேற்பட்ட உன்னத காதல் காட்சி எதுவு மில்லப்பா - அதுதான காமெடி! அம்மா பார்த்த பெண்ணை கல்யாணம் செய்துக்க நகுல் சம்மதித்ததே பெரிசு. பெருச தொல்லை நிற்கட்டுமேன்னு தலையாட்டினான் போல.. ஆனா 'திடும்'னு நடந்த நிச்சயம் எனக்கு அதிர்ச்சிதான். அப்பாக்குமே என்னை நகுலனுக்குக் கல்யாணம் செய்திடணும்னு ஒரு நோக்கம்...''

''...........''



''எனக்கென்ன எந்தப் பொண்ணுக்குத்தான் நகுல் மேல கண்ணு இல்லை? அவன் திறமை, சேர்த்த பேர், பணத் திற்கு அவன் கருங்குரங்கு ரேஞ்சில் இருந்தாலுமே கழுத்தை நீட்டிடலாம். ஆனோ செம ஸ்மார்ட்! நொறுங் தின என் இதயம் இங்கே வந்து நவ்யாவைப் பார்த்ததும் தேற ஆரம்பிச்சிடுச்சு. ஏமாளி, வெகுளி. ஆக அவ மனசைக் கலைச்சு, உலுக்கினா... இந்தப் பிரசவத்தோடயே போயிடுவான்னு நினைச்சேன். இந்த பூமணி விஷயத்தில் வேறேதோ விவரமும் இருக்கலாங்கற சந்தேகம் எனக்கு. பச்சை உடம்போடு வீடு வர்ரவளை இன்னும் கொஞ்சம் குலுக்கினா, மண்டையைப் போட்டிடுவா...''

''...........''

''என்னது தும்பை விட்டு வாலைப் பிடிக்கிறேனா? அதாவது நகுல் கைமாறினப் பிறகு இப்போ கொலை செய்ய பார்க்கிறேன்ற? முன்னமும் நான் சும்மா இல்லியே? தூலை மாற்றி போனில் நகுலிடம் குழைந்தேன். வித விதமாய் ஆசையைத் தூண்டறது போல பேசியும் அவன் மசியலை - அதட்டினான். ஆக பம்மிட்டேன். இது போல வேற சிலரும் அவனை நெருக்க, அதற்கெல்லாம் முற்றுப் புள்ளி இடத்தான் முதலில் அவன் அந்த பூமணியைக் கல்யாணம் செய்துக்க சம்மதித்ததே...''

''..........''

''இப்பவும் ஒண்ணும் மிஞ்சிடலை. வீட்டுக்கு சதா உறவுக்காரங்க வர, நவ்யாவின் அம்மாவும் மாமியாரும் பிஸியாயிருப்பாங்க - நான் ரெண்டு, மூணு வாரம் எஸ்கேப் ஆகிட்டு மறுபடி இங்கே வந்து, 'ஐயையோ - இதென்ன நவி - உன் உடம்பு இன்னும் பீப்பாயாட்டமே இருக்குதே? கட்டு விட்ட உடம்பு மேல் ஆம்பிளைக்குக் காதலே வராதே - என்னைப் போல சிலையாட்டம் இருக்க

வேண்டாம்?'ன்னு ஓதினேன்னா, இந்த பூஞ்சைப் பொண்ணு பட்டுனு போயிட மாட்டா?''

படாரென தன் அறைக் கதவு மூடப்பட, மஞ்சரி விதிர்த்தாள் - வெளியே கேட்பது - நகுலனின் காலடி சத்தமா? ஓடிப்போய், கதவைத் துளி திறந்து எட்டிப் பார்த்தவளை அறைந்து மூடப்பட்ட அவன் அறைக் கதவு, உலுக்கியது!

மின்சாரம் மீள, மறுபடி அலற ஆரம்பித்த டி.வி.யை அணைக்கத் தோன்றாமல் சரிந்து கிடந்தாள்!

சற்று நேரத்தில் மிடுக்காய் வந்த முத்தாயி -

''உனக்கு ஹோட்டலுல ரூமு போட்டிருக்காம் - ரெண்டு நாளைக்கு. கிளம்பிடறியா? பிறவு அப்பாட்டியோ, பெங்களூருக்கோ போய்க்கோ. பெரிய அம்மாமார் ரெண்டு பேர் காவ்யா பொண்ணெல்லாம் வர்ராங்க - இந்த அறைத் தேவைப்படுது'' என்று உத்தரவிட்டவள்,

''கேசரி கிண்டறேன். வீட்டுக்கு வாரிசு பிறந்திருக்குல்ல? ஆனா உனக்குத்தான் சர்க்கரையும் நெய்யும் ஆவாதே - நீ கிளம்பு.''

கிண்டலும் செய்து விட்டுப் போனாள்!

தன் பேரனை அள்ளியபடி வந்த நளினியின் கண்கள் பெருகி வழிந்தன. மகளுக்கு அதன் காரணம் புரிந்தது - அது ஆனந்தப் பெருக்கு.

இப்போது இல்லாத தன் கணவரின் ஜாடையில் இந்தக் குட்டிப் பேரன் இருப்பதில் பொங்கிய பெருமிதம்!

''சின்ன ராஜாக்கு ரொம்ப அவசரம் போல? இனிமேல் ரெண்டு பாட்டிமாரும் உன்னைச் சுற்றித்தான், செல்லம். உங்கப்பா பாட்டியும் நாளை பிளேன் ஏறிடுவாங்க.''

நவ்யா பக்க உறவுகள் -

''அடடே அப்படியே நாதனை உரிச்சுட்டுப் பிறந்திருக்கிறானே குட்டி?'' என நவ்யாவுமே பூரித்து, விரைவில் உடம்பு தேறிவிட்டாள்.

காவ்யா வந்து சேர, வீடு சிறு சொர்க்கமாய் மாறியது. சிசுவின் சின்ன சிணுங்கலுக்கும் அத்தனை பேரும் ஓடி வந்து சீராட்டினார்கள்.

பார்க்க வந்த உறவினர்களிடம் நகுலின் தாய் -

''எம்பேரன் அப்படியே என் சம்பந்தி சாயல். அந்த அண்ணனை உயிரோடு பார்க்க, பழக, எனக்குக் கொடுத்து வைக்கலைன்னுதான், கடவுள் இப்போ இந்த குட்டி ராஜாவை அனுப்பியிருக்கார்'' - பூரித்தார்.

நேரத்துக்கு உணவும், கவனமும், இந்தப் பாசமும் சேர, இரண்டு மாதங்களில் வீட்டின் பொறுப்பெடுக்கும் அளவில் நின்ற நவ்யாவிற்குள் ஓரமாய் ஒரு குறை மட்டும் அரித்தது -

வெளியே.. யாரிடமும் சொல்லி ஆற்ற முடியாத குறை...

ஆசை தீர ஒரு வாரம் அக்கா மகனைப் பார்த்திருந்து விட்டுக் கிளம்பிய காவ்யா அக்காவைக் கேலி செய்தாள்.

''நீயும் பயந்து என்னையும் மிரட்டினியே நவிக்கா. ஏதோ அத்தான் உன்னைப் பழி வாங்கத்தான் கட்டிக் கொண்டதாய்.. நம் வியாபாரத்தில் பார்ட்னர் ஆனதாய்? நல்லவேளை அந்த சந்தேகத்தை எல்லாம் பேசி தீர்த்துகிட்ட.. இல்லை இப்படி ஒரு வாழ்வு அமைந்திருக்குமா? இன்னும் ஒரு மாசத்தில் என் எக்ஸ்சேன்ஜ் ப்ரோக்ராம் முடிந்து, நான் சென்னைக்கே வந்திடுவேன்...''

''ஹாஸ்டலை விட்டுட்டு இங்கயே இருந்து படியேன் காவ்யா?'' என்ற மூத்தவளைக் கட்டிக் கொண்ட தங்கை மெள்ள சொன்னாள் -

''தாங்க்ஸ்க்கா.''

அத்தனை சந்தோஷத்தையும் அந்த ஒற்றை முள் குத்தி அமிக்கது -

ஏன் நகுலன் தன்னை நெருங்கவில்லை?

அளவான பேச்சு - அதுவும் மேலோட்டமாய் என்று.. தன்னை ஒதுக்குவது ஏன்?

''மூணு மாசமாகப் போகுது குட்டி ராஜாக்கு - இப்ப ராத்திரி விழித்து அழறதெல்லாம் இல்லை - ஆக நீங்க உங்க ரூமிலேயே... அதாவது நவியோடவே இருக்கலாம் நகுல்'' என்று நளினி நாசுக்காய் தான் ஒதுங்கிய பிறகும் அவன் இங்கே நுழையவில்லை.

கீழ்பகுதியிலுள்ள சின்ன அறையிலேயே தங்கினான். குழந்தையை பார்க்க மட்டுமே படியேறுவது - இவள் தூங்கும் சமயம் அவனை எடுத்துக் கொண்டு தனது அறைக்குப் போவது என்று...

தாங்கள் மிக விலகிவிட்டது நவ்யாவிற்குப் புரிந்தது - அந்த தவிப்பில் அறுபட்டாள்!

ஒரு இரவு, அவனுக்கும் ஒரு கோப்பை பாலை எடுத்து வந்து, அவன் அறையில் தந்தவளிடம் சிறு செருமலோடு நகுலன் சொன்னான்.

''இன்னும் இரண்டு நாளில் பரத் இங்கே வர்ரான், நவ்யா - உன்னைப் பார்க்க.''

சோர்ந்திருந்த அவள் விழிகள் 'சட்'டென பளபளத்தன...



## 23

''நான் உங்களோட பேசணும்'' - என்றவளை நிமிர்ந்து பார்த்தவன் தன் எதிரே கிடந்த நாற்காலியைக் காட்டினான். ஏ.ஸி. அறை என்பதால் கதவு சாத்தப்பட்டிருந்தது.

கோபத்தின் விறைப்புடன் நின்றவள் 'சட்'டென உட்காரவில்லை.



நவ்யா கட்டியிருந்த இலைப்பச்சை கிரேப் அவளை ஒரு பசுங்கொடி போலக் காட்டியது. ஆரோக்கியமான அவளது உடல் வற்றியிருந்தாலும் அழகு பெருகியிருந்தது. ஆனால் கண்களில் கோபத்தின் கடுப்பு -

''பரத் வந்து பேசிட்டுப் போயாச்சு - நீங்க தானே அவனை வரச் சொன்னீங்களாம் ஏன்?''

''நீ போன மாசம் தூக்கத்தில் அவன் பேரைச் சொன்னே...''

மேலே ஏதும் சொல்லாமல், தன் லேப்-டாப்பை அவன் மூட, நவ்யா கூசிக் குழம்பினாள்.

ஏனப்படி உளறித் தொலைத்தோம் - என்ற குழப்பம்!

அப்போதுதான் அந்தக் கனவு லேசாய் நினைவிற்கு வந்தது.

இருண்ட காட்டை நோக்கி இவளும் பரத்தும் நடப்பதாய், அவன் கையாட்டி விட்டு அதன் இருட்டுக்குள் போய் விட, இவள் அவனை அழைப்பதாய்...

அந்நேரம் அவன் பெயரை உரக்க உச்சரித்து விட்டாளோ?

இதென்ன விநோத கனவு என்று சில முறை யோசித்ததால் அவளுக்கு இன்னமும் அது முழுக்க மறக்கவில்லை.

மற்றபடி இவள் பரத்தைப் பற்றி நினைப்பதில்லையே?

இப்போது இவளை முற்றுமாய் ஆக்கிரமித்திருப்பது நகுலன்தானே. அதுவும் தன் பாராமுகத்தால்?

சதுர முகமும் சுருட்டை முடியுமாய் குழந்தை தன் அப்பாவின் ஜாடை என்றாலும் கண்கள் மட்டும் அப்படியே நகுலனுடையவை!

புருவம் சுருக்கி மகன் தன்னைப் பார்க்கும் போது நகுலனே தன்னை உறுப்பது போலல்லவா பூரித்து போவாள்!

அந்த ஆர்வத்துடன் தானே மகனின் குட்டிப் பட்டுக் கன்னங்களை ஓயாமல் இவள் முத்தமிடுவதும்...!

மனமார இதுவரை இவள் நகுலனை முத்தமிட்டதில்லை!

எந்நிலையிலும் தன் உணர்வுகளைக் கடிவாளமிட்டு இழுத்து இறுக்கியே வைத்திருந்தாள் - முதலில் அச்சத்தினால் -

பின் பொறி வைத்துத் தன்னைப் பிடித்துவிட்டானே என்ற பொறுமல்.

இவனுக்குத் தன்னை விட பிரமாதமாய் எத்தனையோ பெண்கள் கிடைத்திருப்பார்களே என்ற பரிதவிப்பு - சுய பச்சாதாபம்.

இவற்றில் காதலுக்கு இடமின்றி, அது வெளியே நிற்க வைக்கப்பட்டிருந்தது!

இத்தனை நாள் அதை ஒதுக்கியவள், இப்போது அதற்காய் போராட துணிந்து விட்டாள்!

மகனைக் கொஞ்சும் கணவனின் பார்வை தன்னையும் வருடும்போது, இவள் தோளில் தூங்கும் குழந்தையை அவன் குனிந்து முத்தமிடும் போது - நவ்யாவிற்கு சிலிர்க்கும்.

உடம்பை மின்னலாய் ஊடுருவும் அச்சிலிர்ப்பு, அவளது பயத்தை, வெறுப்பை, விலகலை உருவி எடுத்திருந்தது புரிந்தது!

''வந்து மூணு மாசமாச்சே - நம்ப ஸ்டோர்ஸை, வீட்டைப் பார்த்துட்டு, ஒரு மாசம் கழித்து வர்ரேன் நவி" என்றபடி அம்மா கிளம்பிய மறுவாரமே, மாமியாரும் உற்சாகமாய் மூட்டையைக் கட்டி விட்டார்.

''என் ஒண்ணு விட்ட அண்ணன் மகனைத்தானே வகுளா கட்டியிருக்கா? மாப்பிள்ளையின் தங்கைக்குக் கல்யாணம் கூடி வந்திருச்சு நவி. அவளுக்கு வயசு இருபத்தி ஆறைத் தாண்டிட்டதால் எல்லாருமே



கொஞ்சம் கலவரத்துடன் மாப்பிள்ளை வேட்டையில் இருந்தோம். இப்போ பிரமாதமான பையனாய் அமைஞ்சிருச்சு. உடனே கல்யாணம்றாங்களாம். மாப்பிள்ளை இல்லாததால் நானாச்சும் போய் உதவணுமில்லையா? கிளம்பறேன் - இரண்டு வாரத்துல நீங்களும் கல்யாணத்திற்கு சேலம் வந்து சேருங்க.'' -என்றபடி.

இப்படி நேர்ந்த தனிமையை தான் மிக ஆவலாய் எதிர்பார்த்தது புரிய நவ்யா கூசிப் போனாள் - மஞ்சரி வீட்டை விட்டு சற்று பலவந்தமாய் விலக்கப்பட்டதை முத்தாயி சொல்லக் கேட்டவளுக்கு நிம்மதி. ஆனால் இப்படி பரத்தை நகுலன் இழுத்து இங்கே கொண்டு வந்ததில் மறுபடி சின்ன எரிச்சல்.

ஆக இதனால்தான் இரு நாட்களாய் வாய்த்தத் தனிமையிலும் நகுலன் தன்னிடம் வரவில்லையா?

மனைவி மாற்றான் பெயரை தூக்கத்தில் பிதற்றுகிறாளே என்ற ஆத்திரமோ?

அல்லது இவளைப் பழி தீர்க்க இது ஒரு புது வழியா?

தன் முகத்தை கூட முழுதாய் பார்க்காமல் நகுலன் ஒதுங்குகிறானே? அவனது ஒதுக்கம் இவளது தாபத்தைக் கிளறியது.

அவனது அணைப்பின் இதத்திற்காய், முத்தங்கள் தெரிவித்த நேசத்தைத் தேடி ஏங்கினாள்.

மஞ்சரி மிரட்டியதுபோல தன் உடம்பின் கட்டு விட்டதும் அவன் மோகமும் தளர்ந்து விட்டதா? அப்படிப்பட்ட காமுகன் அல்லவே நகுலன் - அப்படியிருந்தால் முன்பு இவள் கைகளைப் பற்றியபடி உறங்கியிருக்க மாட்டானே?

தவிர, தான் முன்னை விட மெருகேறியிருந்ததும்

பிள்ளையைக் கொஞ்சிய பூரிப்பில் பளபளத்த முகமுமாய்.. அவள் கருத்த கண்களில் பெண்மையின் கனிவு. சத்தான ஆகாரம், மருந்துகளால் தலைமுடி மேலும் செழித்து தொங்கியது.

பின்னும் ஏன் விலகி நிற்கிறான்?

குற்றம் சாட்டும் போட்டியில் - வாழ்வை இருவரும் இழந்து விட்டார்களோ?

'எப்போதும் கையில் ஒரு சுத்தியலோடு திரிபவனுக்கு சுற்றி இருப்பதெல்லாம் ஆணிகளாய்தான் தெரியும்' என்பதற்கேற்ப, தான் ஒரு கனத்த சுத்தியலோடுதான் அவனை மணந்தது!

புருஷனின் பார்வை, பரிவு, வார்த்தைகள் எல்லாவற்றிலும் ஏதோ ஒரு நோக்கம் மறைந்திருக்கும் சந்தேகத்தில், அவற்றை ஆணிகளாய் அறைந்துத் தள்ளி, தாம்பத்தியத்தை உறுத்தல்களாக்கி இருந்தாள்.

தடவி சுகம் காண முடியாதபடி அவை இரும்புத் துருத்தல்களாய்.. கரும்பாய் இனித்திருக்க வேண்டிய அவர்களது உறவு இப்போது சக்கையாய்.

'பேபிக்கு நிஜந்தன்னு பேர்.. எப்படியிருக்குது?' இவள் தயக்கமாய் கேட்க, அவன் 'உன்னிஷ்டம்' என்றிருந்தான்.

நடந்தது அத்தனையும் கனவல்ல நிஜம்தான் என்பதற்கு ஒரே சாட்சி இனி தன் நிஜந்தன் மட்டும்தானோ?

நகுலனின் பார்வை கூட தன்னை தவிர்க்கும் நிலையில், எவ்வளவு நாள்தான் புழுங்கி பொறுத்துப் போக முடியும்?

ஆக பேசி இதை ஒரு முடிவிற்குக் கொண்டு வந்து விடுவது... இதயம் படபடக்க, அவள் தலை சூடானது!

'திடும்'மென அவன் மனம் அவளுக்குப் புரிந்தது -



அவன் திட்டம் இதுதான் -

அதாவது தான் நேசித்த பூமணியை தன்னாலேயே அவன் பிரிய நேர்ந்ததினால், தன்னை அவனைக் காதலிக்க வைத்து - பின் வலிக்க துடிக்க பிரிய வைப்பதே!

அவன் தழுவல்களை இவள் ஏற்காமல் சமாளித்து விட்டாலும், இந்த தள்ளுதலைத் தாங்க முடியவில்லை.

அவனும் இவள் பரத்தின் பெயரை தூக்கத்தில் சொல்லக் கேட்டு, தானும் தோல்வியுற்றதாய் எண்ணி அலுத்திருக்கிறான்!

தன்னை இவளுக்குச் சதா நினைவூட்டும் குழந்தையோடு இவளை ஒதுக்கி விடுவதே கடும் தண்டனைதான்.

ஆனாலும் பரத்தை வரவழைத்தது எதற்காக?

அவனுக்குள் குற்ற உணர்வு குறுகுறுப்பதால்?

இருவருக்கிடையே கல்யாணம் என்ற நினைப்பு தனக்கும் பரத்திற்கும் இடையே ஒரு இனிப்பு பூச்சைப் பூசியிருந்ததுதான் - ஆனால் கடித்து, உறிஞ்சும் கரும்பிலிருந்து ஒழுகும் இனிப்புபோல அது உள்ளானதல்ல - அதை நகுலனுக்கு எப்படி விளக்குவது?

எழுந்து, மேஜையைச் சுற்றியவன் அவளருகே வந்து நின்றான்.

''உண்மையைச் சொல்லட்டுமா, நவ்யா?'' ஆழ மூச்செடுத்தவன் தொடர்ந்து பேசினான்.

''பரத் இந்தியா வந்தது - அவன் அம்மா வரச்சொன்னதால். அவங்க அவனுக்காய் ஒரு வசதியான பெண்ணைத் தேர்ந்தெடுச்சாச்சு - அவள் கொண்டு வரும் பணம் அவங்க கடனைத் தீர்த்து, அடகிலிருக்கும் நகைகளை மீட்டுடும்... மதுரைக்கு அவன் வீட்டிற்குப் போகும் முன் நன்றி சொல்வதற்காய் இங்கே வந்திருந்தான் - அந்த ப்ரொபஸர், என் உதவியைப் பற்றி சொன்னாரா -

இல்லை அவனுக்கேத் தெரியவந்ததா - தெரியலை. ஆனால் நீ அவனை மறக்கலைன்னு பட்டதால் உன்னோடும் பேசச் சொன்னேன், நவ்யா."

"தப்பாய் புரிஞ்சுட்டிருக்கீங்க."

"நல்லது. பரத் மேல் உனக்கு எந்தப் பிரியமும் மிச்சமில்லைங்கறதை உனக்கு உணர்த்தத்தான் அவனை வரச்சொன்னேன்..."

"ப்ளீஸ், பிரியம் நேசம் பற்றியெல்லாம் நீங்க பேச வேண்டாம்."

அவள் அழுத்தமாய் சொன்னதை அவன் ஏற்றுக் கொண்டது போல தலை குனிந்து சொன்னான்.

"எனக்கு அதற்கான அருகதை இல்லைதான், நவி" என்று!



## 24

குழந்தையின் சிணுங்கல் அவர்களை மாடிக்கு இழுத்தது - தாயின் மிருதுவான தட்டலில் மறுபடி குழந்தை கண்ணயர, பலவர்ண மணிகள் குலுங்கிய அந்த பால்வண்ண மரத் தொட்டிலைப் பார்த்தவளின் கண்கள் பனித்தன.

மறுபடி சுத்தியலோடு திரிந்து ஆணியல்லவா அடித்து விட்டாள்! மூன்றாம் நாள் மருத்துவமனையிலிருந்து பிள்ளையோடு வீடு திரும்பியவள் தான் ஆசைப்பட்டு கிடைக்காத அதேத் தொட்டிலை இங்கேப் பார்த்து எப்படிப் பொங்கிப் போனாள்...?

அதையெல்லாம் மறந்து -

'உனக்கு நேசம் புரியாது - பாசம் காட்ட தெரியாது' என்று ஏன் இப்போது சொன்னாள்?



ஊடலை தம்பதிகள் இருவரும் தங்களுக்கு இடையே ஊதி ஊதிப் பெரிதாக்க - அதில் கொதித்து ஆவியாவது உயிர்க்காதல் அல்லவா? அவனைப் பிரிந்து விடுவேனோ என்று கலங்கும் தான் ஏன் இவனை மேலும் நோகடித்து விலக்குகிறேன்?

புரியாதவள், கட்டிலில் சாய்ந்து அழுதாள்.

ஒரு குவளை நீர் தந்து அவளை ஆசுவாசப்படுத்தியவன் -

"நாம ரெண்டு பேருமே சந்தோஷமாயில்லை நவி. நம்ப மனசை மற்றவர்க்கு முழுக்கக் காட்டிடறது நல்லது..."

"எனக்குத் தெரியும்"- விசும்பலூடே சொன்னாள்.

"என்ன தெரியும்?"

"உங்க மனசு. அதன் வன்ம வேகத்தில்தானே என்னைக் கல்யாணம் செய்துகிட்டீங்க?"

அவன் கன்னத்து தசைகள் இறுகித் துடித்தன.

"ரொம்பக் கேவலமாகவே என்னை இன்னமும் எடை போடறே. பூமணியின் விபத்து எனக்கு அதிர்ச்சிதான் - ஆனால் முதல் அதிர்ச்சி அவளோடு எனக்கு நிச்சயிக்கப்பட்ட திருமணம்!"

ஒரு நாற்காலியை அவள் எதிரே இழுத்துப் போட்டு உட்கார்ந்தவனை, 'சொல்வதைத் தெளிவாய் சொல்' என்று கேட்டது அவளது பார்வை.

"கோர்வையாய் சொல்ல முயற்சிக்கறேன் - 'திடும்' மென்றுஅம்மா கல்யாணம் என்றது எனக்கு அதிர்ச்சிதான். அது என் லட்சியங்களுக்கு தடை, ஒருவிதமான முடிவு என்று கூட அஞ்சினேன்."

"அத்தை உங்களை ரொம்ப வற்புறுத்தினாங்களா?"

"அது ஒரு பக்கம் - மத்தளத்தின் இரண்டாவது பக்கமாய் இளம் பெண்களின் நச்சரிப்பு. நான் அலட்டற

ஆனால் யார்னே தெரியாத
பொண்ணுங்க என் மேல் விழுந்து பழகினாங்க. எந்த
விற்கும் நெருங்க துடியாய் நின்னாங்க. நான் எல்லாரை
யும் சொல்லலை - பணம், புகழுக்கு என் மனைவியாவது
சுலபம்னு நினைத்த சில பெண்கள் - ரைட்?''

தன் கல்லூரி நாட்களிலேயே அது பற்றிய சேதி இவன்
காதையும் எட்டியிருந்ததால் அவளுக்கு அதை நம்பவே
வேண்டியிருந்தது.

''எப்படி கிடைக்குமோ.. என் ஸெல் போனில் விதவித
மான கொஞ்சல், குலாவல்கள். தடம் மாறிடுவேனோன்னு
எனக்கே சில சமயம் சந்தேகம் வந்திடும் - வாலிப வய
சில்லையா? ஆனால் வீட்டு போனிற்கே சிலர் கூப்பிட்டு
கீழ்த்தரமாய்.. பேச, இங்குள்ள போனுக்கும் காலர் ஐ.டி
வைத்தேன். எங்கேருந்து யார் அழைப்பது என்பது இனி
எனக்குத் தெரியும்னு ஆனதையும் கண்டுகொண்ட அந்த
அழைப்புகள் நின்றன...''

ஒரு கணம் நிறுத்தி, சொல்லவா - வேண்டாமா
என்பது போல யோசித்தவன் தொடர்ந்தான்.

''அது மஞ்சரின்னு சமீபமாய்தான் தெரிய வந்தது.
கூடவே அவ உன்னை மிரட்டினது பற்றியும்.''

''என்னை...? புரியலியே?''

''பூமணியை நான் காதலித்தது போல சொல்லி,
உன்னை அல்லாட வைத்தாள் - இல்லையா?''

''நிச்சயதார்த்த ஸி.டி.யில் தான் பார்த்ததைச் சொன்
னாங்க - இளம் தம்பதிகள் அப்படி... இருப்பது இயல்பு
தானே?'' சிரமப்பட்டு, தான் அதைப் பொருட்படுத்தாதது
போல சொன்னாள்!

''யெஸ். ஆனால் அத்தனை இயல்பாய் நாங்க
பழகலை... என்பதுதான் உண்மை!''

''நீங்க சில சமயம் உங்க லாப்-டாப்பில் மூழ்கியிருப்
பீங்க - அதிலும் அந்த நிச்சயதார்த்த ஸி.டி.யைத்தான்
பார்க்கறீங்களோன்னு... அதன் ஒரு காப்பியை நீங்க ரொம்ப
பத்திரமாய் வைத்திருப்பதாய் மஞ்சரி சொன்னதால் உங்க
காட்ரெஜ் பீரோவில் தேடினேன்...''

அவன் இரு கைகளாலும் தன் தலையை இறுகக்
கோதினான்.

''சிலர் அழவா சிரிக்கவான்னு தெரியலைன்னு பேச,
அதைப் பேத்தல்னு நினைப்பேன் - இப்ப என் நிலைமை
அதுவேத்தான்! பூமணியின் மறைவில் நான் வருந்தியது
அவள் பெற்றோருக்காய் - தங்களின் செல்ல மகளை அந்த
வயதில் இழப்பது பெரும் கொடுமை. அவ்வளவுதான்.''

''நீங்க பூமணியோடு.. அப்படி பேசிப் பழகி..'' இழுத்தாள்.

''பேசினோம். ஆனால் கொஞ்சலாய் இல்லை - காத
லோடும் இல்லை. அவளும் ஏதோ புடவை விற்பனை
ஆரம்பிப்பதாய் இருக்க, அதுபற்றி பேச, நான் பெரும்
பாலும் கேட்டுக் கொள்வதோடு சரி. அம்மாக்கே அதில்
வருத்தம்தான் - ரொமான்ஸ் விஷயத்தில் ரொம்ப
சொதப்பறேன்னு!''

இப்போது நவ்யாவின் கண்ணீர் வற்றி, முகம் தெளிந்
திருந்தது. ''நிச்சயமான சில நாட்களில் அந்த விபத்து -
அப்பதான் உன்னைப் பார்த்தேன், நவ்யா - உள்ளத்தை
அப்பட்டமாய் காட்டிய உன் முகம் உன்னை நிரபரா
தின்னு காட்டியது.''

''பிறகேன்.. என்னைக் கல்யாணம்?'' ஆரம்பித்தவள்,
தன்னையே கடிந்து, பேச்சை நிறுத்தினாள் -

''புரியவே புரியாதா நவி? என் பிரியம் உனக்குப் புரியப்
போறதில்லையா? அத்தனை மோசமாகவா இருந்தது
என்னோடு வாழ்ந்தது?''

கசப்புடன் கேட்டான்.

அதுவரை அவளுள் ஒட்டிக் கிடந்த பயமும் சந்தேகமும், பிரிந்து உதிர்ந்தன.

''ல்லை.. ஆனால் உடனே நீங்க எங்களின் பிஸினஸ் பார்ட்னர் ஆனது?''

''கோர்வையாய் எனக்குச் சொல்லத் தெரியலை. ஆனால் 'லேக் வியூ'வில் அன்றைக்கே உன்னிடம் தெளிவாய் சொன்னேனே. முதன் முதலாய் உன்னைப் பார்த்ததிலிருந்தே என்னில் சலனம்தான்னு...''

குரங்கு கதை அவள் ஞாபகத்திற்கு வர, உலர்ந்த உதடுகள் லேசான முறுவலில் விரிந்தன.

''உன் முகம் என்னைப் பாதித்தது போல மற்றொரு விஷயமும் உன்னை என்னிடமாய் ஈர்த்தது - நீ என்னைப் பார்க்கவே இல்லை! போலீஸ் ஸ்டேஷன், விசாரணை அத்தனையிலும் உன் மனசில் இருந்தது பூமணிதான். அவள் சாவிற்கு நீயும் ஒரு காரணமோ என்ற பரிதவிப்புதான் - மற்றவர் யாருக்கும் உன்னில் இடமில்லை. அப்படி வருந்திய அந்த அழகு முகம் என்னில் பதிஞ்சிடுச்சு. ஊர் திரும்பிய பிறகும் உன் நினைவு அடிக்கடி என்னில் -

'ச்சே - பாவம் அந்தப் பெண்ணிற்கு ஆறுதலாய் நாம் ஏதும் பேசவில்லையே' என்ற ரீதியில். அப்போது பூமணி வீட்டில், நாங்க போட்ட நகை, புடவையை அனுப்பி வைப்பதாய் சொல்ல, அவங்க எனக்கு போட்ட வைர மோதிரத்தை அனுப்பிட நினைச்ச நான்,

''நீ அங்கே அவர்களைப் பார்க்க, பேச, வருவதாய் பேச்சின் போக்கில் அவங்க சொன்னதும் நானே கிளம்பிட்டேன்.

'இன்னும் எங்க மனம் ஆறலைன்னாலும், அந்தப் பொண்ணு தேறும்படி நாங்க ஏதேனும் பேசணும் தம்பி'ன்னு அவங்க சொல்ல, நானும் மதுரை வந்து சேர்ந்தேன்!''



''ம்ம்.. அங்கேதான் நான் முதன்முதலாய் உங்களைப் பார்த்தேன்.''

''மெலிஞ்சிருந்தே. உன் கண்களின் கலவரம், கவலை என்னை மேலும் பலக்கத் தாக்கியது. அதுவும் அறையின் மூலையில் நின்ற என்னை நீ பார்த்த நொடி, ஏற்கெனவே சலனத்தில் குழைந்த என் இதயம் முழுசாய் கரைஞ்சிடுச்சு...''

என்? என்று கேட்க நினைத்தாலும் அவன் தொனியிலிருந்த உண்மை இவளது வாயை அடைத்தது.

'''எந்தப் பாசாங்கும் இல்லாத பெண் இவள்'னு என் மனசு சொல்லியது.

கடுகளவு நம்பிக்கையே காதல் பிறப்பதற்குப் போதுமானதுன்னு சொல்வாங்க. அந்த நம்பிக்கை விதை என்னுள் விழுந்திருந்தது! தவிர என்னைப் பார்த்த உன் கண்ணில் - கூச்சமும், வருத்தமும்தான் - அந்தப் பார்வை எனக்குப் புதியது!

மிடுக்காய், என்னை வீழ்த்த மின்னலாய் பாயும் பல பெண்களின் பார்வைதான் எனக்கு பரிச்சயம்.. அதையெல்லாம் சமாளித்து நின்ற என்னை உன் பார்வை சாய்த்துவிட்டது!

இன்னும் நவ்யாவிற்கு வார்த்தைகள் வரவில்லை எனினும் அவள் கண்கள் 'நிஜமாகவா?' என்று கேட்க, அவன் எழுந்து அவளருகே வந்தான். அவளும் எழுந்தாள்.

''ஆனாலும் முழுக்க விழுந்தது எப்போ தெரியுமா? உன் தெற்றுப்பல் சிரிப்பில்.''

''ஐயோ.. நீங்க நான் சிரித்ததில் கோபப்பட்டிருப்பீங்கன்னு...?''

''ரொம்ப விநோதம்னு நினைச்சேன் - ஆக அதுபற்றி அன்றே உங்கப்பாவை ரெயில்வே ஸ்டேஷனில் தற்செயலாய் பார்ப்பது போல பார்த்து கேட்க, உன் பதட்ட சிரிப்பு பற்றி தெரிஞ்சுகிட்டேன். தவிர நிஜமாகவே உங்கப்பா

வின் பேச்சு, பண்பெல்லாம் என்னைக் கவர, அவரோடு என் பழக்கம் தொடர்ந்தது - உன்னை மறக்கவும் முயற்சி செய்தேன் நவி. பூமணி சம்பவம் உன்னைப் பாதித்தது - அவள் எனக்கு நிச்சயிக்கப்பட்ட பெண் - ஆக அது சரிவராது - நெருடும்னு ஒதுக்கத்தான் நினைத்தேன்.''

மறுபடி குரங்கு கதை ஞாபகத்திற்கு வர, நவ்யா புன்னகைத்தாள் -

''நீ அஞ்சி ஒதுங்குவேன்னு தெரியும் - ஆனாலும் முயற்சி செய்தேன்.

'முயற்சி செய்து தோற்றாலும்
அது ஒரு வகை வெற்றிதான்!
முயலாமலே வென்றாலும்
அது ஒரு வகை தோல்விதான்!' என்பதில் எனக்கு நம்பிக்கை. ஆக அங்கிளிடம் பேசி, உங்க பிஸினஸிற் குள்ளும் புகுந்தேன் - முயல ஆரம்பித்து விட்டால், அதில் எப்படியேனும் வெற்றி பெறணும்ங்கற வேகம் எனக்கு வந்திடும். ஆக என் முயற்சி சற்று முரட்டுத் தனமாய், மூர்க்கமாய் கூட இருந்திருக்கும்! அதிலும் பரத்தை, அப்பா இறந்த வீட்டில் பார்க்க, அவனோடு உன் நெருக்கத்தைப் பார்க்க, தோற்று விடுவோம்ன்ற பதட்டம் வேற.''

''நீங்க, உங்களிடம் பழக ஆரம்பித்த பிறகு பரத்தின் நினைப்பே எனக்கு வரலை.. அதாவது அந்த மாதிரி...''

''புரியுது, ஆனால் கல்யாணத்திற்குப் பிறகும் நீ விலகியே நிற்க, தளர்ந்துட்டேன். முன்பு என்னைப் பெண்கள் மொய்த்ததில் கர்வமேறிய என் மனம் - 'கட்டியவளே இன்னும் உனக்குக் காதலாய் ஒரு முத்தம் - ஒரு பார்வை கூட தரலை' என்று கலாய்த்தது!

அவளது முறுவல் சிரிப்பாய் விரிந்தது -

''இதையெல்லாம் அந்த முதல் ராத்திரியே சொல்லி யிருக்கலாம்'' - என்றாள் குறையாய்.

''என் செயல்களால் புரிஞ்சுக்குவேன்ற நம்பிக்கை... பெண்கள் மொய்க்கும் நகுல் - உன்னைக் கல்யாணம் செய்துக் கொண்டானே - இதை விட வேறென்ன சாட்சி வேணும்ன்ற? - பிராக்டிகல் புத்தி எனக்கு!''

''பழிவாங்கவே அதுங்கற சந்தேகம் எனக்கு.''

''அத்தனை வில்லனாகவா தெரிந்தேன் நான்? உன் தோழி கவிதா லேசாய் அது பற்றி பேச, அவளிடம் என் மனசை, அதாவது அதை உன்னிடம் பறி கொடுத்ததைச் சொல்ல. அவளுக்கு ரொம்ப நிம்மதி, திருப்தி.. ஆக அந்த முதலிரவின் அணைப்பு.. சந்தோஷத்தில் நீயும் என் அன்பை உணர்ந்திடுவேன்னு நம்பினேன். அதிரடியான முடிவுகளை எடுத்து பிஸினஸில் வெற்றி பெற்ற நான் - வாழ்க்கையிலும் அப்படியே போகலாம்னு போட்டது தப்புக் கணக்குத்தான்... அதிலும் பரத் ஸீனில் இருந்த தால் ரொம்ப அவசரப்பட்டேன்...''

''அப்பா இறந்த வீட்டிலும் கூட நான் உங்களைக் கவனிக்கலையே?''

''அதுதான் என்னைக் கவிழ்த்தது. என்னைப் பார்க்க, பழகத் துடித்த பல பெண்களின் நடுவே - என்னைக் கவனிக்கவும் கூட செய்யாத நீ! உன் அம்மாவிடமும் நான் அதைச் சொன்னேனே...''

திருமண சமயம் அது பற்றி ஏதோ அம்மா சொல்ல முயன்றது, நவ்யாவின் நினைப்பிற்கு வந்தது. ஆனால் தாய் அதைச் சொல்லியிருந்தாலும் தன் மாமியாரை மாற்ற அதை அவன் சொன்னதாகவே நினைத்திருப்பாள்!

அவன் மனதுள் தான் மாம்பழத்து வண்டாய் புகுந்திருக்க, தன் மனதையும் வண்டாய் பலக் கேள்விகள் குடைந்து தள்ளியிருந்தன.

"என்ன யோசனை?"

இரு கைகளிலும் அவள் முகத்தை ஏந்தியவன் அதை நிமிர்த்தி - ஆர்வமாய் பார்த்தான் - கேள்விக்கான பதிலை அங்கே படித்து விடும் ஆவலில்.

"குரங்கு கதை சொன்னீங்களே...?"

"ம்ம்..."

"அதற்கு பதிலாய் மாம்பழத்து வண்டுன்னு விவரித்திருக்கலாம். வண்டு பழத்திற்குள் எப்படி நுழைந்தது.. உயிரோடு குடைந்தபடி இருந்ததுங்கறது புதிர். அதுபோல..."

"எனக்குள் நீ.. அம்மா என்னைப் பல சமயம் முரட்டு முட்டாள்னுவாங்க. அப்படி உன்னை முரட்டுத்தனமாய் அணுகியதில்..."

"உங்களுக்கு எம்மேல் அத்தனைப் பிரியம்னா.. என் அன்னைக்கு அத்தனை வெறுப்பு காட்டுனீங்க? வலி வந்தப்போ என்னை நீங்க ஒதுக்கினதில் அரண்டுட்டேன்..." அவளது உதடுகள் நடுங்கினாலும் சமாளித்துத் தொடர்ந்தாள்.. "இப்ப வரைக்கும் நீங்க என் முகம் பார்த்து சிரிக்கலை, பேசலை..."

'தொடவுமில்லை' என்பதைச் சொல்ல விடாமல் கூச்சம் அவளைத் தடுத்தது.

"குற்ற உணர்வு நவி... ஸாரி. கில்ட் என்னை மறுபடி மாம்பழத்து வண்டாய் குடைந்ததில், நான் உன்னை பார்க்கவும் கூசினேன். நேசம், பாசம் பற்றிப் பேச எனக்கு அருகதையில்லைன்னு நினைத்தேன்."

"அன்றைய பாராமுகத்தை என்னால் தாங்க முடியாமல் தான் - ஜன்னி போலாயிடுச்சு.. நான் சிரித்ததால்தான் என்னைக் கல்யாணம் செய்ததாய்...



அவளைக் கட்டிக் கொண்டவன் கழுத்து பக்கமாய் முகம் புதைத்துப் பேசினான் -

"அதுவும் உண்மைதானே? உன் பளிங்கான முகம், அந்தச் சிரிப்பு உன் அதிர்ச்சியின் வடிகால் என்பதை எனக்கு உணர்த்தியது - அது போக அங்க்கிளிடமும் அதைப் பற்றி கேட்டேனே? அப்போ பளீரிட்ட உன் தெற்றுப் பல் சிரிப்பு.. ஹா - நான் அதில் விழுந்திட்டேன் நவி."

அவன் கைகள் அவளை இறுக்க, அதே அழுத்தத்துடன் நவ்யாவும் அவனைத் தழுவினாள்!

"என் பிரண்ட் கவிதா சிங்கப்பூர் போயிட்டா வேலைக்காய் - அவளேனும் போனில் நீங்க சொன்னதை எல்லாம் என்னிடம் சொல்லியிருக்கலாம்."

"அதுவும் என் பொய்களில் ஒன்று என்றுதானே நினைச்சிருப்பே. இப்போ எனக்கு ரொம்ப நிம்மதி நவி - ஏன்னா - நீ என்னை நம்பறேங்கறதுக்கு ஆதாரம் இருக்குது..."

சற்று விலகியவளின் கண்கள் கேள்வியுடன் அவனைப் பார்த்தன.

"உன் முதல் தழுவல் - செம ஆதாரம் அதுதானே?" புன்னகைத்தான்.

"குற்ற உணர்வு - அது, இதுங்கறதை நீங்களும் முன்னமே சொல்லியிருந்தால் என்ன? நான் ரொம்ப பயந்து.. ஏங்கிட்டேன் நகுல்."

"உன் உடம்புக்காக நான் பிதற்றுவதாய் நீ நினைச்சுட்டா...? சமயம் சந்தர்ப்பம் இன்னைக்குதான் நேர்ந்தது..."

"நான் உங்களுக்கு கசந்துட்டேனோன்னு பயந்தேன்."

"அதெப்படி கசப்பே? வண்டு குடைந்த மாம்பழம் அதிகம் இனிக்குமாம்...!" என்றவன் சொல்லிச் சிரிக்க, விரிந்த அவன் உதடுகளில் எம்பி, அழுத்தமாய் தன் முதல் முத்தத்தைப் பதித்தாள் நவ்யா!